பொருளியல் நோக்கு
நவம்பர் 1990

# அபிருத்தியின் இயங்கியல்

றொடொல்போ ஸ்டாவென்ஹகன்

அக்மல் ஹுஸைன்

நியூட்டன் குணசிங்க

மிக் மூர்

என். சண்முகரத்தினம்

மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்

நியூட்டன் குணசிங்காவின் இரண்டாவது சிரார்த்த தினம் கடந்த அக்டோபர் 31 ஆம் தேதியன்று அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கையின் முன்னோடி மார்க்சிச ஆய்வாளர்களில் ஒருவரும், சமூகவியலாளராகவும் மகத்தான பணியாற்றியவர்; அரசியல், சமூக துறைகளில் தனித்துவமிக்க சிந்தனைகளை முன்வைத்தவர்; இலங்கையின் புதிய பொருளாதார சிந்தனையின் முன்னோடிகளில் ஒருவர். இவ்விதழில் பிரசுரிக்கப்பட்டுள்ள அவரது பிந்திய கால உரையொன்றின் கட்டுரையாக்கம் இதனை நன்கு நிரூபித்துக் காட்டுகிறது.

"எழுச்சி கண்டு வரும் புதிய யதார்த்த நிலைமை சரியாக கிரகித்துக் கொள்வதை தடுக்கக்கூடிய, பழம் பாணியிலான சிந்தனைப்போக்கொன்று இலங்கையின் இடதுசாரி இயக்கத்தில் காணப்படுகிறது" என்று அவர் எழுதினார். 1970-77 காலகட்ட பொருளாதார கொள்கைகள் சோஷலிச கொள்கைகளோ அல்லது சோஷலிச வழியிலான கொள்கைகளோ அல்ல என்றும் அவை அப்பட்டமான அரச முதலாளித்துவக் கொள்கைகள் என்றும் ஆணித்தரமாக எடுத்துக் கூறிய நியூட்டன், இடதுசாரி இயக்கம் புகழ்ந்து வரவேற்ற கொள்கைகள் மீது தாக்குதல் தொடுத்தார். மேலும், 1977 அளவில் இந்த முறை செயலிழந்து காணப்பட்டதுடன் நெருக்கடியொன்றுக்குள்ளும் சிக்குண்டிருந்தது. வெளிநாட்டுக் கடன், திறந்த பொருளாதாரம், மற்றும் பாசிசத்தின் தோற்றம் என்பன குறித்த அவரது சர்ச்சைக்குரிய கருத்துக்கள் யாவும், அன்டோனியோ கிராம்ஷியைப் போலவே அவரும் "எதிர்காலத்தை நோக்கி பலவந்தமாக தனது முகத்தை திருப்பினார்" என்பதனை நிரூபித்துக் காட்டுகின்றன.

'பொருளியல் நோக்கின்' இந்த இதழ் தற்கால அபிவிருத்திச் சிந்தனையின் தொகுப்பொன்றினை முன் வைக்கிறது. இன்றைய இலங்கையில் வாழும் நாம், எமது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் முயற்சியிலும், புதிய பொருளாதார சிந்தனையொன்றைக் கண்டறியும் முயற்சியிலும் கலாநிதி குணசிங்காவின் பங்களிப்பினை கவனத்தில் எடுத்தே ஆக வேண்டும். அதனால் இந்த இதழினை, (அது விவேகபூர்வமான, நியாயமான, மனிதத்துவம் மிகுந்த புதிய அபிவிருத்திச் சிந்தனையொன்றை உருவாக்கும் அவசியமான பணிக்கு பங்களிப்புச் செய்யும் என்ற நம்பிக்கையில்) ஆய்வறிவாளர், சமூகவியலாளர், மார்க்சிச சித்தாந்தவாதி என்று பல தளங்களிலும் செயற்பட்ட நியூட்டன் குணசிங்காவின் நினைவுக்கு சமர்ப்பணம் செய்கிறோம்.

ரொடோல்போ ஸ்டவன்ஹேகன் தனது கட்டுரையில், குறிப்பாக இலத்தீன் அமெரிக்க கண்டத்தின் அனுபவத்தின் பின்னணியில்; மனித உரிமைகளுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் இடையில் காணப்படும் தொடர்புகளை விளக்குகிறார். ஆனால், இந்த படிப்பினைகள் அனைத்து நாடுகளுக்கும் செல்லுபடியானவை. அபிவிருத்தி, மெய்யான அபிவிருத்தியாக இருக்க வேண்டுமானால் அது ஜனநாயகத்துடன் கைகோர்த்துச் செல்ல வேண்டும். இந்த வகையில், ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க கண்டங்களில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிவிலியன் அரசாங்கங்களை பாதுகாப்பது மிக முக்கியமான ஒரு அம்சமாக இருக்கிறது.

தென்னாசிய அபிவிருத்தியில் சமாதானம் மற்றும் பிராந்திய ஒத்துழைப்பு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அக்மல் ஹுசைன் எடுத்து விளக்குகிறார். நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி கருதுகோள் குறித்து என். சண்முகரத்தினம் எழுதுகிறார். அபிவிருத்தி நிகழ்வுப் போக்குகளை சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார். நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி கருதுகோள்களுக்கான திடமான புறப்பாட்டுப் புள்ளியொன்றை இது வழங்குகிறது என்கிறார் அவர்.

மிக் மூர் இவ்விதழில் எழுதியுள்ள கட்டுரை இலங்கைப் பொருளாதாரத்தின் இயக்கம் குறித்த பயனுள்ள, சுவாரஸ்யமிக்க பல உட்கிடக்கைகளை எடுத்துக்காட்டுகிறது. இது குறித்த பரவலான சில தப்பபிப்பிராயங்களையும் அவர் எடுத்துக்காட்டுகிறார். காணிச் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டிய அவசியத்தையும், புதிய நிலச் சீர்திருத்தமொன்றின் தேவையையும் அவர் விளக்குகிறார்.

சீ. பீ. கருணாரத்ன எழுதியுள்ள கட்டுரை இலங்கையிலும் உலகிலும் வளர்ச்சி மாதிரிகளை விளக்குகிறது. டப். டீ. எஸ். வைத்தியரத்ன 1991ஆம் வருடத்துக்கான வரவு செலவுத்திட்டம் குறித்த சில பின்னணித் தகவல்களைத் தருகிறார்.

சென்ற இதழில் இடம்பெற்ற "வளைகுடா நெருக்கடியும் இலங்கையின் பொருளாதாரமும்" என்ற கட்டுரையின் மீதிப்பகுதி இவ்விதழில் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையின் தெங்குக் கைத்தொழில் அபிவிருத்தி குறித்து கலாநிதி டீ. வி. வியனகே எழுதியுள்ளார்.

சி. ஜ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர் 16 இதழ் 8 நவம்பர் 1990

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## உள்ளே

டி. வி. லியனகே 24 இலங்கையின் தெங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

டப். ஜீ. எஸ். வைத்தியநாத 28 வரவு செலவுத்திட்டம் 1991 - சில பின்னணி தகவல்கள்

### விசேஷ அறிக்கை
### அபிவிருத்தியின் இயங்கியல்

நியூட்டன் குணசிங்க 3 இலங்கையின் முதலாளித்துவ அபிவிருத்தி கால கட்டங்கள்

ரொடொல்போ ஸ்டவென்ஹகன் 6 இலத்தீன் அமெரிக்காவில் மனித உரிமைகள் ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி

மிக் மூர் 10 இலங்கையின் முதலாளித்துவம் : சீர் திருத்தத்துக்கும் சீரமைப்புக்குமான தெரிவுகள்

என். சண்முகரத்தினம் 14 நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி - கருதுகோள் ரீதியான ஒரு கண்ணோட்டம்

அக்மல் ஹுஸைன் 21 சமாதானம், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி: தென்னாசியா எதிர்நோக்கும் சவால்

ஆரிய அபேசிங்க 30 வளைகுடா நெருக்கடியும் இலங்கையின் பொருளாதாரமும்

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத் தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டிருப்பதால் அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அன்றி அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பவையாகா. இத்தகைய கட்டுரைகளும் தரவுகளும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனைச் சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

ரீ. பீ. கருணாரத்ன எழுதிய ''வளர்ச்சி மாதிரிகள்: இலங்கையும் உலகமும்'' என்ற கட்டுரை அடுத்த இதழில் இடம் பெறும்.

வடிவமைப்பு, தயாரிப்பு மேற்பார்வை:
டப். ஜீ. எஸ். வைத்தியநாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியும் மக்களும்

ஐக்கிய அமெரிக்காவில் மந்தமொன்றின் பெரு நிழல் மீண்டும் ஒரு முறை வியாபித்து வருகிறது. வளைகுடாவில் யுத்தமேகங்கள் சூழ்ந்து வருகின்றன. ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க கண்டங்களைச் சேர்ந்த வறிய வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் இந்த இரட்டை அவலம் பேரழிவினை எடுத்து வர முடியும்.

நிலைமை ஏற்கனவே மிக மோசமாகிவிட்டது. பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, கடன் சுமை என்பன வளர்ச்சி குன்றிய நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளாக மாறிவிட்டன. புள்ளி விபரங்கள் கலக்கமூட்டுகின்றன. இந்நாடுகளில் வாழும் பொருளாதார செயலூக்கமுள்ள மக்களில் சுமார் 60 சத வீதத்தினர் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அல்லது கீழுழைப்பினால் துன்புற்று வருகின்றனர். சுமார் 75 சதவீதமானோருக்கு போதிய சுகாதாரமும் ஆரோக்கியமோ (குடிநீர், மலசல கூடம்) பாதுகாப்பு முறைகளோ கிடைப்பதில்லை; 95 கோடி மக்கள் இழிந்த வறுமையில் உழன்று வருகின்றனர்; சிசு மரண வீதம் வளர்ச்சியடைந்த உலகினைப் பார்க்க பத்து மடங்கு உயர்வாக இருக்கிறது; எழுத்தறிவற்ற முதியோரின் எண்ணிக்கை 90 கோடி ஆகும்.

குறைவிருத்தி என்ற வியாதி இந்நாடுகளை பெருவாக அழித்து வருகிறது. இது வரையில், நிவாரணம் காண முடியாத ஒரு வியாதி போல அது தென்படுகிறது. இந்நாடுகளின் பல்லாண்டு கால அபிவிருத்தி யாகம் இன்னமும் நிறைவு பெறாததாகவே இருந்து வருகிறது.

பல மாதிரிகள், பல சூத்திரங்கள் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. அரச முதலாளித்துவம், அரச சோஷலிசம், ஏற்றுமதி மேம்பாடு, இறக்குமதி பதிலீடு, கெயின்சிய வாதம், நாணயவாதம் என்று பல மாதிரிகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. ஆனால், இவையாவும், "குறைவிருத்தியின் அபிவிருத்தி" யெனும் அதிசயத்தைப் பெருக்குவதற்கே வழிகோலின. இந்நாடுகள் கண்ட ஓரிரு வெற்றி, குறிப்பிட்ட சில கட்டுக்கதைகளையும், மாயைகளையும் அழித்ததையே என்று கூற முடியும். இந்த கசப்பான பரிசோதனைகள் எமக்கு பல படிப்பினைகளைத் தந்துள்ளன. மூடுண்ட பொருளாதார கொள்கைகள், விலைக்கட்டுப்பாடுகள், அனைத்தையுமுள்ளடக்கிய திட்டமிடல், ஒரு சார்பு போன்ற மருந்துகோள்கள் செயற்பட முடியாது என்பதனைக் கண்டறிந்துள்ளோம். 'எல்லாவற்றுக்கும் மேலாக, ஒருவர் மிகத் தெளிவாக இருக்க வேண்டும்' என்று லெனின் கூறினார். இந்த இரண்டு படிப்பினைகள் — அவை எவ்வளவு வேதனையளிப்பனவாக இருந்த போதிலும் — நமக்கு பயனுள்ளவையாக இருக்க முடியும்.

வெற்றிக்கதைகள் இல்லையென்றும் கூற முடியாது. கிழக்காசியாவின் 'நாலுபுலிகள்' என்று அழைக்கப்படும் புதிதாக கைத்தொழில் மயமாக்கி கண்ட நாடுகள் உலகப் பொருளாதாரத்தில் நன்கு செயலாற்றியுள்ளன. இந்நாடுகளிலிருந்து ஏனைய நாடுகள் பெறக்கூடிய பல படிப்பினைகள் உள்ளன. எனினும், நாங்கள் சற்று விழிப்பாகவும் இருப்பது அவசியமாகும். இந்நாடுகளின் வெற்றியில் —குறிப்பாக கொரியா யுத்தத்தின் பின்னணியில்— பூகோள அரசியல் வகித்த பாத்திரத்தை நாம் மறந்துவிட முடியாது. ஆனால் அதைவிட முக்கியமான அம்சம், இந்நாடுகளில் வாழும் மக்களில் பெருந்தொகையானோர் இந்த வெற்றிகளிலிருந்து பலன் பெறவில்லை என்பதுவாகும். இந்த மக்கள் [illegible] உதவுவதற்கோ அவர்களை அபிவிருத்தி நிகழ்வுப் போக்கில் ஒருங்கிணைத்துக் கொள்வதற்கோ முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதேபோன்று, வளர்ச்சியடைந்த நாடுகள் அனைத்திலுமே இத்தகையதொரு நிலைமை காணப்படுகிறது. இந்நாடுகளின் செல்வம் செறிந்த மத்தியில், வறுமை, வீடின்மை, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் பல சமூகத் தீங்குகள் என்று பலவகையான பிரச்சினைகள் காணப்படுகின்றன. இந்த செல்வந்த உலகினைச் சேர்ந்த ஜெரமி [illegible], 10% வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்றுக் கொள்ளக் கூடியது என்று கூறுகிறார். இலட்சக் கணக்கான மக்கள் நாம் வாழும் சமூகத்தில் முழு அளவில் இணையாது, அபிவிருத்தி நிகழ்வுப் போக்குகளிலிருந்து எதுவித பயனையும் பெறாது ஓரம் கட்டப்பட்டுள்ளார்கள் என்பதே இதன் பொருளாகும். தமது மக்களில் ஒரு பிரிவினரை வறியவர்களாகவும், வீடற்றவர்களாகவும் புறமொதுக்கிவிடும் ஒரு சமூகம்—அது எவ்வளவு வளமார்ந்ததாக இருந்த போதிலும்—ஆரோக்கியமான சமூகம் என்று கூற முடியாது. அது நோயுற்ற ஒரு சமூகமாகவே இருக்க முடியும். ஜப்பானின் அண்மைய கலவரங்களும் அதன் கொடிய வேலை நிறுத்தங்களும் இதனையே காட்டுகின்றன.

மக்கள் நலனுக்காகவே அபிவிருத்தி இடம் பெறுதல் வேண்டும். மக்களை பாதிப்படையச் செய்து விட்டு அதனை எய்த முடியாது. பொருளாதார வளர்ச்சி எவ்வளவு முக்கியமானதோ, சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்கும் அது பயனுள்ளதாக இருப்பதும் அத்தனை முக்கியமானதாகும்.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பழைய சித்தாந்தங்களுக்கும், புனைவுகளுக்கும் அப்பால் சென்று, புதிய அபிவிருத்தி தரிசனமொன்றை கண்டறிவதே இன்றைய தேவையாகும். இது யதார்த்த ரீதியான, விவேகமான சமூக நீதியுடன் கூடிய ஓர் அபிவிருத்தியாக இருக்க வேண்டும். இது மட்டுமே வளர்முக நாடுகளுக்கு உதவ முடியும்.

திசரணி குணசேகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலாளித்துவ அபிவிருத்தி காலப்பிரிவுகள் அடிப்படையிலான ஒரு கண்ணோட்டம்

நியூட்டன் குணசிங்க

கடந்த அக்டோபர் 31 ஆந் தேதியன்று, நியூட்டன் குணசிங்கா மறைவின் இரண்டாவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. நியூட்டன் அவரது தலைமுறையின் தலைசிறந்த இடதுசாரி ஆய்வாளர். மேலும், இலங்கையில் உருவாகிய மிகச்சிறந்த மார்க்சிச சமூக விஞ்ஞானி, புத்திஜீவி என்றும் அவரை வர்ணிக்க முடியும்.

இன்று நாங்கள் ஏற்பாடு செய்துள்ள இந்த கலந்துரையாடலின் நோக்கம், இன்றைய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமையை மதிப்பீடு செய்வதும், இத்தகைய அணுகலில், பொருளாதாரம், சமூகம், அரசியல் ஆகிய துறைகளில் நிகழ்ந்து ஏற்பட்டிருக்கும் புதிய மாற்றங்களை கவனத்தில் எடுத்து, உழைக்கும் வர்க்கம் வகிக்க வேண்டியுள்ள பங்கினை அலசி ஆராய்வதுமாகும். இடதுசாரி இயக்கத்தில் ஒரு விதமான பழம்பாணியிலான சிந்தனா முறை நிலவி வருவதாக எனக்குத் தோன்றுகிறது. எழுச்சி கண்டுவரும் புதிய யதார்த்தங்களை சந்தித்து, சமாளிப்பதற்கு இது தடங்கலாக இருக்கிறது. ஆனால், இன்றைய சமூக – பொருளாதார யதார்த்தம் குறித்த, மார்க்சிச - லெனினிய கோட்பாடுகளின் அடிப்படையிலான ஒரு புதிய சிந்தனை எமக்கு அவசியமாகியுள்ளது. ஆகவே, இன்றைய நிலைமைகளுக்கு, நாங்கள் அதனை ஆக்கத்திறனுடன் பிரயோகிக்க வேண்டும். எமது நாட்டின் இடதுசாரி இயக்கமும் உழைக்கும் வர்க்கமும் இன்று எதிர்நோக்கியுள்ள மகத்தான பணி இதுவாகும்.

இங்கு அலச வேண்டிய முதலாவது பிரச்சினை இலங்கையில் அரச முதலாளித்துவத்தின் வளர்ச்சி மற்றும் சர்வதேச முதலாளித்துவத்துடன் அது கொண்டுள்ள உறவுகள் என்பன தொடர்பானதாகும். 1956 தொடக்கம் 1977 வரையில் இந்நாட்டின் பொருளாதாரம் அதிகரித்த அளவில் அரச கட்டுப்பாட்டின் கீழ் வந்து கொண்டிருந்தது. இடதுசாரி இயக்கத்தில் ஒரு பிரிவினர் இந்த நிகழ்வுப் போக்கினை சோஷலிசம் அல்லது சோஷலிச வழியிலான ஒரு அபிவிருத்தி என்று தப்பர்த்தம் கொள்ளும் ஒரு போக்கு நிலவியது. ஆனால், இறக்குமதி பிரதியீட்டு மாதிரிக்குள் இடம்பெற்ற அரச முதலாளித்துவத்தின் அபிவிருத்தியாகவே இது இருந்தது. பொருளாதார வளர்ச்சி தொடர்பாக, தொடக்க காலத்தில் - குறிப்பாக 1956 – 1965 கால கட்டத்தில் – இப்பரீட்சார்த்தம் ஓரளவுக்கு வெற்றியளிப்பதாக இருந்தது. இக்காலப்பிரிவில் அரச துறை, கைத்தொழில் அடித்தளமொன்றை உருவாக்கிக் கொண்டிருந்தது. எனினும், 1960 களின் நடுப்பகுதி தொடக்கம் இந்த வளர்ச்சி மந்தமடையத் தொடங்கியது. அரச முதலாளித்துவத்தில் காணப்பட்ட உள் முரண்பாடுகளே இதற்கான காரணமாகும். 1970 களின் நடுப்பகுதியளவில் இந்த அரச முதலாளித்துவ அமைப்பு முற்றிலும் நெருக்கடி சூழ்ந்த நிலைமையொன்றுக்குள் சிக்குண்டிருந்தது.

1977 ல் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட திறந்த பொருளாதார கொள்கை உண்மையிலேயே யூ.என்.பி. யுடன் தொடர்பான ஒன்றாகும்; யூ.என்.பி. யே அதனை துவக்கி, அமுலில் விட்டது. ஆனால், திறந்த பொருளாதாரமொன்று வருவதற்கான அறிகுறிகள் 1975 அளவிலேயே தென்படத் தொடங்கியிருந்தன என்பதனை நாங்கள் மறந்து விடக்கூடாது. உதாரணமாக, சுதந்திர வர்த்தக வலயம் தொடர்பான யோசனைகள் (அக்காலத்தில் அமுலில் இல்லாதிருந்த போதிலும்) அமைச்சரவை முன் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதனால், கடுமையான மார்க்சிச பகுப்பாய்வொன்றில், 1956, 1965-1970 (அதாவது இக்காலப் பிரிவில் யூ.என்.பி. அரசாங்கம் அதிகாரத்தில் இருந்தது என்ற ஒரே காரணத்துக்காக) என்று வெறுமனே எல்லைக்கோடுகளை மட்டும் நிர்ணயித்துக்கொண்டால் போதாது. இது அர்த்த புஷ்டியான காலகட்ட நிர்ணயமாக இருக்க முடியாது. ஏனென்றால், 1965 - 1970 கால யூ.என்.பி. அரசாங்கம், 1956-1965 காலத்தில் அதிகார பூர்வமாக பின்பற்றப்பட்ட பொருளாதார கொள்கைகளையே அடிப்படையில் பின்பற்றி வந்தது. நான் சொல்லவருவது என்னவென்றால், 1975 அளவில் ஸ்ரீ.ல.சு. கட்சிக்குள் திறந்த பொருளாதார கொள்கையின் அம்சங்கள் வெளித்தோன்ற ஆரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரித்திருந்தன என்பதைத்தான். பல்வேறு அரசியல் நெருக்குதல்கள் காரணமாக அதனை அப்பொழுது முழு அளவில் அமுல் செய்ய முடியவில்லை.

## வளர்ச்சி குன்றிய முதலாளித்துவ பொருளாதாரம்

1956 தொடக்கம் 1977 வரையான காலகட்டமும், அதேபோல 1977 இல் இருந்து இன்று வரையான (1987) காலகட்டமும் குறிப்பிட்ட சில தொடர்ச்சிகளைக் கொண்டுள்ளன என்பதனை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். தொடர்புறுத்த நிலைகள் ஆழமாகவே இருந்த போதிலும் தொடர்ச்சி நிலை நிலவியமையை நாங்கள் வலியுறுத்திக் கூற வேண்டும். இதனை ஓர் இயங்கியல் வழியில் பகுப்பாய்வு செய்தல் அவசியமானதும். இக்காலகட்டம் முழுவதிலும் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி குன்றிய முதலாளித்துவ பொருளாதாரமொன்றாக தொடர்ந்தும் இருந்து வந்தது. இது முன்னர் 1900-1917 காலத்தில் நிலவிய பின்தங்கிய முதலாளித்துவ பொருளாதாரத்தில் இருந்து மாறுபட்டதாகும்.

பின்தங்கிய முதலாளித்துவ பொருளாதாரம் என்பது, ஒரு பொருளாதாரத்தில் முதலாளித்துவம் மேலோங்கும் என்று. முன்னேற்றம் சென்ற போதிலும், பெரிய சாதனைகளை வெற்றி கொள்ளமுடியாமையை குறிக்கிறது. அப்பொருளாதாரம் பின்தங்கியதாக இருந்த போதிலும் அது அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறது. அதே வேளையில், வளர்ச்சி குன்றிய உலகின் பல நாடுகளில், வளர்ச்சி குன்றிய முதலாளித்துவத்தையே நாம் கொண்டுள்ளோம். இது பல அம்சங்களிலும் பின்தங்கிய முதலாளித்துவ பொருளாதாரத்திலிருந்து வேறுபட்டதாகும்.

ஆரம்பத்தில் காலனித்துவத்தினால் விதிக்கப்பட்ட இப்பொழுது நவ காலனித்துவத்தினால் விதிக்கப்படும் உருச்சிதைவடைந்த அபிவிருத்தி முறையொன்றையே நாங்கள் கொண்டுள்ளோம். அபிவிருத்தி செய்வதற்குப் பதிலாக, எம்மை வளர்ச்சி குன்றச் செய்யும் ஒரு நிலைமைக்கே நாம் ஆளாகியுள்ளோம். அபிவிருத்தி குன்றச் செய்யும் ஒரு நிகழ்வுப்போக்கு எம்மை அலைக்கழித்து வருகிறது. இது 1956 தொடக்கம் (1956 ஐ ஒரு தொடக்கப்புள்ளியாக நாம் எடுத்துள்ளோம்; இதற்கு முன்னரும் இந்நிலை காணப்பட்டது) இன்று வரையான முழுகால கட்டத்துக்கும் பொருந்தும்.

## உள் முரண்பாடுகள்

நாம் 1956 தொடக்கம் 1977 வரையில் பின்பற்றி வந்த இறக்குமதி பிரதியீட்டு மாதிரியின் உள் முரண்பாடுகள், வளர்ச்சி வீதத்துக்கு சில தடங்கல்களை உருவாக்கியுள்ளன. பொருளாதாரம் செயலூக்கத்தை இழந்து, தேக்கமடையத் தொடங்கியது. முதலாளித்துவப் பொருளாதாரம் சந்தை விஸ்தரிப்புடன் தொடர்புபட்டதாகும். ஆனால், 1970-1977 காலத்தில் சந்தையை ஒழுங்கமைப்பதில் அரசு பல்வேறு வழிகளிலும் தலையிட்டு வந்தது. உதாரணமாக, புகழ்பெற்ற "அதிக காலம் காத்திருக்கை" முதலாளித்துவ அமைப்புக்குள் எவ்விதம் விளக்க முடியும்? எம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் இவை. எனவே, அரச முதலாளித்துவம் உருவாக்கிய முரண்பாடுகள் காரணமாக, 1977 அளவில் பொருளாதாரம் கடும் மந்தம் மற்றும் வளர்ச்சியற்ற நிலைமைக்குள் தள்ளப்பட்டது.

பொருளாதாரம் 1977 ல் திறந்து விடப்பட்டமை இந்த நிலைமையைப் போக்கியது. இது ஒரு வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் என்பதையும், முழுக்கால கட்டத்துக்கும் இது எவ்வாறு பொருந்துகின்றது என்பதையும் மீண்டும் ஒரு முறை எடுத்துக்கூற விரும்புகிறேன். ஆனால், அரச முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்பட்டிருந்த மந்தநிலை 1977-1983 காலப்பகுதியில் ஓரளவுக்கு வெற்றி கொள்ளப்பட்டது. வேலையற்றோர் வீதம் கணிசமான அளவுக்கு வீழ்ச்சியடைந்து, திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப வருடங்களில் பணவீக்கப் பெருக்கம் காணப்பட்டது. ஆனால், 1982-1988 அளவில் இது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தொழில் வாய்ப்புக்கள் பெருகின. திறந்த பொருளாதார கொள்கைகளின் அறிமுகத்துடன் பொருளாதாரத்துக்குள் ஓர் உந்துவிசை புகுத்தப்பட்டது. மகாவலித் திட்டம் போன்றவற்றால் வெளிநாட்டு நிதிகள் பொருளாதாரத்துக்குள் பாய்ச்சப்பட்டன. இவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இணைப்புக்கள், எதிர்பார்க்கப்பட்ட அளவுகளில் கட்டியெழுப்பப்படவில்லை என்பது உண்மைதான். மேலும், உதவி வழங்குபவர்களின் பேச்சுவார்த்தைகள் தமது ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பது போன்ற சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்தன. எனினும், ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை நாங்கள் குறைவாக மதிப்பிட்டுவிட முடியாது. உதாரணமாக, மகாவலித் திட்டத்தில் அதிகளவில் நுகரப்பட்ட ஒரு பொருள் சீமெந்தாகும். நாங்கள் பல்பர் பீட்ட நட்டால் நிறுவனத்தை நம்பியிருந்தமையால் எமக்குத் தேவையாக இருந்த சீமெந்தில் 90%ஐ அவர்கள் இறக்குமதி செய்தார்கள். இதனால், உள்நாட்டிலிருந்தும் கைத்தொழில் அமைப்பான இணைப்புத் தாக்கங்களைப் பெற முடியாது போய்விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அதே வேளையில், பலவகையோ அல்லது வேறோ இறக்குமதி செய்யப்படவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ளல் வேண்டும். ஆகவே, ஒரு அளவுக்கு சில இணைப்புகள் உருவாக்கப்பட்டு, பொருளாதாரத்துக்குள் அவை ஒரளவுக்கு இரக்கங்களை எடுத்து வந்துள்ளன. எனவே, 1956 தொடக்கம் 1977 வரையில், அரசினால் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் கீழ் மயது பொன்னான நாட்களை நாம் கழித்தோம் என்றும், 1977 ன் பின்னர் அனைத்தும் வீழ்ச்சியடைந்துவிட்டன என்றும் பொதுவாக கருதப்படும் பாரம்பரிய இடதுசாரி சிந்தனையில் தவறுக்கு நாங்கள் இரையாக கூடாது. அது வெறுமனே மக்களைக் கவர்வதற்கான சுலோக சிந்தனையாகும். திட்டவட்டமான மார்க்சிச சிந்தனையல்ல.

## அபாயக் குறிகள்

1983 அளவில் திறந்த பொருளாதார கொள்கையின் முரண்பாடுகள் வெளித்தோன்றத் தொடங்கின. இது, அடிப்படையில் மேற்கில் இடம் பெற்று வந்த தொடர்ச்சியான, நீண்டகால பின்னடைவுடன் தொடர்புபட்டதாக இருந்தது. ஆனால், 1983ன் இனக் கலவரங்களுடனும் இது தொடர்புபட்டிருந்தது. அதன் பின்னர் பொருளாதாரத்தில் ஒரு புது வகையிலான பின்னடைவு தோன்றியது. ஆகவே, இந்த வகையில் தொகுதியாக 1977-1983 காலத்தில் நிகழ்ந்தவை என்ன என்பதை நான் அழுத்தம் திருத்தமாக கூற விரும்புகிறேன். இக்காலத்தில் பொருளாதாரம் ஒரளவுக்கு இயக்க விசையொன்றைக் காட்டியது. ஆனால், 1983க்கு பிற்பட்ட காலத்தில் - அதாவது இன்றைய காலகட்டத்தில் - இலங்கையின் முதலாளித்துவ பொருளாதாரம் மூன்று முக்கிய அபாய அறிவிப்புக்களைப் பெற்றிருக்கிறது. வேலையின்மைத் திண்டாட்டம், குறிப்பாக 1977-1983 காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்து வந்த போதிலும், இப்பொழுது அது மீண்டும் பெருகி வருகிறது என்பதே இதில் முதலாவதாகும். இது மிக முக்கியமான ஒரு அடிப்படைப் பிரச்சினை. பணவீக்கம் 1984 ல் பூஜ்ய விகிதத்தில் இருந்தது என மத்திய வங்கி தெரிவித்தது. இது சரியல்ல. இந்தாண்டிலும் பணவீக்கம் 5 சதவிகிதத்துக்கும் 9 சதவிகிதத்துக்கும் இடையில் இருந்திருக்க முடியும். இது நல்லதே. ஆனால், 1985 அளவில் பணவீக்கத்தாக்கம் பெருகத் தொடங்கியது. இந்த ஆண்டிலும் அடுத்த ஆண்டிலும் இது 20% வரையில் உயர முடியும் என்பதே எனது கருத்தாகும். இதுவே இரண்டாவது அபாயக் குறியாகும். வெளிநாட்டு உதவியிலும், கடன்தீர்ப்பு உதவி என்பவற்றிலும் அதிகரித்த அளவில் தங்கியிருப்பது மூன்றாவது அபாயக் குறியாகும். கடன் சேவை வீதம் ஏற்கனவே 30%ஐ எட்டியிருக்கிறது. இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் இதனை 20 சதவிகிதத்துக்குள் வைத்துக்கொண்டால், பொருளாதாரம் நல்ல முறையில் நிலவுகின்றது என்று கூறலாம். இப்பிரச்சினைகளை பாரம்பரிய இடதுசாரிகள் நோக்கும் விதத்தில் நாம் நோக்க வேண்டியதில்லை என்பதனை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். கடன் பிரச்சினைகளையும் நாங்கள் யதார்த்தமாக நோக்க வேண்டும். அந்த மட்டங்களில் பேசியது போல இப்பொழுதும் பேசக்கூடாது. (நானும் பல சந்தர்ப்பங்களில் இப்படிப் பேசியிருக்கிறேன்) "எங்களை பட்டினி போடாதே; எங்கள் தலைமுறையை காட்டிக் கொடுக்காதே; எங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரையும் அடகு வைத்தே இவையெல்லாம் செய்யப்படுகின்றன." இந்த நோக்கு வெறுமனே மக்களைக் கவர்வதனை அடிப்படையாகக் கொண்டதாகும். நாங்கள் யதார்த்த நிலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் கடன் சேவை விகிதத்தை, சமாளிக்கக் கூடிய விகிதத்தில் வைத்திருக்க முயல வேண்டும்.

இந்தப் புதிய நெருக்கடிகளுக்கும், தோன்றி வரும் புதிய சூழ்நிலைகளுக்கும் உழைக்கும் வர்க்கம் எவ்வாறு பதிலளிக்கப் போகிறது என்பதனை இந்தப் பின்னணியிலேயே நாம் நோக்க வேண்டும். இனப்பிரச்சினை தீவிரமடைந்து, அரசின் இராணுவமயமாக்கல் இடம் பெற்று வருவதனால் இராணுவச் செலவுகள் வானளாவ உயர்ந்து வருகின்றன; இது இறுதியில் இலங்கை அரசின் குணாம்சத்தை மாற்றிவிடும் என்று எண்ணுகிறேன். ஏனைய மூன்றாம் மண்டல நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கை அரசு, இராணுவப் பெருமளவுக்கு அரசு கட்டுப்படுத்தும் ஒரு சில அரசுகளில் ஒன்றாக இருக்கிறது. இந்நிலைமை 1948 தொடக்கம் 1980 வரையில் காணப்பட்டது. அது இலங்கை அரசுக்கு சிறப்புக் குணாம்சமொன்றை வழங்கியிருந்தது. இராணுவச் செலவுகள் மிகக்குறைவாக இருந்ததனால் நலன்புரிச் செலவுகளை தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. (முதலாளித்துவமாக இருந்தாலும் சரி; முற்போக்கு கட்சியாக இருந்தாலும் சரி) அமைந்த அரசாங்கங்களும் இச்செலவுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்தன. ஆனால் இப்பொழுது இராணுவமயமாக்கலின் பெருக்கத்துடன் நலன்புரிச் செலவுகள் வெட்டிக்குறைக்கப்படுகின்றன. இது இந்நாட்டின் அரசின் குணாம்சத்தை மாற்றியமைக்கக் கூடியதாக இருக்கும்.

இராணுவமய ஆதிக்கம் செலுத்தும் ஆட்சியொன்றில் அரசின் குணாம்சம் மாற்றமடைகிறது. உதாரணமாக, மேலோட்டமான ஒரு மட்டத்தில், பாகிஸ்தான் ஒரு பூர்ஷ்வா அரசு; இலங்கை ஒரு பூர்ஷ்வா அரசு என்று நாம்

(27 ம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்தீன் அமெரிக்காவில் மனித உரிமைகள். ஜனநாயகம் மற்றும் அபிவிருத்தி

[illegible]

சொறிதி ரொட்ரிகோஸ் டெல்வெலாஸ் இலத்தீன் அமெரிக்காவின் பிரசித்திபெற்ற ஆய்வாளர்களில் ஒருவர். விவசாயப் பிரச்சினை குறித்து முக்கியமான கட்டுரைகளை எழுதியவர். இப்பொழுது மனித உரிமைகள், இன உணர்வு, மக்கள் போராட்டங்கள் போன்ற பிரச்சினைகளில் கவனம் செலுத்தி வருகிறார். மனித உரிமைகளுக்கான மெக்சிக்கோ கழகத்தின் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார்.

எண்பதுகளில் இலத்தீன் அமெரிக்காவில் பல இராணுவ மற்றும் எதேச்சாதிகார ஆட்சிகள் முடிவுக்கு வந்து, சிவிலியன் அரசாங்கங்கள் (சில நாடுகளில் ஜனநாயக முறையில்) தேர்ந்தெடுக்கப்பட்ட போது உலக பொதுஜன அபிப்பிராயத்தில் ஒரு நிம்மதிப் பெருமூச்சை கேட்கமுடிந்தது. பல வருடங்கள் நடைபெற்று வந்த இராணுவ சர்வாதிகாரங்களுக்குப் பின்னர் ஆர்ஜன்டினா, பிரேசில், சிலி, உருகுவே, பராகுவே, பொலிவியா, கௌதமாலா போன்ற நாடுகளில் சிவிலியன் ஆட்சிகள் உருவாக்கப்பட்டு, பல கட்சி ஜனநாயகத்துக்கும் தேர்தல் முறைகளுக்கும் புத்துயிரூட்டப்பட்டன.

இதுவரையில், இப்போக்கினால் மனித உரிமை பிரச்சினை குறித்து பகிரங்கமாக கவனிக்கப்பட்டு வந்த சர்வதேச சமூகம், நிலைமை மாறிவிட்டதை உணர்ந்து, அதன் கவனத்தை வேறு முக்கியமான பிரச்சினைகளின் பக்கம் திருப்பியது. இலத்தீன் அமெரிக்காவிலும் கூட, கவனம் பொருளாதார நெருக்கடியிலும், வெளிநாட்டுக் கடன் பிரச்சினையிலும் திருப்பப்பட்டது.

எழுபதுகளிலும் எண்பதுகளின் தொடக்கத்திலும் இலத்தீன் அமெரிக்க மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினை முக்கியமான சர்வதேச பிரச்சினைகளில் ஒன்றாக இருந்து வந்தது. பல இராணுவ அரசாங்கங்கள் பாரம்பரிய ஜனநாயக மரபுகளை நாசம் செய்து ஆட்சிக்கு வந்தது மட்டுமன்றி, அவை பின்னர் பாரிய மனித உரிமை துஷ்பிரயோகங்களுக்கும் பொறுப்பாக இருந்தன. உதாரணமாக, ''காணாமற் போனவர்கள்'' என்ற பதத்தை மனித உரிமை அகராதியில் சேர்ப்பதற்கு ஆர்ஜன்டினாவின் இராணுவம் புகழ்பூத்த பங்களிப்பினை நல்கியது. இராணுவ ஆட்சி நடைபெற்ற காலத்தில் இருபதினாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் ''காணாமல் போனார்கள்.'' சிலியில் பினோசெட்டின் சர்வாதிகார ஆட்சி கொலை, சித்திரவதை, தடுத்துவைப்பு, நாடு கடத்தல் என்பன மூலம் தனது பிடியை இறுக்கியது. ஆயிரக்கணக்கான மக்கள் இக்கொடுமைகளுக்கு இரையானார்கள். எல் சல்வடோரில் அரசியல் எதிரிகள் என்று கருதப்பட்டவர்களை ஒழித்துக் கட்டுவதற்கும், மக்களை பயமுறுத்துவதற்கும் அரசின் 'கொலைப்படைகள்' பயன்படுத்தப்பட்டன. மனித உரிமை அமைப்புக்கள் இந்த அட்டூழியங்களை விரிவாக ஆவணப்படுத்தியுள்ளன.

## தேசிய பாதுகாப்பு கோட்பாடுகள்

உரத்து ஒலிக்கப்பட்ட பல சர்வதேச பிரகடனங்கள் மற்றும் மனித உரிமை தொடர்பான சர்வதேச ஆவணங்கள் என்பவற்றுக்கான பரிசோதனைக்களமாக இலத்தீன் அமெரிக்கா மாறியது. ஆனால், இவை வெறும் காகிதத்தில் எழுதப்பட்ட கூற்றுக்களாக மட்டுமே இருந்தன. அதற்கப்பால் இவற்றுக்கு வேறெந்த மரியாதையும் இருக்கவில்லை. இவ்விஷயத்தில் சர்வதேச சமூகம் ஒரு கூட்டுப் பொறுப்பினை நிறைவுசெய்ய வேண்டியிருந்தது. இலத்தீன் அமெரிக்காவிலும் அதற்கு வெளியிலும் வாழ்ந்த மக்கள் இதனையே எதிர்பார்த்தார்கள். அடக்குமுறையுடன் கூடிய சர்வாதிகாரங்களுக்கெதிரான போராட்டங்களில், மக்கள் சர்வதேச மனித உரிமைச் சமூகங்களின் ஆவணங்களைத் தமக்கு ஆதாரமாக பயன்படுத்திக் கொண்டனர். ''காணாமற்போனவர்'' தமது அன்புக்குரியவர்களை திருப்பித் தருமாறு கோரி வாராவாரம் திரண்டு போராடிய ஆர்ஜன்டீனாவின் தாய்மாரை நாம் என்றும் மறந்து விட முடியாது. மனித உரிமைகளை பொருளாதார உதவிக்கான ஒரு நிபந்தனையாக ஏற்றுக்கொண்டு அமெரிக்க காங்கிரஸ் கார்ட்டர் நிர்வாகத்திடம் கோரிக்கொண்டது. ஐரோப்பிய அபிவிருத்தி உதவி முகவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமை மீறல்களை உன்னிப்பாக கவனிக்கத் தொடங்கின. ஐ.நா.வின் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில் மனித உரிமை நிலைமைகளில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

இந்த மனித உரிமை மீறல்கள் மனிதனின் கொடூரத்தினால் அல்லது அரசாங்க, சட்ட மற்றும் அரசியல் நிறுவனங்களின் தோல்வியினால் தோன்றியவை என வெறுமனே கூறுவது தவறாகும். இலத்தீன் அமெரிக்காவில் அறுபதுகளிலும், எழுபதுகளிலும், எண்பதுகளிலும் காணப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் மற்றும் அநீதிகள் காரணமாக அங்கு பரவலாக எழுச்சியடைந்த அரசியல் கொந்தளிப்பின் விளைவாகவே பல இராணுவ அரசாங்கங்கள் தோன்றின. இந்த அநீதிகளும் ஏற்றத்தாழ்வுகளும் இலத்தீன் அமெரிக்க வரலாற்றில் வேரூன்றிப் போனவையாகும். உலகப் போருக்குப் பின்னர் சில நாடுகளில் தோன்றிய அதிக பொருளாதார வளர்ச்சி பல திரிபுகளை ஏற்படுத்தியது. பாரம்பரிய விவசாயத் துறை மாற்றத்தினையடுத்து பெருந்தொகையான மக்கள் கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்குக் குடிபெயர்ந்தனர். புதிய தொழிலாளர் வர்க்கம் தனது உரிமைகளுக்காக போராடத் தொடங்கியது. நடுத்தர மக்கள் செல்வத்திலும் அரசியல் அதிகாரத்திலும் அதிக பங்கினை கோரி நின்றனர். மாற்றுச் சமூகமொன்று குறித்த புரட்சிகர மாதிரிகள் மாணவர்களிடமும் புத்திஜீவிகளிடமும் செல்வாக்குப் பெறத் தொடங்கின. புதிய அரசியல், சமூக இயக்கங்கள் பல்தேசிய கம்பனிகளாலும் சர்வதேச நிதி நிறுவனங்களாலும் செயற்படுத்தப்பட்டு வந்த "அபிவிருத்தி மாதிரிக்கு" எதிராக எழுந்தன.

ஆளும் வர்க்கங்கள் தமக்கு சிறப்புரிமை நிலை ஆட்டம் காணுவதை உணரத் தொடங்கின. இந்த "சிக்கலை தீர்ப்பதாக" வாக்குறுதியளித்த இராணுவத்திடம் இவர்கள் மகிழ்ச்சியுடன் அதிகாரத்தை ஒப்படைத்தார்கள். ஒழுங்கையும், அரச நிறுவனங்களின் மெத்தனப் போக்கையும் ஒழிப்பதற்காகவும், மேலைநாகரிகத்தின் பாரம்பரிய விழுமியங்களுக்கு களங்கம் கற்பிக்கும் கம்யூனிஸ்டுகளை ஒழித்துக் கட்டுவதற்கும் என இந்த ஆட்சிகள் அமைக்கப்பட்டதாக கூறப்பட்டது. அமெரிக்க தலையீட்டுடன் "தேசிய பாதுகாப்பு" என்ற புதிய சித்தாந்தமொன்று உருவாக்கப்பட்டது. இதன்படி எதிரி வெளியிலிருந்து வரவில்லை என்றும், உள்நாட்டிலேயே எமக்குள்ளேயே "அந்நிய, தேச விரோத" சித்தாந்தங்களை கொண்டு நடமாடி வருவதாகவும் கூறப்பட்டது. ஆகவே, தனிப்பட்ட ஜெனரல் ஒருவரின் பதவி ஆசையை காரணமாக இப்பிராந்தியத்தில் இராணுவ ஆட்சிகள் தோன்றியதாக கூறிவிட முடியாது. எனவே இன்று கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்று வந்த பாரிய மனித உரிமை மீறல்கள் கவனமாக திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டவையாகவே இருக்கின்றன. அரசியல் மற்றும் பொருளாதார ஒழுங்கினை மீளமைப்புச் செய்வது குறிக்க தனக்குரித்தான கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக இந்த உரிமை மீறல்கள் செய்யப்பட்டன. இது இலத்தீன் அமெரிக்க பரிணி பாரிசமாக இருந்தது.

## ஜனநாயகத்தின் மீட்சி

இலத்தீன் அமெரிக்காவில் கடந்த சில வருடங்களில் ஜனநாயக தேர்தல்களுக்கூடாக சிவிலியன் அரசாங்கங்கள் பதவிக்கு வந்திருப்பது பரவலாக வரவேற்கப்பட்டிருக்கிறது. இப்பிரதேசத்தில் மனித உரிமை நிலைமையை மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியத்தை இது ஏற்படுத்தி வருகிறது. சர்வாதிகாரிகளின் வீழ்ச்சிக்கு பல காரணங்களைக் கூற முடியும்; இதில் முதலாவதும் முக்கியமானதும் மக்களிடமிருந்து எழுந்த நெருக்குதலாகும்; சர்வதேச சூழலின் செல்வாக்கு; உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ இவற்றுக்கு அனுசரணை வழங்கியவர்களுக்கு இவை இனிமேலும் தேவையில்லை என்ற நிலை; ஆதரவாளர்கள் கைவிட்டுச் சென்றமை; கவிழ்க்கப்பட்ட சிவிலியன் அரசாங்கங்களிலும் பார்க்க ஊழல் மலிந்தவையாக இவை மாறியிருந்தமை; சமூக – பொருளாதார நிலைமைகள் சீர்குலைந்து வந்தமை, இராணுவத்தின் அதிகாரமும், கட்டுப்பாட்டு நிலையும் வரவர அருகி வந்தமை.

உண்மையிலேயே சர்வாதிகாரிகளின் வீழ்ச்சி இலத்தீன் அமெரிக்க மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். ஆனால், இன்றைய நிலைமையை உன்னிப்பாக நோக்கும்போது பல சிக்கல்களை அவதானிக்க முடிகிறது. சிவிலியன் அரசாங்கங்களின் ஸ்தாபிதம் மட்டும் ஜனநாயகத்துக்கு உத்தரவாதம் வழங்கிவிட முடியாது. அத்துடன் மனித உரிமை மீறல்கள் இடம்பெறமாட்டாது என்றும் கூற முடியாது. இது தொடர்பாக மற்றும் பல காரணிகள் கவனத்தில் எடுக்கப்படுதல் வேண்டும்.

## இராணுவத்தின் பங்கு

பல நாடுகளில், இராணுவம் நேரடி அரசியல் கட்டுப்பாட்டிலிருந்து ஒதுங்கியுள்ளது என்பது உண்மைதான். ஆனால், அது தனது தன்னாதிக்கத்தைத் தக்க வைத்துக்கொண்டு, பக்கவாட்டில் நின்று சிவிலியன் ஆட்சிகளை அவதானித்து வருகின்றது. தனக்கு உசிதமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலையிடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு தயாராக நிற்கின்றது. சிலியில் ஜனாதிபதி பதவியிலிருந்து இறக்கப்பட்ட பினோசெட் இந்நூற்றாண்டு முடியும் வரையில் தனது இராணுவ தலைமைப் பதவியை தொடர்ந்து வைத்திருப்பதற்கு முடிவு செய்துள்ளமை இதற்கான மிகச் சிறந்த உதாரணமாகும். ஆர்ஜென்டீனா, கௌதமாலா போன்ற நாடுகளிலும் இராணுவ அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன.

நூரன்பேர்க் வழக்குகளை அடிப்படையாக கொண்ட, சர்வதேச மனித உரிமைகள் கோட்பாடுகளில் ஒன்று மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பாக இருப்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதாகும். பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில், மன்னிப்புச் சட்டங்களை பின்பற்றுவதற்கூடாக இக்கோட்பாடு செயலற்றதாக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான தேர்தல்களும் இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிக் கிடப்பதும் மனித உரிமை மீறல்களை நிறுத்திவிடவில்லை. பெயரளவில் மட்டும் ஜனநாயகம் காணப்படும் கொலம்பியா, எல் சல்வடோர், கௌதமாலா, பெரு போன்ற நாடுகளில் பல மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன, மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதில் சிவில் அரசாங்கங்களின் கவனயீனம் பலவீனங்களையே இது சுட்டிக்காட்டுகிறது. உள்நாட்டு போராட்டம், குற்றம், வன்முறை கலாசாரத்தின் தோற்றம் மற்றும் அரச ஸ்தாபனங்களின் சீர்குலைவு ஆகியவற்றின் பின்னணியிலேயே இந்த மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

## புதிய அபிவிருத்தி

பெருந்தொகையான அந்த மீறல்கள் அரச பாதுகாப்பு அமைப்புக்களுடன் தொடர்பட்டவையாக இருக்க முடியும். வலையமைவு அரச நிறுவனங்களுடன் தொடர்புடைய உப இராணுவ பிரிவுகளின் வேலையாக இருக்கக்கூடும். மனித உரிமைகளை பாதுகாப்பதனையும், தண்டனை முறைகளை அமுல் செய்வதனையும் இது பலவீனப்படுத்துகிறது. கவலை தரும் மற்றுமொரு புதிய அபிவிருத்தி அரசசார்பற்ற அமைப்புக்கள் மீது பாரிய மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதாகும். குறிப்பாக, பெருவில் "சீரிய மார்க்கம்" போன்ற இராணுவமிளர்ச்சி அமைப்புக்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மனித உரிமை மீறல்கள் கட்டுப்படுத்த முடியாத, பரவலான ஒரு நிகழ்வுப்போக்காக இப்பொழுது பரவிவருகின்றன. அரசுகளின் இராணுவ பலம் மட்டுமன்றி போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் பாரிய குற்றச்செயல் ஸ்தாபனங்களும் இவற்றில் சம்பந்தப்பட்டுள்ளன. கொலம்பியாவில், விதிவிலக்கான சட்டங்களும் அவசரகால விதிகளும் இப்பொழுது அநேகமாக ஸ்தாபிதமாகி, விட்டதாகவும் இராணுவத்தின் தன்னாதிக்கம் அதிகரித்து வருவதாகவும் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். போதை வஸ்துப் போக்குவரத்தை தடுக்கும் நோக்கில் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் இப்பொழுது ஜனநாயக மதிப்புக்களையும், மனித உரிமைகளையும் அழிப்பதற்கு பரவலாக பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

## இழந்த தசாப்தம்

எண்பதுகளில் இலத்தீன் அமெரிக்க மக்களின் பொருளாதார, சமூக நிலைமைகள் சீர்குலைந்தன. அது ''இழந்த தசாப்தம்'' என்று வர்ணிக்கப்படுகிறது. 1989 ல் இப்பிராந்தியத்தின் தலைக்குரிய வருமானம் தொடர்ந்து இரண்டாவது வருடமாக பத்தாண்டுகளுக்கு முன் இருந்த மட்டத்துக்கு வீழ்ச்சியடைந்தது. பணவீக்கம் 1000 சதவீதம் வரையில் உயர்ந்து சென்றுள்ளது. பாரிய கடன்சுமை பல தேசிய பொருளாதாரங்களை வீழ்ச்சியுறச் செய்துள்ளன. வருமான மற்றும் பிராந்திய ஏற்றத்தாழ்வுகள் பெருகியுள்ளன. கைத்தொழில் நாடுகளை நோக்கிய மூலதன வெளிப்பாய்ச்சல் தொடர்ந்து இடம் பெற்று வருகிறது. வேளாண்மை உற்பத்தியும் வருமானங்களும் வீழ்ச்சியடைந்துள்ளன. இந்த வகையில், 1990 கள், இலத்தீன் அமெரிக்காவைப் பொறுத்த வரையில் வாய்ப்புக்களை இழந்த ஒரு தசாப்தமாகவே இருந்தது.

பொருளாதார செழிப்பின்மை காணப்படும் காலகட்டங்களில் ஜனநாயக ஆட்சிகள் நலிந்தவையாகவும், பொருளாதாரத்தில் தேக்கமும் மந்தமும் ஏற்படும் போது அவை பாதிக்கப்படுவனவாகவும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த விதி உண்மையாக இருந்தால், இலத்தீன் அமெரிக்கா ஒரு விதிவிலக்காக இருக்க முடியும், தசாப்தகாலம் அன்று நீடித்த பாரிய பொருளாதார நெருக்கடி இடம்பெற்று வந்த நிலையிலேயே இராணுவ ஆட்சிகள் வீழ்ச்சியடைந்தன. ஐரோப்பா சார்பு ரீதியான பொருளாதார செழிப்பு நிலைமைகளின் கீழ் பல சர்வாதிகாரங்களை கண்டிருக்கிறது.

## கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகங்கள்

பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பொதுமக்களின் பெரும்பான்மையோர் அரசியல் வாழ்க்கையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர். வாக்குச் சாவடிகள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதில்லை. பனாமா மீதான அமெரிக்க இராணுவ தலையீடு ஜனநாயகத்தையல்ல ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் அழிவினையே எடுத்துவந்தது. மெக்ஸிகோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற முறைசார் ஜனநாயக நாடுகளிலும் கூட ஏதேச்சாதிகார அரசியலின் இடத்தில் இன்னமும் ஜனநாயக கலாசாரம் இடம்பெறவில்லை. அரசியல் கருத்து மாறுபாடு கொண்டவர்களும், எதிர்க்கட்சிக்காரர்களும் அச்சுறுத்தப்படுகின்றனர். இத்தகைய நிலைமைகளின் கீழ் சிவில் உரிமைகளையோ அரசியல் உரிமைகளையோ அனுபவிக்க முடியாது. இந்த நாடுகளை வரையறுக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகங்கள் என்று வர்ணிக்க முடியும்.

*சமூகக் கொந்தளிப்பு*

இத்தகைய ஒரு பின்னணியில் சமூக, அரசியல் கொந்தளிப்பு பொங்கியெழுவதில் வியப்பேதுமில்லை. மேலும், பாரம்பரிய அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், அக்கறை குழுக்கள் என்பவற்றிலிருந்து பிரிந்து புது முறையிலான சமூக இயக்கங்கள் எழுச்சியடைந்துள்ளன. அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் பட்டினிக்கும் தள்ளப்பட்ட வறிய மக்களின் நியாயமான அபிலாஷைகளை இந்த இயக்கங்கள் பிரதிபலிக்கின்றன. நகரங்களின் சேரிகளில் வாழ்வோர், குடிபெயர்ந்த குடும்பங்கள், நிலமற்ற கூலித் தொழிலாளிகள் ஒதுக்கப்பட்ட இந்தியர்கள் ஆகிய அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய பரந்த அணி இது. கிராமங்களில், புறநகர்ப்பகுதிகளில் தோன்றி வளரும் அடிமட்ட இயக்கங்கள் இவை. மனித கண்ணியம், சமத்துவம், சுதந்திரம் மற்றும் அடிப்படைத் தேவைகள் என்பவற்றுக்காக இந்த இயக்கங்கள் போராடி வருகின்றன. சுருக்கச் சொல்வதனால் அவை மனித உரிமைகளுக்காக போராடுகின்றன. பல பகுதிகளில் இந்த இயக்கங்கள் கிறிஸ்தவ தேவாலயத்தின் சமூக உணர்வு கொண்ட முற்போக்கு பிரிவினருடன் தொடர்புபட்டவையாக இருக்கின்றன. நிலம், நகர வீடமைப்பு, சமூக சேவைகள், சுற்றுச்சூழல் போன்ற குறிப்பிட்ட சில பிரச்சினைகளை முன் வைத்தும் அவை இவ்வமைப்புக்களில் போராடுகின்றன. வேறு சில புரட்சிகர மாற்றத்துக்கான பதாகைகளை ஏந்தியுள்ளன. ஒரு பிரிவினர் ஆயுதந்தாங்கிய போராட்டத்தை விரும்பித் தேர்ந்துள்ளனர். கொலம்பியா, பெரு, கௌதமாலா, எல்சல்வடோர் ஆகிய நாடுகளின் அரசியல் களத்தில் ஆயுதந்தாங்கிய உள்நாட்டுப் போராட்டம் ஒரு நிரந்தர அம்சமாக இருந்து வருகிறது. இதில் வெளியார் தலையீடும் முக்கிய பங்கினை வகித்துள்ளது.

நானூறாண்டுக்கும் மேற்பட்ட வெவ்வேறு குழுக்களைச் சேர்ந்த 3 கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் பாரபட்சத்துக்கும், நட்டத்துக்கும், பொருளாதார சுரண்டலுக்கும், மிக இழிந்த உரிமை மீறல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த அட்டூழியங்களும் இனப்படுகொலைகளும் காலனியாட்சி காலத்திலிருந்தே தொடர்ந்து வந்துள்ளன. பல நூற்றாண்டு காலமாக பொருளாதார, கலாசார ஆக்கிரமிப்பினை அவர்கள் உறுதியாக நின்று எதிர்த்து வந்திருக்கின்றனர். அமேசன் வடிநிலத்திலும் சரி மத்திய அமெரிக்காவிலும் சரி, அந்தீஸ் சமவெளிகளிலும் சரி, புதிய அபிவிருத்திக் கொள்கைகளால் அவர்கள் மிகக்கொடுமையான முறையில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த மக்களின் வாழ்வாதாரங்கள் மீது நவீன அபிவிருத்தி ஆக்கிரமிப்புச் செய்ததனையடுத்து இவர்கள் தமது பாரம்பரிய நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். வேலையற்ற நகர சேரிவாசிகளாகவும், அலைந்து வேலை தேடுபவர்களாகவும், (அலைப்படுத்தப்பட்ட) குடிபெயர்ந்த தொழிலாளிகளாகவும் (எல்லாவற்றுக்கும் மேலாக பொருளாதார அகதிகளாகவும்) இவர்கள் நகரச் சேரிகளில் வீழ்ந்துள்ளனர். ஒருபோதும் அறியாத இந்த அப்பாவிகள் சில்லறை போர்களுக்கும் எதிர்க்கிளர்ச்சி நடவடிக்கைகளுக்கும் பெருமளவில் இரையாகியுள்ளனர். அவர்களது பாரம்பரிய பயிர்ச் செய்கைக்கோ நல்லவிலை கிடைக்கும் போது விதி அவர்களுக்கு எதிராகவே இருக்கிறது. போதைவஸ்துக் கடத்தல்காரர்களாக அவர்கள் மாறுகிறார்கள். அரசாங்க கொள்கைகளும், கவர்ச்சிகர சுற்றுலாத்துறையும், பல்தேசிய கூட்டுத்தாபனங்களும் இவர்களின் பாரம்பரியங்களையும் கலாசாரங்களையும் அழித்தொழித்துள்ளன.

கடந்த பதினைந்து, இருபது வருடங்களாக இம்மக்கள் குழுக்களின் இயக்கங்கள் மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் முன்னணியில் இருந்து வந்துள்ளன. பல்லினச் சமூகமொன்றில் தமது கூட்டு இன உரிமைகளுக்காகவும், தமது மொழிகளுக்கும் கலாசாரங்களுக்கும் அங்கீகாரம் கோரியும் இப்போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, தனித்துவமிக்க தமது உயிரினச் சூழல் அமைப்பினைப் பாதுகாத்துக் கொள்வதில் அவர்கள் கவனம் காட்டுகிறார்கள். இந்த மக்கள் பிரிவினரின் உரிமைகள் இன்று இலத்தீன் அமெரிக்காவிலும் ஒரு விவாதப் பொருளாகியிருக்கிறது. இவை ஐ.நா. மற்றும் பல பல்தேசிய ஸ்தாபனங்களுக்குள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. 1992 ல் "அமெரிக்க கண்டுபிடிப்பின்" ஐந்தாவது நூற்றாண்டு கொண்டாட்டங்கள் இடம்பெறவிருக்கும் ஒரு சூழ்நிலையில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது மிகப் பொருத்தமானதே. ஏனெனில் இந்நிகழ்வே இம்மக்களின் அடிமை வாழ்க்கையின் தொடக்கத்தை குறிப்பதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் முதலாளித்துவம்: சீர்திருத்தத்துக்கும் சீரமைப்புக்குமான வாய்ப்புக்கள்

மிக் மூர்

சசெக்ஸில் அமைந்துள்ள அபிவிருத்தி ஆய்வுகள் நிறுவனத்தில், அபிவிருத்தியின் நிறுவன மற்றும் அரசியல் அம்சங்கள் குறித்து மிக் மூர் ஆய்வு செய்து வருகிறார். தென்னாசியா - சிறப்பாக இலங்கை - குறித்து அவர் ஆராய்ச்சி ஈடுபாடு காட்டி வருகிறார். கொழும்பில் அமைந்துள்ள கமநல ஆய்வு, பயிற்சி நிறுவனத்தில் ஆலோசகராக (1977 - 1980) பணிபுரிந்துள்ள அவர் இலங்கை குறித்த பல ஆய்வறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

இன்றைய சூழ்நிலையில், சார்பு ரீதியாக திறந்த பொருளாதாரம் பல பாரிய அனுகூலங்களை எடுத்து வரக்கூடியதாகும். ஏராளமான வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்ளல், வெளிநாட்டுச் சந்தைகளையும், தொழில்நுட்பங்களையும் அடைதல் போன்ற பல வழிகளில் இந்த அனுகூலங்கள் கிட்டுகின்றன. எனவே இலங்கை அதன் பொருளாதாரத்தை மூடிவிடுவது புத்திசாலித்தனமானதாக இருக்க மாட்டாது. உலக சந்தையுடன் ஒருங்கிணைவதன் மூலம் பயனடையக்கூடிய வகையைச் சேர்ந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். உடனடியாக சந்தைகளிடக் கூடிய மூலப்பொருள் வகைகளையோ, கைத்தொழில் உற்பத்திகளையோ இலங்கை கொண்டிருக்கவில்லை. குறிப்பாக திறந்த பொருளாதார முறை பரவலாக பிரயோகிக்கப்பட்டு வரும் இன்றைய சர்வதேச சூழ்நிலையில், இந்நாடு அதில் பங்கு பற்றாதிருப்பதோ அல்லது தன்னை தனிமைப்படுத்திக் கொள்வதோ சாத்தியமில்லை. ஆனால், வெளிநாட்டுச் செலாவணியைப் பொறுத்த வரையில் நாடு பல இடர்களை எதிர்நோக்கியுள்ளது. இறக்குமதிகளுக்கு தொடர்ந்து பணம் செலுத்த முடியாதிருப்பதனால், பொருளாதாரத்தை மூடுதல் தவிர்க்க முடியாததாக மாறும் ஒரு நிர்ப்பந்த நிலைக்கு நாடு தள்ளப்படக் கூடும். இலங்கைக்குள்ள மிகப் பெரிய நம்பிக்கை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற அமைப்புக்கள் திறந்த பொருளாதாரத்தின் வெற்றிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன என்பதாகும். ஆகவே, இலங்கையின் நிலைமை மிக மோசமாக மாறும் சந்தர்ப்பத்தில் சென்மதி நிலுவைக்கு உதவி வழங்க அவை முன்வரக்கூடும். ஏதாவதொரு காரணத்துக்காக அவை அப்படிச் செய்யத் தவறினால், நிச்சயமாக பாரதூரமான பிரச்சினைகள் உருவாக முடியும்.

பொருளாதாரத்தை மூடி விடுவதனால் அதாவது மூடுண்ட பொருளாதார கொள்கைகளை பின்பற்றுவதனால் ஏற்படக் கூடிய முக்கியமான பிரச்சினைகளில் ஒன்று மூலதன வெளிப் பாய்ச்சலாகும், இதனைத் தடுப்பது மிகக்கடினமானதாக இருக்கும். அத்துடன் மிகப்பெரிய ஆபத்தாகவும் இது இருக்கும். மேலும், மூடுண்ட பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் பொறிமுறைகள் - கட்டுப்பாடுகள், செலாவணிக் கட்டுப்பாடுகள் முதலியன - முன்னர் இருந்ததிலும் பார்க்க இப்பொழுது அதிகளவுக்கு பலவீனமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இந்த அமைப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புவது எளிதான காரியமல்ல. ஏனென்றால் இந்த அமைப்புக்கள் 1960 களிலும் 1970 களிலும் கட்டியெழுப்பப்பட்டபோது, இவை நிலையான அபிவிருத்திக்கு வழிகோலும் என்ற நம்பிக்கையில் பலர் அர்ப்பணிப்புணர்வுடன் செயற்பட்டனர். ஆனால், இன்று நிலைமை மாறியுள்ளது. இன்றைய இலங்கையில், ஒரு சிலரே மூடுண்ட பொருளாதார அமைப்பொன்றுக்கு ஆதரவாக இருப்பது போல் தோன்றுகிறது. அதனால் அதனை செயலில் விடுவதும் கடினமான காரியமாக இருக்கும்.

என்னுடன் உரையாடிய அனைவருமே, அநேகமாகத் திறந்த பொருளாதாரக் கொள்கை ரீதியாக ஆதரிப்பவர்களாக இருந்தார்கள். ஆனால், அது செயற்படுத்தப்படும் முறை குறித்தே பலர் குறை கூறினார்கள், வெளிநாட்டு கடன்கள், மிதமிஞ்சிய பொருள் நுகர்வு மற்றும் சுற்றுலாத் துறையின் சில அம்சங்கள் போன்ற திறந்த பொருளாதாரத்தின் விகாரமான முகத் தோற்றத்துக்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எனினும், வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவித்தல், ஏற்றுமதிகளைப் பெருக்க முயற்சித்தல், வெளிநாடுகளிலிருந்து நுகர்பொருட்களின் இறக்குமதியினை வழங்கல்களை நல்ல முறையில் பேணுதல் போன்றனவே திறந்த பொருளாதாரத்தின் அடிப்படைகளாகும். இந்நடவடிக்கைகளை ஊக்க பல்வேறுபட்ட இறக்குமதி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடமிருந்தும் போது ஆதரவு காணப்படுகிறது. இடதுசாரி மற்றும் மார்க்சிச கட்சிகளைச் சேர்ந்த சிந்தாந்தவாதிகள் எத்தனை பேர் இந்நிலைய கூற்றுக்களை வெளியிடுகிறார்கள் என்று பார்ப்பது சுவாரஸ்யம் மிக்கதாகும்.

விரும்பப்படும் சீர்திருத்தங்களை செயலில் விடுவதற்கு அவசியமான போதிய பலம் வாய்ந்த நிர்வாக அமைப்பொன்று இலங்கையில் காணப்படாததே இன்றுள்ள முக்கிய பிரச்சினையாகும். உதாரணமாக கள்ளக் கடத்தலை தடுப்பதற்கு தாக்கமான கட்டுப்பாட்டு முறைகள் இருந்திருந்தமேயானால், திறந்த பொருளாதாரம் இதைவிட சிறப்பான முறையில் செயற்பட்டிருக்க முடியும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. சமீபத்தில் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், இவை செயற்தாக்கமுள்ளவையாக இருக்கும் என்று உறுதியாக கூற முடியவில்லை. அத்துடன் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதும் தெரியவில்லை. அதேபோல முதலீடுகளை தாக்கமான முறையில் மதிப்பீடு செய்வதும் அவசியமாகும். தொழில் வாய்ப்புக்கள் மற்றும் தொழில்நுட்ப இடமாற்றம் போன்ற விடயங்களில் இலங்கையின் நலன்களுக்கு ஏற்றவிதத்தில் இம்முதலீடுகள் அமைகின்றனவா என்பது கண்டறியப்பட வேண்டும். ஆனால், தற்பொழுது அத்தகைய பணியொன்றை மேற்கொள்ளக்கூடிய எந்தப் பொறிமுறையையும் காண முடியவில்லை. திறந்த பொருளாதாரத்தின் விளைவாக தனியார் துறையில் பணியாற்றுவதற்கு மக்களுக்கு நிறைய ஊக்குவிப்புக்கள் கிடைத்துள்ளன. பொதுத்துறைக்கு, முன்னர் கிடைத்த மரியாதை இப்பொழுது கிடைப்பதில்லை. இதுவும் ஒரு பிரச்சினையாகும்.

## தனியார்மயமாக்கல் தவிர்க்க முடியாதது

இரு காரணங்களினால் தனியார்மயமாக்கல் தவிர்க்க முடியாததாக இருக்கிறது. அரசாங்கம் கடுமையான வருமானநெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதனால் அது பல்வேறு மூலங்களிலிருந்தும் வருமானத்தைத் திரட்ட ஆர்வம் கொண்டுள்ளது. இது முதலாவது காரணமாகும். ஏனென்றால், சொத்துக்களின் விற்பனை இந்நெருக்கடியை கணிசமான அளவுக்கு தணிக்கக் கூடியதாக இருக்கும். இரண்டாவது காரணம், சர்வதேச நிதி நிறுவனங்களுடன் நல்ல உறவுகளைப் பேண வேண்டிய தேவையாகும். அரசியல் காரணங்களால் சமூக நலச் செலவுகளை குறைத்துவிடுவது அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் மிகக்கஷ்டமான காரியமாகும். அதனால் துரிதமான தனியார் மயமாக்கல் நிகழ்ச்சித் திட்டம் முன் வைக்கப்பட்டிருக்கிறது.

தனியார்மயமாக்கலுக்கு யார் பொறுப்பாக இருக்கிறார்கள் என்று தெளிவாக தெரியவில்லை. அத்துடன் சொத்துக்களின் விற்பனை திறந்த சந்தையில் பகிரங்கமான முறையில் இடம்பெறுமா என்பது குறித்தும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாரிய கூட்டுத்தாபனங்கள் வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட வேண்டியிருக்கும் என்பதும் தெளிவாகும். ஏனெனில், அத்தளவுக்கு முதலீடு செய்வதற்குத் தேவையான மூலதனம் இலங்கையர்களிடம் இல்லை. இது சில பிரச்சினைகளை, பொருளியல் ரீதியில் அன்றி அரசியல் ரீதியான பிரச்சினைகளை எடுத்துவரமுடியும். ஏனெனில், இக்கைத்தொழில்களில் பெரும்பாலானவை ஏகபோகங்களாகவே இருக்கும். எனவே தேசிய நலன்கள் பாதுகாக்கப்படவேண்டும் என ஒருவர் விரும்புவது இயல்பானதும்.

உலகம் முப்பது அல்லது நாற்பது வருடங்களுக்கு ஒரு முறை மீள ஒழுங்கு படுத்தப்பட வேண்டும் என்பதில் அடிப்படையில் நான் நம்பிக்கை வைத்துள்ளேன். இலங்கையின் பொதுத்துறை தேக்கமும், வீழ்ச்சியும் சூழ்ந்த நிலையொன்றுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், இன்னும் பத்து அல்லது இருபது வருடங்களில் தனியார் மயமாக்கலின் நட்டங்களை நாங்கள் எதிர்நோக்க மாட்டோம் என்பது இதன் கருத்தல்ல. அப்பொழுது ஒருவேளை எமக்கு அதிகளவான பொது உரித்துமுறை அல்லது தாக்கமான பொறுப்புணர்வு கட்டுப்பாட்டு முறையொன்று தேவைப்படக் கூடும்.

## செலவு குறைந்த கடன்

வைப்புக்களை ஏற்பதும் கடன்களைக் கொடுப்பதுமே வங்கிகளின் பிரதான தொழில் என்று கூறப்படுகிறது. ஆனால் வங்கிகளின் முக்கிய ஈடுபாடு வைப்புக்களை ஏற்பதிலோ அல்லது கடன்களைக் கொடுப்பதிலோ இருக்கவில்லை. மாறாக தனியார் துறைக்கான வியாபார சேவைகளிலேயே வங்கிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. குறிப்பாக இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் கடன் கடிதங்கள் என்பவற்றில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டு வருகிறது. இதனால் முதலீட்டுத் துறையில் அதிக ஆர்வம் காட்ட வங்கிகளால் முடிவதில்லை.

கடன்களைக் கொடுப்பதில் வங்கிகள் மிகக்கண்டிப்பாக இருப்பதாக கூறப்படுகிறது. ஆனால், உண்மை இதற்கு நேர்மாறானதாகும். இலங்கையில் கடன்கள் மிக மலிவாக கிடைக்கின்றன. வட்டி வீதங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. உயர்ந்த அளவில் பணவீக்கம் காணப்படும் நிலையில், கடன்கள் மூலம் வங்கிகள் உழைக்கும் வட்டி வருமானம் மிகக்குறைவாகும். தீவிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களுக்கும் பாரிய முதலீட்டுத் திட்டங்களுக்கும் கடன்களை வழங்குவதில் வங்கிகள் மூன் அதிகளவில் ஆர்வம் காட்டவில்லை என்பதனை இந்த பின்னணியிலிருந்தே விளங்கிக் கொள்ள வேண்டும். இலங்கையின் நீண்டகால முதலீடுகள் பெரும்பாலும் சர்வதேச நிதி நிறுவனங்களிலிருந்தே வருகின்றன.

இதன் மற்றொரு பின்விளைவு வர்த்தகத் துறையில் ஏற்கனவே நன்கு ஸ்தாபிதமாகியிருக்கும் கம்பனிகளுக்கு மட்டும் கடன்களை வழங்குவதற்கு வங்கிகள் உடன்பாடு காட்டுவதாகும். சிறிய வியாபாரங்கள், சிறு வியாபார முயற்சிகள் போன்றவற்றுக்கும், அறிமுகமற்றவர்களுக்கும் கடன்களை வழங்குவதில் வங்கிகள் ஆர்வம் காட்டாதிருப்பது இதன் பக்க விளைவுகளில் ஒன்றாகும். இதனால் பின் சொன்ன பிரிவினருக்கான கடன்களை வழங்குவதில் ஒரு விகிதாசாரமற்ற நிலை காணப்படுகிறது. கடன்கள் செலவு கூடியவை என்பதல்ல இங்குள்ள பிரச்சினை; பெற முடியாதவை என்பதே பிரச்சினையாகும்! கடன் வழங்கலில் வங்கிகள் அதிகளவில் இலாபம் பெறக்கூடியதாக இருந்தால், புதிய முதலீடுகளை கண்டறிவதிலும், அதன் விளைவாக சிறு துறையினருக்கு கடன்களை வழங்குவதிலும் அவை அதிகளவு ஆர்வம் காட்ட முடியும்.

## கட்டுப்படுத்தப்பட்ட தனியார் முதலாளித்துவம்

இலங்கையின் முதலீடுகளை நிதிப்படுத்துவது தொடர்பாக மற்றொரு முக்கிய அம்சம் உண்டு. அநேகமாக முழு முதலீடுகளும் ஒன்றில் கம்பனிகள் உழைக்கும் இலாபங்களைக் கொண்டு நிதிப்படுத்தப்படுகின்றன; அல்லது சர்வதேச நிதி நிறுவனங்களிலிருந்து மானியத்துடன் கூடிய வட்டி வீதங்களில் வரும் நீண்டகால கடன்களைக் கொண்டு நிதிப்படுத்தப்படுகின்றன. பொதுவாக கம்பனிகள் பங்குச் சந்தைக்குச் சென்று தனியார் முதலீட்டாளர்களிடம் முதலீட்டுக்கு மூலதனம் கோருவதில்லை. தனியார் துறை அந்தளவுக்கு முதலாளித்துவம் சார்ந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், பொதுமக்களின் பெரும்பான்மையோருக்குத் திறந்து விடப்படாத, கட்டுப்படுத்தப்பட்ட தனியார் முதலாளித்துவமாக அது இருக்கிறது. பங்கு மூலதனத்தை திரட்டுவதிலும் பார்க்க கடன்களைப் பெற்றுக்கொள்வதிலேயே தனியார் துறை அதிகம் ஆர்வம் காட்டி வருவது இதற்கான ஒரு காரணமாகும். கடன்கள் பங்கு மூலதனத்தை விட மலிவானவை என கம்பனிகள் கருதுகின்றன. ஏனெனில், வட்டிச் செலவுகளை வரியிலிருந்து கழித்துவிட முடியும். ஆனால் பங்கிலாபங்களில் அவ்விதம் செய்ய முடியாது. மேலும், நீண்ட காலக்கடன்கள் உதவித் திட்டங்களின் கீழ் மானியப்படுத்தப்பட்ட வட்டி வீதங்களில் வருகின்றன. மூன்றாவதாக, கடன் தவணை தப்பும் போது சொத்துக்களை கைப்பற்று வங்கிகளுக்கு சிரமமானதாக இருக்கும். ஆனால் பொதுவாக, கம்பனிகள் பிழையான முதலீடு காரணமாக தமது சொத்துக்களை இழந்து விடும் ஆபத்து மிக அரிதாகும்.

மற்றொரு முக்கிய அம்சம், பல்வேறு துறைகளிலும் ஒரே நபர்கள் முதலீடுகளைச் செய்வதைக் காணக்கூடியதாக இருப்பதாகும். ஸ்தாபிதமான ஏகபோகமொன்று இவர்களுக்கிருக்கிறது. குறிப்பான அனுபவம் அல்லது அறிவு என்பவற்றை அடிப்படையாக கொண்டு புதிய நபர்கள் எவரும் முன்னுக்கு வருவதை காண முடியவில்லை. இந்த வகையில், இலங்கையின் தனியார் துறை மூடுண்ட, சலுகை படைத்த ஒரு தனியார் துறையாக இருக்கிறது. இலங்கையின் தனியார் துறையை குறிப்பிட்ட சில குடும்பங்கள் கட்டுப்படுத்தி வருவதாக அப்போது நிதியமைச்சராக இருந்த [illegible] பெரேரா குற்றஞ்சாட்டினார். ஆனால், இக் குற்றச்சாட்டு உண்மையானதல்ல என நினைக்கிறேன். இதற்கு போதிய ஆதாரங்கள் கிடைப்பதாக இல்லை. ஆனால், அவர் சொன்னதில் ஓர் அரையளவு உண்மை இருக்கிறது. இலங்கையின் தனியார் துறை தனிப்பட்ட சில குடும்பங்களினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு போக்கு காணப்படுகிறது. அதாவது, பல சந்தர்ப்பங்களில் ஒரு குறித்த கம்பனி, குறித்த ஒரு குடும்பத்தினால் கட்டுப்படுத்தப்படுவதாக இருக்கிறது. நிதிப்படுத்தும் மூலங்கள் தொடர்பாக நான் ஏற்கனவே குறிப்பிட்டதே இதற்கான காரணமாகும். குடும்பங்களால் கட்டுப்படுத்தப்படும் இக்கம்பனிகள் தமது கடன் தேவைகளுக்கு வங்கிகளிடம் செல்கின்றன. பங்கு மூலதனத்தை திரட்டுவதன் மூலம், வெளிநபர்கள் கம்பனிகளில் கட்டுப்பாட்டதிகாரத்தைப் பெறுவதனை அவை விரும்புவதில்லை.

இதன் மற்றொரு அம்சம் புதல்வர்கள்—அவர்கள் தகுதியும் திறமையும் இல்லாதவர்களாக இருந்த போதிலும் - கம்பனிகளின் நிர்வாகத்துக்கு வருவதாகும். பங்குதாரர்களில் பெரும்பான்மையினர் இலாப நிலையில் அக்கறை காட்டுபவர்களாக இருந்தால், திறமையற்றவர்களை நீக்கிவிட்டு, தகுதியும் திறமையும் வாய்ந்தவர்களை நிர்வாகத்துக்குள் கொண்டு வர விரும்புவார்கள்.

பொருளாதாரத்தினதும் அதே போல தனியார் துறையினதும் நீண்டகால நலன்களை கவனத்தில் எடுத்தால், இதற்கென பல நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமாகும். முதலில், வங்கிக் கடன்கள் மீதான வட்டிக்கு வரி அறவிடுதல் நிறுத்தப்படுதல் வேண்டும். அத்துடன் கம்பனிச்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்படுதல் வேண்டும். கம்பனிகள் பொதுக் கம்பனிகளாக இருந்தாலும் சரி, தனியார் கம்பனிகளாக இருந்தாலும் சரி பொது மக்களுக்கும் அவற்றின் முதலீட்டாளர்களுக்கும் இப்போதுள்ளதைவிட அதிகளவில் தகவல்களை வெளியிடக்கூடிய விதத்தில் இந்த மாற்றங்கள் அமைதல் அவசியமாகும்.

பொருளாதாரத்தின் பிரதான ஏற்றுமதிப் பிரிவான பெருந்தோட்டத்துறை — குறிப்பாக தேயிலைத்துறை — வீழ்ச்சியடைந்துள்ளது. அதற்கு இணையான மாற்று மூலமொன்றைக் காண முடியவில்லை. இதற்கு பல காரணங்களைக் கூறலாம். செலாவணி விகிதக் கொள்கையும் பாதுகாப்புக் கொள்கையும் ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கவில்லை. இதற்கு பல தீர்வுகளுண்டு. ஆனால், தனியார் துறைக்கு அதிகளவில் வரிக்கழிவுகளை வழங்குவது ஒரு தீர்வாகமாட்டாது. இலங்கையின் தனியார் துறை வரிச்சலுகைகளையும், வரி விடுமுறைகளையும் அடிக்கடி கோரி வருவது துரதிர்ஷ்டவசமானதாகும். இந்த தனியார் துறையினர் குறைந்த அளவிலேயே வரி செலுத்துவதாக நான் எண்ணுகிறேன். எனவே, மேலும் மேலும் சலுகைகளை எதிர்பார்ப்பது தவறாகும்.

## மூடுண்ட பொருளாதாரம் தீர்வல்ல

இப்பிரச்சினைகளுக்கான தீர்வு மூடுண்ட பொருளாதார மாதிரியில் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. பொதுத்துறை, மிகத் திறமையான முறையில் தனியார் துறையை நெறிப்படுத்துவதே இதற்கான மாற்று வழி என நான் எண்ணுகிறேன். அதிக தகவல்களை வெளியிடுவது குறித்த சட்டத்திருத்தம் தனியார் துறையை வலுமிக்கதாக மாற்ற முடியும். பொதுத்துறை ஸ்தாபனங்களின் திறமையை விருத்தி செய்வதற்கும், தனியார் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆடைக்கைத்தொழிலை உதாரணமாக காட்டலாம். இக்கைத்தொழில் பெருமளவுக்கு இறக்குமதிகளிலும் ஏற்றுமதிகளிலும் தங்கியிருக்கிறது. அதிகளவிலான அரசாங்க நடவடிக்கைகளை இது வேண்டி நிற்கிறது. ஆனால், அரசாங்கத்துக்கு இது குறித்த சரியான தகவல்கள் கிடைப்பதில்லை. மூலவள ஒதுக்குகள் தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு, ஆடைக் கைத்தொழில் துறையின் நடவடிக்கைகள் கம்பியூட்டர் மயப்படுத்தப்பட வேண்டுமென கைத்தொழில் வட்டாரங்கள் வேண்டுகோள் விடுத்து வந்துள்ளன. ஆனால், இப்பொழுது தனியார் துறை பெருமளவுக்கு இந்த நவீன வசதிகளைக் கொண்டுள்ளது. இச்சூழ்நிலையில், தனியார் துறையில் என்ன நடக்கிறது என்பதனை அரசாங்கத்தினால் சரியாக விளங்கிக் கொள்ள முடியவில்லை.

அடிப்படைப் பிரச்சினை தனியார் மயமாக்கல் என நான் நினைக்கவில்லை. அரசாங்கம் வருமான நெருக்கடியை எதிர்நோக்குவதனாலும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் தேவையினாலும் அது முக்கியம் பெறுகிறது. ஆனால், நீண்டகால பிரச்சினைகளை தனியார் மயமாக்கலால் மட்டும் தீர்த்து வைக்க முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை.

## நிலச் சீர்திருத்தத்துக்கான தேவை

அரச நிலங்களை வறியவர்களுக்கும் நிலமற்றவர்களுக்கும் பகிர்ந்தளிக்கும் இலங்கையின் கொள்கை நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டதாகும். அதை நான் முழுமனதுடன் ஆதரிக்கிறேன். ஆனால் பகிர்ந்தளிப்பதற்கு அதிக நிலம் இருப்பதாக தெரியவில்லை. கிடைக்கக் கூடியதாக இருக்கும் நிலமும் வளமற்றதாகவே இருக்கிறது.

இலங்கையின் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து நிலச் சீர்திருத்தங்கள் குறித்த முழுக் கருத்தும் மறைந்து போய் விட்டது என்பது கவலையூட்டுகின்ற ஒரு விஷயம். இப்பொழுது யாரும் இது குறித்து பேசுவதாக தெரியவில்லை. குறிப்பாக நெல் துறையில் நடுத்தர அளவு காணிகளை மீள்பங்கீடு செய்ய வேண்டிய அவசியம் இருந்து வருவதனால், இந்நிலை துரதிர்ஷ்டவசமானதாகும். நிலத்தை சொந்தமாக வைத்திருக்கும் பல குடும்பங்களுக்கு மாற்று வருமான மூலங்கள் இருப்பதனால் இதற்கு மிகக் குறைந்தளவிலான அரசியல் எதிர்ப்பே இருக்க முடியும்.

தம்பகத்தன்மை குறித்த ஒரு பிரச்சினை இருப்பதாக தெரிகிறது. 1970 களில் எத்தகைய விதத்திலான நிலச் சீர்திருத்தங்கள் இடம்பெற்றன என்பதனை நாங்கள் திரும்பிப் பார்க்க வேண்டும். மொத்தத்தில் அவை விவசாயிகளுக்கு காணிகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களாக இருக்கவில்லை. நிலத்தை தேசியமயமாக்கி, கூட்டுறவுச் சங்கங்களை அல்லது கூட்டுப் பண்ணைகளை உருவாக்கும் திட்டங்களாகவே அவை இருந்தன. அத்தகைய நிலச் சீர்திருத்தம் நடைமுறைச் சாத்தியமானதோ விரும்பத்தக்கதோ அல்ல. தேயிலைத் துறையின் முகாமையை மீண்டும் தனியார் மயப்படுத்துவதற்கும், வேளாண்மையின் ஏனைய துறைகளில் நிலச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கும் அவசியமிருப்பதாக நினைக்கிறேன். இது அரசியல் ரீதியாக காலத்துக்கு உகந்ததாக இருப்பதுடன், பெருமளவு மக்களாதரவினையும் பெறக்கூடியதாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி - ஒரு கோட்பாட்டு ரீதியான கண்ணோட்டம்

என். சண்முகரத்தினம்

நோர்வே வேளாண்மை பல்கலைக்கழகத்தின் இணைப் பேராசிரியராக பணிபுரியும் கலாநிதி சண்முகரத்தினம், அந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள [illegible] வேளாண்மை அபிவிருத்திக்கான நோர்விஜிய நிலையத்தில் முகாமைத்திட்டமிடல், [illegible] மற்றும் அரசியல் பொருளாதாரம் என்பவற்றை போதித்து வருகிறார். கிராமிய மற்றும் விவசாயப் பொருளியல் துறையில் நிபுணரான அவர், அண்மைக்காலத்தில், ஆசிய நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக இயற்கை வளங்கள் முகாமை மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய விவசாயம் என்பன குறித்த பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றை துவக்கி வைப்பதில் ஈடுபாடு காட்டி வந்துள்ளார். அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் இணைப்பாளராகவும் அவரே. தற்பொழுது இலங்கை வங்கிக்காக, சர்வோதயவின் ஆதரவிலான மேய்ப்பு நில அபிவிருத்தி மற்றும் நில முகாமை குறித்த ஆய்வொன்றில் ஈடுபட்டிருக்கிறார்.

## அறிமுகம்

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது பரவலாக பயன்படுத்தப்படும் சர்வதேச பதங்களைச் சேர்ந்ததொன்றாகும். சுற்றுச் சூழலில் அக்கறைகொண்ட சர்வதேச முகவரங்களின் சொற்றொகுதியில் எழுபதுகளின் தொடக்கத்தில் அது இடம்பெறத் தொடங்கியது. பல மாநாடுகள், மலையாக [illegible] அறிக்கைகள் என்பவற்றுக்கூடாக இன்றைய முதன்மை நிலையை அடைந்தது. சுற்றுச் சூழலுக்கும் அபிவிருத்திக்குமான உலக ஆணைக்குழுவின் "எமது பொது எதிர்காலம்" என்ற அறிக்கை 1987ல் வெளியிடப்பட்டதனையடுத்து — இது புரண்ட்லாண்ட் அறிக்கை என பிரபல்யம் பெற்றிருக்கிறது. இந்த பதத்தின் சர்வதேச அந்தஸ்து திடீரென உயர்ந்தது. ஆயினும், பெருந்தொகையான பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும் "நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி" என்ற கருத்தாக்கம் இன்னமும் அதன் ஆரம்ப கட்டங்களிலேயே இருக்கிறது. அது வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு பொருள்களை அர்த்தப்படுத்துகிறது. அது ஏற்கனவே மிதமிஞ்சிய அளவில் பயன்படுத்தப்பட்ட ஒரு பதப் பிரயோகம் போல தோன்றுகிறது. அதனால் வீரியமிழந்து போன ஒரு சொற்றொடராக மாறக்கூடிய அபாயமும் தென்படுகிறது.

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது ஒரு சொற்றொடர் என்ற முறையில், ஒன்றுக்கொன்று முரண்பட்டது போலத் தோன்றுகின்ற இரு பிரதான கருத்து நிலைகளை அதாவது சுற்றுச் சூழலையும் அபிவிருத்தியையும் — சங்கமிக்கச் செய்வதையே குறிக்கிறது. எண்பதுகளின் காலப்பகுதியின் முடிவிலேயே நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் இப் பிரச்சினையில் இரு கருத்து நிலைகளும் பிணைக்கப்பட்டு வருவதனையும் அவற்றுக்கிடையில் ஒரு புதிய கருத்து நிலை தோன்றி வருவதையும் பார்க்கிறோம். சுற்றுச் சூழலையும் அபிவிருத்தியையும் ஒன்று பொருத்தமாக இணைத்து [illegible] வழியே இந்த கருத்து நிலையின் பிரதான அக்கறையாகும். பல்கலைக்கழக மட்டத்தில் சுற்றுச் சூழல் கற்கைகள் மற்றும் சுற்றுச் சூழல் பொருளாதாரம் போன்ற உப பாட நெறிகள் உருவாக்கப்பட்டமை, நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி பற்றிய உலகச் சூழல் போன்ற விடயங்கள் குறித்து நடைபெற்று வரும் இடையறாத விவாதங்கள் (இந்த விவாதங்களில் மார்க்சியம், அராஜகம், பெண் நிலை வாதம் என்று — பரந்த அணியினைச் சேர்ந்தோர் கலந்து கொண்டுள்ளனர்) என்பன இப்புதிய சிந்தனைக்கான சான்றுகளாக தெரிகின்றன.

## இரு கருத்து நிலைகள்

யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் [illegible] குன்றிய உலகில் கைத்தொழில் நிலைமாற்றம் குறித்த சிக்கலான பிரச்சினையில் அபிவிருத்தி சிந்தனை கவனஞ் செலுத்தியது. நவீனமயமாக்கல் மாதிரி இதன் முதன்மை சித்தாந்தமாக இருந்தது. மேற்கின் முதலாளித்துவ தொழில்மயமாக்கல் போக்குகளின் மீள் நிகழ்வாக தெற்கு அவசியமாக வளர்ச்சியடைய வேண்டுமென்பதை இப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு கண்டது. மார்க்சிச, நவ மார்க்சிச சிந்தனைப் பிரிவு களால் இந்த மாதிரி தாக்கத்துக்கு உட்படுத்தப்பட்டது. குறைவிருத்தியின் வரலாற்று நிகழ்வுப் போக்குகள் குறித்து மாற்று வினாக்களை இப்பிரிவினர் முன் வைத்தனர். சோவியத், சீன சோஷலிச பாணியிலான தீவிர, முதலாளித்துவ – எதிர் தீர்வு களுக்காக இவர்கள் வாதாடினர். ''இறக்குமதி செய்யப்பட்ட சோஷலிசத்துக்கு'' பதிலாக ''உள்நாட்டு சோஷலிசம்'' உரு வாக வேண்டும் என்று கோரிய தேசியவாத, ஜனரஞ்சகவாதப் போக்குகளும் காணப்பட்டன. அபிவிருத்தி குறைந்த நிலைகளின் அளவு கோல்கள் அடிப்படையிலேயே அரசியல் பொருளாதாரம் சார்ந் தவை என்று கூற முடியும்.

சுற்றுச் சூழல் சிந்தனை, வடக் கில் இடம்பெற்று வரும் தொழில் மயமாக்கலின் உயிரினச் சூழ லின் விளைவுகளிலேயே அதிக அளவில் அக்கறை காட்டுகிறது. வேறு பட்ட பல கோட்பாட்டு நிலைப் பாடுகள் காணப்பட்டன. இதில் முதலாவது நிலைப்பாடு அற வுணர்வு சார்ந்தது. அந்த நிலைப் பாடு உயிரியலை மையமாகக் கொண்டு வளர்ச்சிக்கும் கைத் தொழிலுக்கு எதிரானதாக இருந் தது. குறிப்பாக மாசுபடுதலை அரச தலையீட்டினால் தடுப்ப தன் மூலம் சுற்றுச் சூழற் பிரச் சினைகளைத் தீர்த்து வைக்க முடியும் என்று யதார்த்தபூர் வமான, அணுகுமுறை கொண்ட பிரிவினர் கருதுகின்றனர். இது தவிர, பல்வேறு சுற்றுச் சூழல் மற்றும் உயிரியல் சூழல் சிந்தனைப் பள்ளிகள் முனைப்புடன் எழுப்பி வந்து வருகின்றன. வேறு பட்ட பல அபிவிருத்திச் சிந்தனை களுக்கு அனுகூலம் விடுப்பதன் மூலம் மேற்சொன்ன இரு சிந்த னைப் போக்குகளுக்கும் இடையி லான செயலூக்கமுள்ள இணைப் புக்கு இவை வழி கோலுகின்றன

அபிவிருத்தியின் பொருள், மாதிரி போன்ற விடயங்கள் குறித்து நவீனவாத, தீவிரவாத (மார்க்சிச மற்றும் நவ மார்க்சிச) சித்தாந்தப் பள்ளிகள் ஒன்றுக் கொன்று முரணான, சமரசம் செய்து கொள்ள முடியாத நிலைப்பாடுகளைக் கொண்டுள்ள அதே வேளையில், அபிவிருத்திக் கான மூலவளங்களை வைத்திருக் கும் களஞ்சியம் என்ற முறையில் இயற்கை குறித்து இப்பிரிவுகள் அனைத்தும் ஒரு பொது அணுகு முறையையே கொண்டுள்ளன. குறைவிருத்தி குறித்த பன்முகப் பட்ட கருத்து விளக்கமொன்றை தீவிரவாதிகள் முன் வைத்தனர். சமூக நிலைமாற்றம், நீதி நியா யம் என்பவற்றின் அடிப்படையில் அபிவிருத்தி குறித்த பிரச் சினைகளை இவர்கள் எழுப்பினார் கள். மூன்றாவது மண்டல நாடு களில் இயற்கை மூலவளங்களின தும், விவசாய உற்பத்திகளினதும் முதன்மை நிலையையும், உற்பத் தி சக்திகளின் தேக்கத்தையும் அவர்கள் வெளிச்சம் போட்டு காட்டினார்கள். எனினும், சுற் றுச்சூழல் சீரழிவு, அதன் பின் விளைவுகள் என்பது வரையில் நமது பொறுப்புக்களை விரிவு படுத்த அவர்கள் தவறிவிட்டனர்.

குறைவிருத்தி நாடுகளில் மூல வளச் சீரழிவு, வறட்சியின் காரணங்களும் பின் விளைவுகளும் போன்ற விடயங்கள் தொடர் பாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகள் இந்த முயற்சிகளுக் கான அடிப்படைத் தூண்டுகோல் ஒன்றினை வழங்கியுள்ளன. சுற் றுச்சூழல் தொடர்பான சம்பாஷ ணைகளை விரிவுபடுத்துவதற் கும், மூன்றாவது உலக நிலைமை களில், சுற்றுச்சூழல் குறித்த சரி யான வரைவிலக்கணங்களை உருவாக்கிக் கொள்வதற்கும் இவை உதவியுள்ளன. இந்த விவாதங்களின் தளம் உயிரின – அரசியல் – பொருளாதார அடிப் படையைக் கொண்டது எனக் கூறுவது பொருத்தமாகும்.

சுற்றுச்சூழல் – அபிவிருத்தி சம் பாஷணைகளிலிருந்து வெளி வரும் கருத்துக்கள் 'அபிவிருத்தி' யில் இயற்கை வகிக்கும் சிக்கலான பங்கினை தெளிவு படுத்த உதவி யுள்ளன. அபிவிருத்தி என்பதன் பொருள், குறிக்கோள்களை அமைப்பு ரீதியான மாற்றங்களுக்கூடாக சாத்தியமாக்கும், சமூக நீதியும் நிலவும் சமுதாயமொன்றையும், பொருளாதார, கலாசார செழிப் பினையும் எடுத்துவரும் ஒரு நிகழ் வுப்போக்கு என்று கொண்டால், இந்த அபிவிருத்தி நிகழ்வுப் போக்கை சுற்றுச் சூழலிலிருந்து பிரித்து தனித்து நோக்க முடி யாது. மக்களுக்கும் இயற்கைக்கும் இடையில் ஏற்படும் இணைப்பி லேயே அபிவிருத்தி இடம் பெறுகிறது.

முதலில், மனித வாழ்க்கைக் கும் மீளுற்பத்திக்குமாக இயற் கையை ஒதுக்கி வைத்தல் அவசிய மான ஒரு முன் நிபந்தனையாகும். சக்தி மற்றும் பொருள் என்ப வற்றை இயற்கையிலிருந்து தொடர்ந்து பிரித்தெடுத்து, பொருட்களாகவும், சேவைகளாக வும் அவற்றை மாற்றுவதும், உற் பத்திச் சாதனங்களாகவும் மனித இருப்பிடங்களாகவும் இயற் கையை நிலைமாற்றம் செய்வதும் பரந்து விரிந்த நிர்மாணக் கட்ட மைப்புக்களாக வெளித்தோன்றி யுள்ளன. இயற்கை தொடர்ந் தும் திருத்தப்பட்டும் நிலைமாற் றம் செய்யப்பட்டும் வருகின்றது. சுற்றுச்சூழல் என்பது இயக்கம் நிறைந்த தனித்தன்மைமிக்க ஓர் அமைப்பாக இருக்கிறது. சொந்த உரித்தின் வடிவில் மூலவளங்கள் மீதான கட்டுப்பாட்டை நிறுவன மயப்படுத்துவதும் இதனுடன் தொடர்புடையதாகும்.

கைத்தொழில் யுகத்தில், இயற் கையானது, நிலம் என்றும் இயற்கை செல்வாதாரங்கள் என் றும் தனியார் மயமாக்கலும், பண்டமயமாக்கலும் செய்யப் பட்டது. வளர்ச்சியுடன் இணைந்த அபிவிருத்தி என்ற

எளிய சூத்திரம் பிரயோகிக்கப்பட்டது. இதன் காரணமாக, அபிவிருத்தி நிகழ்வுப் போக்கிலிருந்து உயிரின மற்றும் சுற்றுச் சூழல் செயற்பாடுகள் புறம்பாக்கப்பட்டிருந்தன. இந்த வரலாற்று வழிப்பட்ட அம்சங்களாகவும், தெரிந்தோ தெரியாமலோ, தற்கால பிரதான பிரவாக மற்றும் மாற்று அபிவிருத்திச் சிந்தனைகளிலும், சித்தாந்தங்களிலும் பிரதிபலித்துள்ளது.

அபிவிருத்தி நிகழ்வுப் போக்குகளை சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்தும் போது, சுற்றுச் சூழலின் (பரந்த அர்த்தத்தில் இயற்கையின்) கிடைக்கையும் பங்களிப்புக்கள் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

(அ) இயற்கை செல்வாதாரங்களின் வழங்கல்.

(ஆ) உற்பத்தியாலும் நுகர்வினாலும் உருவாக்கப்பட்ட கழிவுப் பொருட்களை உறிஞ்சிக் கொள்வதும், மீள் சுழற்சி செய்தலும்.

(இ) அத்தியாவசியமான உயிரின வாழ்க்கைத் திகழ்வுப் போக்குகள் மற்றும் இயற்கை வாழ்வாதார முறைகள் என்பவற்றுக்கு [illegible] உறுதி செய்தல்.

(ஈ) இருந்து வாழ்வதற்கும்-அனுபவிப்பதற்கும், மனித உயிரின் மீளுற்பத்திக்கும் இல்லமாகவும் பணிபுரிதல்,

இத்தகைய விதத்தில் அமைந்த அபிவிருத்தி-சுற்றுச் சூழல் உறவுகள் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி கருத்துப்படிவங்களுக்கான உறுதியான புறப்பாட்டுப் புள்ளிகளாக இருக்க முடியும். அதன் பின்னர் அது வெளிப்படையான சித்தாந்த வடிவங்களைப் பெறுகிறது. அபிவிருத்தியும் சுற்றுச் சூழலும் [illegible] சார்ந்தவை என்பதனையும், அவற்றின் உள்ளக மற்றும் பரஸ்பரச் செயல் வேகத்தினை ஓரளவுக்கு மட்டுமே அளவு ரீதியான அளவீடுகளாலும் குறிகாட்டிகளாலும் எடுத்துக் காட்ட முடியும் என்பதனையும் நாம் அவசியமாக நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

அபிவிருத்தியும் சுற்றுச் சூழலும் வகிக்கும் பங்குகள் ஒன்றுடனொன்று முரண்பட்டவை; அதே சமயத்தில் அவை ஒன்றிலொன்று தங்கியிருக்கின்றன. இயற்கையை தனித்தனி பாகங்களாக பிரித்து, ஒவ்வொரு பாகமும் ஒவ்வொரு பங்கினை வகிக்கிறது எனக் கூறுவது சாத்தியமில்லை. ஒரே வகையிலேயே அனைத்துப் பங்குகளையும் வகித்து வருகிறது. சுற்றுச் சூழலானது, முரண்பட்ட, சமப்படுத்தவியலாத பல நிறுவன அமைப்புகளாலும் திட்டமிடப்படாத மனித தலையீடுகளாலும் பாதிக்கப்படுகிறது. வெவ்வேறு பங்குப் பணிகளுக்கிடையிலான உறவுகள் அரசியல், பொருளாதார, கலாசார நிலைமைகளுக்கேற்ப மாற்றமடைகின்றன. எனவே அவற்றின் சமூக வாழ்க்கைச் சூழல் தனித்துவங்களை உள்ளூர், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் அவற்றின் சமூகப் பின்னணியுடன் தொடர்புபடுத்துவது மிக முக்கியமாகும். பொதுவில் இயற்கையை வளங்களாகவும், உற்பத்தி உள்ளீடுகளாகவும் தனியார் மயப்படுத்துவதும், பண்டமயப்படுத்துவதும், [illegible] புறமொதுக்க முயல்கின்றன. சுற்றுச் சூழலின் உறிஞ்சிக் கொள்ளும் ஆற்றலையும் மீள் சுழற்சி செய்யும் ஆற்றலையும் மிக விரிந்த முறையில் கழிவுகளை கொட்டுவதானது [illegible]லையும், அதன் விளைவாக [illegible]லையும் பலவீனப்படுத்துகிறது. சுழலின் சில அம்சங்கள் மட்டும் தனியார் மயப்படுத்தப்படவும், பண்டமயப்படுத்தப்படவும் முடியும். ஆனால், அனைத்தையும் அவ்விதம் செய்ய முடியாது.

அத்தியாவசியமான உயிரின நிகழ்வுப் போக்குகளை பண்டமயப்படுத்தவோ அல்லது செயற்கையாக உற்பத்தி செய்யவோ முடியாது. அதாவது, உயிரினச் சூழல் அமைப்புகளில் பெருமளவிலானவை உற்பத்தியின் முறைசார் பொருளாதார ஏற்பாடுகளுக்கு வெளியே இருக்கின்றன. அபிவிருத்தியும் சூழலும், ஒன்றிலொன்று தங்கியிருக்கும் இந்த பங்குகளை குறித்த மதிப்பீட்டு நிலைகளை ஏற்படுத்துவதை. தனி நபர்களினதோ—இலாப நோக்கத்துக்காக அல்லது உயிர் வாழ்க்கைக்காக—நடவடிக்கைகள் ஏற்படுத்தப்படும் தன் ஆன விளைவுகள் தன்மையினும் சமூகத்துக்கும் சுற்றுச் சூழலுக்கும் இடையே இணக்கமான உறவொன்றினை வேண்டி நிற்கும் சமூகத்தின் பரந்த, நீண்ட கால விசேட பூர்வத் தன்மைக்கு இடையே காணப்படும் முரண்பாடுகளையும் இந்த மதிப்பு நிலைகள் பிரதிபலிக்கின்றன. தூய அறுவடையின் நீண்ட கால தொடர்ச்சியை உத்தரவாதப்படுத்திய சமூக நிறுவனங்களின் சீர்குலைவினையும் இது எடுத்துக் காட்டுகிறது.

இந்த முரண்பாடுகளையும், பரஸ்பர தங்கியிருத்தல்களையும், இயக்கவேறுபடுத்த முடியாத பலவகை நிலைகளுக்குள் அவை விடப்பட்டு [illegible] வருவதையே நிலைத்து நிற்கக் கூடிய தன்மையென கருத்தாக்கமாகக் கூறமுடியும். ஆனால், யதார்த்த உலகில் இம்முரண்பாடுகள் மிகச் சிக்கலானவையாக இருக்கின்றன. அத்துடன் அது கோட்பாட்டு பகுப்பாய்வுக்கும், கொள்கைக்கும் பல சவால்களை விடுக்கிறது. கைத்தொழில் பொருளாதாரங்களில் உற்பத்திச் சக்திகள் [illegible] வளர்ச்சி கண்டு வருகின்றன; அதே சமயத்தில் குறைவிருத்திப் பொருளாதாரங்களில் அவை தேக்கத்தையும், பின்னடைவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சந்தித்துள்ளன. இவை நாட்டின் சூழலின் எதிரெதிரான பக்கங்களில் முரண்பாடுகளை நிலைப்படுத்தியுள்ளன.

நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலான பிரிவு, கைத்தொழில் நிலைமாற்றத்தின் முக்கிய அம்சமல்லாமல் இருந்தது. நவீனமயமாக்கலும் நகரமயமாக்கலும் அநேகமாக ஒரு பொருள் கொண்ட சொற்களல்ல. தொழிற்சாலைகளும் வேலைத்துறை நடவடிக்கைகளும் பெருமளவிலான குடியிருப்புகளும் நகரப் புறங்களிலேயே திரண்டுள்ளன. அதே அளவுக்கு கிராமப் புறங்களில் விவசாயம் தொழில்மயமாக்கப்பட்டுள்ளதுடன் குடித்தொகை விருத்தியும் ஏற்பட்டுள்ளது. நவீனமயமாக்கலானது சுற்றுச் சூழல் மாசாக்கல் நிகழ்வுப் போக்கினை சிறிய ஒரு புவியியல் பிரதேசத்தினுள் திரளச் செய்துள்ளது. அதேபோல விவசாயத்தின் தொழில்மயமாக்கலும் சுற்றுச் சூழல் மீது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது.

விரிவாக்கப்பட்ட மீளுற்பத்தி நோக்கங்களுக்காக இயற்கையை பிரித்து கூறுபடுத்தும் ஒரு போக்கினை உலகளாவிய மட்டத்தில் காணக்கூடியதாக இருக்கிறது. இயற்கையை மூலதனமாக்குதல் (ஓ'கொனர் 1990) என்று அழைக்கப்படும் இந்த நிகழ்வுப் போக்கு உயிரியல் பௌதீகச் சூழலில் கடுமையான மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இது தவிர, இலட்சக் கணக்கான வறிய மக்கள் தமது உயிர் வாழ்க்கையின் பொருட்டு இயற்கையைச் சீரழித்து வருகின்றனர்.

இயற்கைக்கும் அபிவிருத்திக்கும் இடையே உள்ள உறவினை அதற்குரிய அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் பின்புலத்தில் வைத்தே புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். இந்த உறவுகள் குறித்த எந்தவொரு விளக்கமும் நடுநிலைத் தன்மை கொண்டதாக இருக்க முடியாது. நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தி என்பதற்கு பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். உதாரணமாக, குறிப்பிட்ட ஒரு அபிவிருத்தி நோக்கு வர்க்கம், இனம், பால், சமூகம், தொழில்நுட்பம், இயற்கை என்ற சிக்கலான ஒரு தொகுதியின் ஒரு கூறாகவோ அல்லது கூறுகளாகவோ காணச் செய்யப்படும். நிலைத்து நிற்கக் கூடிய தன்மை குறித்த விரிவான பூரணமான கருத்துக்களுக்கு ஏனைய காரணங்கள் தொடர்புபட்டவையாகும். மேலும், உலக, தேசிய, உபதேசிய மட்டங்களில், வளர்ச்சி கண்ட நாடுகள், குறைவிருத்தி நாடுகள், தட்ப வெப்ப நிலைமைகள் என்பவற்றுக்கேற்பவும் வேறுபாடுகளுண்டு. எடுத்துக் கொள்ளப்படும் துறைக்கேற்பவும் அது வேறுபட முடியும்.

தொடக்கப் புள்ளியாக, நிலைநிறுத்தக்கூடிய அபிவிருத்தி என்பதற்கு சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்திக்கான உலக ஆணைக்குழுவின் வரைவிலக்கணத்தை நாம் எடுக்க முடியும்.

> ''சாராம்சத்தில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி என்பது மாற்றங்களைக் கொண்ட ஒரு நிகழ்வுப் போக்காகும். இந்த நிகழ்வுப் போக்கில், மூலவளங்களின் சுரண்டல், முதலீடுகளின் திசை, தொழில்நுட்ப அபிவிருத்தியின் செல்நெறி, நிறுவனரீதியான மாற்றம் ஆகிய அனைத்தும் இயற்கையுடன் இணங்கி, மானிடத் தேவைகளையும் அபிலாசைகளையும் நிறைவு செய்யும் பொருட்டு தற்போதைய மற்றும் வருங்கால உள்ளாற்றல்களை உயர்த்தக்கூடிய முறையில் அமைதல் வேண்டும்''

இந்த வரைவிலக்கணத்தை பொதுமைப்படுத்தவோ அல்லது பல்வேறு சித்தாந்த தளங்களில் நின்று விமர்சனம் செய்யவோ முடியும். உயிரினச் சூழல் அக்கறையுள்ளோர் கொண்ட சமூகமொன்று குறித்த தீவிர கருத்துக்கள் (முதலாளித்துவ அபிவிருத்தி மாதிரியையும் தற்போதைய சோஷலிச அபிவிருத்தி மாதிரிகளையும் நிராகரிக்கும்) உயிரினவியல் - சோஷலிஸ்டுகள் உயிரினவியல் - அராஜகவாதிகள் மற்றும் பெண்நிலைவாதிகள் ஆகியோரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

''உயிரின வாழ்க்கைச் சூழல் சமநிலைப்பாட்டையும் நுகர்வளவிடுதலை விவேகத்துடன் பொருந்தக்கூடிய தன்மை எதேச்சதிகார சோஷலிசத்துக்கும் அது பொருத்தமற்றதாகும். அரசாங்க வடிவில் இப்பொழுது இந்த வகை சோஷலிசம் மட்டுமே காணப்படுகிறது'' என்று இந்தக் குழுவைச் சேர்ந்த ஒருவர் எழுதுகிறார். இயற்கையின் மீது அதிக்கம் செலுத்தும் எந்த ஒரு பொருளாதார முறையும், தொழில்நுட்ப முறையும் மனிதன் மீதும் ஆதிக்கம் செலுத்தும் வல்லமை பெற்றவை என்று இவர்கள் விவாதிக்கிறார்கள். ஆனால், இக்குழுக்களிடையே கூட இன்னமும் தெளிவான ஒரு கருத்தொற்றுமை உருவாகவில்லை. இந்த உயிரினச் சூழல் - சோஷலிஸ்டுகளின் சமகால பார்வைகளை பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்.

— பொருளாதாரத்தை பண்டமய நிலையிலிருந்து நீக்கும் நோக்கிலும் அனைத்து வடிவங்களிலான அந்நியப்படுத்தலையும் பால் மற்றும் இனவேறுபாடுகளையும் முடிவுக்கு கொண்டு வரும் நோக்கிலும் சமூக உறவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-களையும், உற்பத்தி - பங்கீட்டு நிலைமைகளையும், சமூகத்துக்கும் இயற்கைக்குமிடையிலான உறவினையும், தீவிரமாக மறுசீரமைப்புச் செய்தல்.

காலச்சுழற்சியில் முதலாளித்துவத்தில் உருவாகும் நெருக்கடிகளை எதிர்த்து நிற்பதற்கு அல்லது அத்தகைய நெருக்கடிகள் இல்லாதிருக்கும் நிலைமையை உருவாக்குவதற்கு மாற்று வளர்ச்சி மாதிரிகளையும், பொருட்குவிப்பு முறைகளையும் பின்பற்றுதல். இவற்றுக்கான தொழில்நுட்பங்கள் சமூக மற்றும் உயிரினச் சூழல் அக்கறைகளுக்கு உகந்த முறையில் தெரிவு செய்யப்படுதல் அவசியம்.

— தற்போதைய நகர - கிராம வேறுபாட்டினை படிப்படியாக ஒழித்துக்கட்டும் நிலைக்கு வழி வகுக்கக்கூடிய விதத்தில் புதிய சமூக புவியியலின் அடிப்படையில் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் மீளமைப்புச் செய்தல்.

— எதிர்கால சந்ததியினரின் நலன் குறித்த அக்கறை.

உயிரினச்சூழல் சோஷலிஸ்டுகளுக்கும் உயிரினச்சூழல் அராஜகவாதிகளுக்குமிடையே அநேகமாக ஒரேவிதமான கருத்தாக்கங்கள் காணப்படுகின்றன. சுற்றுச்சூழல் நெருக்கடியானது, முதலாளித்துவத்தையும், தற்போதைய சோஷலிசத்தையும் மூர்க்கத்துடன் விமர்சனம் செய்வதற்கு, அராஜகவாதிகளுக்கு ஒரு புதிய சக்தியை வழங்கியுள்ளது. இந்த இரு அமைப்புக்களையும் நிராகரிக்கும் இவர்கள் அரசற்ற, உயிரினச்சூழல் சமூகமொன்றை அடிப்படையாக கொண்ட எதேச்சாதிகார-எதிர், எதேச்சாதிகாரமற்ற, உயிரினச்சூழல்-சமூகங்கள் மற்றும் உயிரினச்சூழல் தொழில்நுட்பங்கள் என்பவற்றுக்காக இடையறாது வாதாடி வருகிறார்கள். புகழ் பெற்ற உயிரினச்சூழல்-அராஜகவாதியான புக்கின் தனது புதிய நூலொன்றில் பின்வருமாறு எழுதுகிறார்.

“ஆண் - பெண், வயதுத் தொகுதிகள், நகரம்-கிராமம், நிர்வாகம்-சமூகம், உடல் - மனம் என்பவற்றுக்கிடையில் காணப்படும் ஒன்றுக்கொன்று எதிரான பிரிவினையை அதிக மனித நேயம் சார்ந்த உயிரினச்சூழல் சிந்தனைப்போக்குடன் நல்லிணக்கப்படுத்திக் கொள்ள முடியும். மனிதனுக்கும் இயற்கை உலகத்துக்குமிடையிலான புதிய உறவொன்றை இது எடுத்து வரும். இந்த அமைப்பில், சமூகமென்பது, வேற்றுமையில் ஒற்றுமை, மேலாதிக்க நிலையற்ற உறவுகள் என்பவற்றை அடிப்படையாக கொண்ட உயிரினச்சூழல் அமைப்பொன்றாக கருதப்படுகிறது”

நிலை நிற்கத்தக்கூடிய அபிவிருத்தி குறித்த வைதீக கருத்துக்கள், தற்போதைய அரசியல் பொருளாதார ஒழுங்கினை-அது முதலாளித்துவமாக இருந்தாலும் சரி, சோஷலிசமாக இருந்தாலும் சரி - ஏற்றுக்கொண்டு, இயற்கை மூலவள பாவனையையும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும் சமாளித்து தீர்வுகாண்பதற்கான உத்திகளை உருவாக்குவதற்கான அடிப்படையாக கொண்டதாகும். சட்டம், வரிவிதிப்பு, சந்தையை ஒழுங்குபடுத்தல், திட்டமிடல், தொழில்நுட்ப மாற்றம் என்பன அமைப்புக்குள்ளேயே இதற்கு கிடைக்கும் கருவிகளாகும்.

இந்த நிலைப்பாடுகளுக்குள், பரந்த ஒரு சித்தாந்த அமைவில் பல்வேறு புதிய போக்குகளையும் காணக்கூடியதாக இருக்கிறது.

மூன்றாவது உலகில் இயங்கும் பல சமூக இயக்கங்கள் சுற்றுச்சூழல் பிரச்சினையை, பழங்குடி சமூகங்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் ஒரு பகுதியாக பார்க்கின்றன. புல்வெளிகளையும், காடுகளையும் ஒழித்து விடுவதற்கு வரும் ஊடுருவல்காரர்களுக்கு எதிராக இவர்கள் போராட வேண்டியிருக்கிறது. பல குறைவிருத்தி நாடுகளில் அடிப்படை பொருளாதார தேவைகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு என்பன குறித்த பிரச்சினைகளுடன் சுற்றுச்சூழல் பிரச்சினைகளும் சம்பந்தப்பட்டுள்ளன. எவ்வாறெனினும், மூன்றாவது உலகின் புத்திஜீவி மற்றும் சமூக செயல்வீரர்களிடையே இப்பொழுது ஒரு புதிய விழிப்புணர்வு தோன்றி வருகிறது. தென்னாசியாவில் இயங்கும் பல தீவிர சுற்றுச்சூழல் இயக்கங்கள் அணைக்கட்டுகள் மற்றும் நதி திசை திருப்பும் திட்டங்கள் என்பவற்றுக்கு எதிராக பாரிய எதிர்ப்பியக்கங்களை ஏற்பாடு செய்து வருகின்றன. “மக்களை அடிப்படையாக கொண்ட நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை” இவை ஆதரித்துப் பேசுகின்றன. நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி உத்திகளை வடிவமைப்பதில் சுற்றுச்சூழல் குறித்த உள்ளூர் அறிவினையும், உற்பத்தி அமைப்புக்களையும் பயன்படுத்துவதற்கு ஆதரவாகவும் குரல்கள் எழுந்து வருகின்றன.

எனினும், இந்த பல்வேறு நிலைப்பாடுகளுக்கும் ஊடாக, குறிப்பிட்ட சில விழுமியங்கள் தொடர்பாக பொதுவான சில கூறுகள் காணப்படுகின்றன. அதாவது, நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தியின் எந்த ஒரு வகையும்.

— தலைமுறை தலைமுறைகளாக முன்னேறி வரும் சமத்துவத்துடன் பொருளாதார, சமூக, பண்பாட்டுத் தளங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் தொடர்பிலான முன்னேற்றங்களை உறுதிப்படுத்தல் வேண்டும்.

மூலவள முகாமை நடவடிக்கைகளின் அனைத்து சுற்றுச் சூழல் பாதிப்புக்களையும் கவனத்தில் எடுத்தல்; மாற்றக்கூடிய, மாற்ற முடியாத தாக்கங்களுக்கிடையே வேறுபடுத்திக் காணுதல், மற்றும் உற்பத்தி மற்றும் நுகர்வு நடவடிக்கைகளின் வெளிவிளைவுக் களைக் குறித்து விழிப்புடனிருத்தல் வேண்டும்.

— அதிகளவுக்கு புதுப்பிக்கக்கூடிய மூலவளங்களில் தங்கியிருப்பதும், தீர்ந்து போகக்கூடிய மூலவளங்களை குறைந்த அளவில் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

— உயிரின வாழ்க்கைச் சூழல் நிகழ்வுப்போக்குகளும், தாக்கங்களும் அரசியல் ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை பொருட்படுத்துவதில்லை என்ற உண்மையை அங்கீகரித்தல் வேண்டும்.

— அவசியமான உயிரினச் சூழல் நிகழ்வுப் போக்குகளை பராமரிப்பதற்கும், பிறப்பியல் பன்முகத்தன்மையை பேணுவதற்கும் உதவ வேண்டும்.

சுற்றுச்சூழல் - அபிவிருத்தி உறவுகள் தொடர்பாக முரண்பாடு மிக்க பங்குகளை அரசு வகித்து வருகிறது. மூன்று வெவ்வேறு விதமான அரச தலையீடுகளினால் இந்த முரண்பாடுகள் தோன்றுகின்றன.

— தனியார் முதலீட்டையும் பொருட் குவிப்பையும் ஊக்குவிக்கும் நோக்கிலான முயற்சிகள்; பொது வசதிகளுக்கான அரச துறை முதலீடு, குறிப்பிட்ட சில பொருளாதார நடவடிக்கைகள் சார்பான விசேட ஊக்குவிப்புக்கள் என்பவற்றையும் இது உள்ளடக்கியுள்ளது.

— சமூக மேம்பாட்டுக்கான வர்க்க மற்றும் சமூக போராட்டங்களைத் தணிக்கும் நோக்கிலான முயற்சிகள்.

— சுற்றுச் சூழல் ஆர்வலர்களின் கோரிக்கைகளை அடிப்படையாக கொண்ட முயற்சிகள்; இது குறிப்பிட்ட சில பொருளாதார நடவடிக்கைகள் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதுடன், சுற்றுச் சூழல் குறித்த சட்டவாக்கங்களை நோக்கத்துடன் அமுல் செய்கிறது.

இதில் முதலாவதில், அரசு சுற்றுச்சூழல் சீரழிவுக்கு ஆதரவளிப்பதாக இருக்கிறது. இரண்டாவதில், அரசியல் சக்தியின் இயல்பான பிரதிபலிப்பாகவும், சமூக நல்லிணக்கத்தை பேணுவதற்கான நிலைமைகளை உருவாக்குகிறது. மூன்றாவது பங்கு, முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் முரணானதாகும். சுற்றுச் சூழல் தராதரங்களை கடுமையாக பேணி வருவதானது, வேலைவாய்ப்புக்கள் மற்றும் வருமானம் என்பவற்றின் உருவாக்கத்தை மட்டுப்படுத்த முடியும், அத்துடன் நுகர்வோர் அதிக விலை செலுத்த வேண்டிய ஒரு நிலையும் உருவாகும். இது நுகர்வு மட்டங்களைப் பாதிக்கும்.

கோட்பாட்டளவில், நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கான தேவைகளை திட்டமிடப்பட்ட பொருளாதாரமொன்றில் ஆகக்கூடிய அளவுக்கு நிறைவு செய்ய முடியும். ஆனால், தற்போதைய சோஷலிச அனுபவங்கள் இதற்கு நேர்மாறானவையாகவே இருக்கின்றன. திட்டமிட்ட பொருளாதாரங்கள் தமது பங்குக்கு சுற்றுச் சூழல் பிரச்சினைகளைக் கொண்டுள்ளன. சோஷலிச அபிவிருத்தித் திட்டங்களில் சுற்றுச் சூழல் அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை. தற்போதைய சோஷலிச அமைப்புக்களில் திட்டமிடல், பெருமளவுக்கு, வரையறுக்கப்பட்ட முதலாளித்துவ தொழில்மயமாக்கல் அனுபவங்களையே அடிப்படையாக கொண்டிருக்கிறது. வளர்ச்சி, பொருட் குவிப்பு மற்றும் துறைகளுக்கிடையிலான தொடர்பு என்பன குறித்த சோஷலிச கருத்தாக்கம், அதன் உசாத்துணை சட்டகமாக முதலாளித்துவத்தையே கொண்டிருந்தது. சுற்றுச் சூழல் பரிமாணம் புறக்கணிக்கப்பட்டமை இதன் பின் விளைவுகளில் ஒன்றாகும்.

## பாரம்பரிய கருத்தாக்கமும் வளர்ச்சி வழிமுறைகளும்

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி குறித்த விவாதத்தின் சாதனைகளில் ஒன்று வளர்ச்சியின் தரம் சார் அம்சங்களின் அவசியம் மற்றும் சாத்தியம் என்பன குறித்து ஒரு கருத்தொற்றுமை உருவானதாகும். அறுபதுகளிலும், எழுபதுகளிலும், 'இறுதி நாள்' மற்றும் 'பூஜ்ய வளர்ச்சி' சித்தாந்தங்களிலிருந்து இது மாறுபட்டதாகும். இந்த மாற்றம் வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் உயர் முக்கியத்துவம் கொண்டதாக உள்ளது. எனினும், வளர்ச்சியின் தர ரீதியான மற்றும் அளவு ரீதியான பிரச்சினை, பல கோட்பாட்டு ரீதியான விவாதங்களை தூண்டி விட்டுள்ளது.

மொத்த தேசிய உற்பத்தி மற்றும் தேசிய கணக்கீட்டு முறைகள் என்பவற்றின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டும் பிரதான பிரிவார பொருளியலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பொருளாதார மாற்றம், அபிவிருத்தி மற்றும் மூலவளப் பாவனை என்பன குறித்த பொ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தே. உ. அடிப்படையிலான கருத்துக்களின் குறைபாடுகள் குறித்து முன்வைக்கப்பட்ட கண்டனங்களின் விளைவாகவே இந்நிலை தோன்றியுள்ளது. மொ. தே. உ. வின் தலா நபர் வருமானம், பகிர்வு குறித்த எதனையும் வெளிப்படுத்துவதில்லை என்பது எப்போதோ ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. குறைவிருத்தி நாடுகளில் சந்தைக்கு வராமல் முறைசாரா துறைகளில் இடம்பெற்று வரும் உற்பத்திகளும், கொடுக்கல் வாங்கல்களும் மொ. தே. உ. வில் சேர்க்கப்படுவதில்லை என்பதும் இப்பொழுது நன்கு தெரியவந்துள்ளது.

பொருளாதார நடவடிக்கைகளின் சுற்றுச் சூழல் தாக்கங்களை கவனத்தில் எடுக்கும்போது, ஒரு பொருளாதார வகை என்ற முறையில் மொ. தே. உ. குறித்த கருத்தாக்கம் மேலும் குறைபாடுடையதாக மாறுகின்றது. இயற்கை செல்வாதார அழிவின் குறுங்கால, நீண்டகால பின்விளைவுகளை மொ. தே. உ. கணக்கில் எடுப்பதில்லை. உதாரணமாக, தேசிய கணக்குகள் வெப்ப வலய மழைக் காடொன்றின் அழிவினை ஒரு வருமானமாக பதிவு செய்கிறது. அதே வேளையில், காட்டழிப்பினையும், நாட்டுக்கு ஏற்படும் இயற்கை மூலவள இழப்பினையும் அது கணக்கில் எடுப்பதில்லை. எனவே, தற்போதைய கணக்கீட்டு முறை, சமூக மற்றும் சுற்றுச் சூழல் நோக்கில் செலவுகளாக கருதப்படும் அம்சங்களை மறைத்து விடுகின்றது.

மொ. தே. உ. யில் அதிகரிப்புக்களாக கருதப்படும் வளர்ச்சி ஒரு 'பாய்ச்சல்' கருதுகோளாகும். ஆனால், இந்த வளர்ச்சிக்கு அவசியமான பல 'பாய்ச்சல்கள்' இயற்கை மூலவள இருப்பிலிருந்தே வருகின்றன என்பதனை இந்த கோட்பாடு புறக்கணிக்கிறது. இந்த வளர்ச்சி கருதுகோளில் மொ. தே. உ. பாய்ச்சல்களுக்கும் மூலவளத் தளத்தின் 'இருப்பு' நிலைக்குமிடையே தொடர்பிருப்பதாக கருதப்படுவதில்லை. இப்பிரச்சினைகளை ஒரு கைப்பிடிப்பாக அல்லது 'சுற்றுச் சூழல் மூலதனம்' என்று கருதும் புதிய கணக்கீட்டு முறைகளின் அவசியத்தை விமர்சகர்கள் வலியுறுத்தியுள்ளனர். (பெக்கர்மன் 1981, டலி 1983, ரிபெட்டோ 1988).

இந்த விமர்சனங்கள் அனைத்துமே அரசியல், பொருளாதார ஒழுங்கினையும், இயற்கை, பொருளுற்பத்தி மற்றும் சேவைகள் என்பனவற்றின் தற்போதைய பகிர்வு அமைப்புக்களையும் விமர்சிப்பவையாகவே இருக்கின்றன. இயற்கை பண்டமயப்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகளாக மாற்றப்படும் போது, மனித வாழ்க்கைக்கு அவசியமான அதன் ஏனைய கருமங்கள் பல புறக்கணிக்கப்பட முடியும். இந்த கருமங்களை - இயற்கையின் ஏனைய தனிப்பட்ட கடமைகளைப் போல - சந்தைப்படுத்த முடியாது.

வளர்ச்சியின் தரத்தை மதிப்பிடுவதனையும், கணக்கீட்டு முறைகளை மாற்றுவதனையும் ஒன்றெனக் கருத முடியாது. இம் மதிப்பீடுகளைச் செய்யும் ஒரு தனி நடவடிக்கையல்ல, சந்தைப் பொறிமுறையை மாற்றுவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்குமான மாற்று அமைப்புக்களை உருவாக்குவதுடனும், நீண்ட கால நோக்கில் பொருளாதார நிகழ்வுப் போக்குகளை ஜனநாயக முறையில் கட்டுப்படுத்துவதுடனும் இது தொடர்புபட்டதாகும். மூலவளப் பாவனையின் நுண் விவேகத்துக்கும் மாண் விவேகத்துக்கும் இடையிலான பகைமை நிலைகளை ஒழிக்கும் நோக்கில் புதிய செயற்றிறமை முறைகளையும், இயற்கை வளப்பகிர்வு முறைகளையும் இது உருவாக்குவது அவசியமாகும். ஒன்றி லொன்று தங்கியிருக்கும் நான்கு கருமங்களை நிறைவு செய்வதற்காக, அபிவிருத்தி முன்னுரிமைகளை மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தையும், பொருத்தமான நிறுவன அமைப்புக்களை உருவாக்க வேண்டிய தேவையையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

— வளர்ச்சி, மொத்த குவிப்பு நிரம்பல் போக்குகளை, வளநுகர்வு மற்றும் பொருள் நுகர்வு என்பன தொடர்பாக உயிர்ச் சூழல் முறையின் நிலைத்து நிற்கக்கூடிய வழிகளில் தூண்டி, நெறிப்படுத்துதல்.
— நெருக்கடிகளாலும் பின்னடைவுகளாலும் ஏற்படும் பொருளாதாரத்தின் ஊறுபடத்தக்க தன்மையை மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்கான உள்ளக கட்டமைப்புக்களை உருவாக்குதல்.
— அபிவிருத்தியின் பங்குபற்றல், பகிர்வு மற்றும் சமத்துவ குறிக்கோள்களை நிறைவு செய்வதற்காக அடிப்படை அமைப்புக்களை உருவாக்குதல்.
— மனித சமூகத்தை நிலைநிறுத்தி, அழிவைத் தவிர்ப்பினை அளிக்கும் இயற்கையின் பல்வேறு பகுதிகளுக்கிடையிலான இணக்கத்தை ஏற்படுத்தல்.

இவ் தொழில் நுட்பமும் ஒரு முக்கிய மாறியாக இருக்கிறது. நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சிக்காக, திட்டமிடல் முறையின் தொடர்ச்சியான நிறுவன மற்றும் தொழில் நுட்ப மாற்றங்களை வழங்கும் அரசியல் பொருளாதார சூழ்நிலையே மிக அவசியமாகும். அரசியல், பொருளாதார முறைகள் குறித்த சிக்கலான பிரச்சினைகளை இது எழுப்புகிறது. இதனை கோட்பாட்டு ரீதியாக விவாதிப்பதாவது இக்கட்டுரையின் வீச்சுக்கு அப்பாற்பட்டதாகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசியாவின் சவால்: சமாதானம், பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி

கலாநிதி அக்மல் ஹுசைன்

கலாநிதி அக்மல் ஹுசைன் சர்வதேச புகழ்பெற்ற பாகிஸ்தானிய பொருளியலாளர். கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தில் பீ. ஏ., எம். ஏ. பட்டங்களைப் பெற்ற அவர், சஸ்ஸெக்ஸ் பல்கலைக் கழகத்திலிருந்து 1980 ல் பொருளாதாரத்தில் கலாநிதி பட்டத்தை பெற்றுக்கொண்டார். பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்துள்ளார். அவர் பாகிஸ்தானின் பல நிறுவனங்களில் சிறப்பு விரிவுரைகளை நிகழ்த்தி வருகிறார். 1983/84 கல்வியாண்டில் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் விருந்து விரிவுரையாளராகவும் இருந்திருக்கிறார். தற்பொழுது ஐ. நா பல்கலைக்கழக ஆசிய செய்திட்டப்பிரிவில் (தென்னாசியா) இணை செய்திட்டப் பணிப்பாளராக பணிபுரிந்து வருகிறார்.

## அறிமுகம்

தென்னாசியா அதன் வரலாற்றில் வழிகள் பிரிந்து செல்லும் ஒரு கட்டத்தில் வந்து நின்றிருக்கிறது. இப்பிராந்தியத்தின் பாரிய மனித மற்றும் மூலவள ஆற்றலை வறுமையை ஒழிப்பதற்கு பயன்படுத்த முடியும் என்பது குறித்து இப்பொழுது ஒரு புது விழிப்புணர்ச்சி காணப்படுகிறது. தென்னாசியாவின் செழுமையான பண்பாட்டு உள்ளடக்கத்தையும், அதன் மூலவளங்களையும் பிராந்திய ஒத்துழைப்புக் கூடாக ஒருமுகப்படுத்துவதன் மூலம், தோன்றிவரும் புதிய உலகில் இப்பிராந்தியத்தின் குரல் உரத்து ஒலிப்பதற்கு வாய்ப்பேற்படும் என்பது இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், அதே வேளையில் அரசுகளுக்கிடையிலான யுத்த அபாயம் மற்றும் நிலைத்து நிற்க முடியாத அபிவிருத்தி உத்திகள் என்பன இந்த ஆற்றல் புறக்கணிக்கப்படுவதற்கும் வழி கோலுகின்றன.

தென்னாசியா சமாதானம் செழிப்பு என்பவற்றுடன் 21ஆம் நூற்றாண்டுக்குள் நுழைவதற்கான புதிய வழியொன்றை எம்மால் கண்டறிய முடியாதா? மக்கள் நலனிலும் பார்க்க இராணுவ பலத்துக்கு முதலிடம் கொடுக்கும் குறுகிய மனப்பான்மைகளை களைந்தெறிவதற்கு இப்பொழுது காலம் வந்திருக்கிறது. தேசிய அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக, பகைமை பாராட்டுவதற்கு பதிலாக, அயலவருடன் நல்லுறவை வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் வாய்ந்திருக்கிறது.

கடந்த நான்கு தசாப்தகால தென்னாசிய அபிவிருத்தி அனுபவம், வறுமையையும், போஷாக்கின்மையையுமே முன்னிலைப் படுத்திக் காட்டுகிறது. அதே வேளையில், எமது வட பிராந்திய மலைத் தொடர்களின் பசுமையான சரிவுகளும், அவற்றின் அடிவாரத்தில் செழித்தோங்கிய வயல் வெளிகளும் மறைந்து வருகின்றன. இந்த கண்கொள்ளாக் காட்சி ஒரு தலைமுறை காலத்துக்குள்ளேயே மறைந்து விட்டது. மறைந்திருக்கும் சந்தையின் கரத்தினால் கட்டுப்படுத்தப்படும் வளர்ச்சி முறையொன்றே இதற்கு காரணமாகும். மனித மற்றும் இயற்கை மூலவள அடித்தளம் புறக்கணிக்கப்பட்டு வரும் அதே வேளையில், தென்னாசிய நாடுகள் கடன் சுமை போன்ற பல்வேறு பிரச்சினைகளால் அல்லலுற்று வருகின்றன.

ஒரு புறத்தில், நவீனமான இராணுவ பொறித்தொகுதிகள்; மறுபுறத்தில், தொடர்ந்த வறுமை, கடன் சுமை. இந்தியாவையும் பாகிஸ்தானையும் பொறுத்த வரையில் இது நன்கு பொருந்தும். நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருக்கும் காஷ்மீர் தகராறு, யுத்த அச்சுறுத்தலொன்றை எடுத்துவரக் கூடிய நிலை காணப்படுகிறது. ஒரு நாடு மற்ற நாட்டினை அணு ஆயுத ஆற்றல் கொண்டுள்ளது என்று குற்றஞ்சாட்டி வரும் சூழ்நிலையில், யுத்தமொன்றை நினைத்துப் பார்ப்பதே பயங்கரமானதாக இருக்கிறது.

பிராந்தியத்தின் மிகப்பெரிய நாடு என்ற முறையில் இந்தியா, காஷ்மீர் பிரச்சினையில் நீண்டகால நோக்கொன்றினைப் பின்பற்றுதல் அவசியமாகும். காஷ்மீர் மக்களின் விருப்பினைக் கவனத்தில் எடுத்து, இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்தியா ஒரு முன் முயற்சியை எடுக்குமேயாயின், இந்தியாவினதும் இப்பிராந்தியத்தினதும் நீண்டகால பாதுகாப்புக்கான மிகச்சிறந்த முதலீடாக அது அமைய முடியும். இது தவிர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தகராறு தீர்க்கப்படுமாயின் இவ்விருநாடுகளும் பெருந்தொகையான இராணுவச் செலவுகளை மக்கள் நலனுக்காக திசை திருப்பிவிட முடியும். இராணுவச் செலவு அதிகரிப்பு இந்த அரசுகளின் பாதுகாப்பு பலமடைவதற்கு எந்த விதத்திலும் உதவுவதில்லை. ஏனென்றால், ஒரு நாடு இராணுவச் செலவை அதிகரிக்கும் போது, மற்ற நாடும் அவ்விதம் செய்யத் தொடங்குகிறது. உதாரணமாக, 1973 க்கும் 1988 க்கும் இடையில் இந்தியாவின் இராணுவச் செலவு 283 கோடி அமெரிக்க டொலர்களிலிருந்து 880 கோடி அமெரிக்க டொலர்களாக வருடாந்தம் அதிகரித்து வந்திருக்கிறது, பாகிஸ்தான் (குறைந்த அளவில் என்றபோதிலும்) 90 இலட்சம் அ. டொலர்களிலிருந்து 250 கோடி அ.டொலர்களை வருடாந்தம் செலவு செய்து வந்துள்ளது. இப்பொழுது இரு நாடுகளும் எல்லைப் பிரதேசத்தில் தமது படைகளைக் குவித்துள்ளன. இந்த யுத்தத்தில் எவரும் வெற்றியடையப் போவதில்லை. எனவே, நீடித்து அமைதிக்கும், நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்திக்கும் வழிமுறைகளைக் கண்டறிவதற்கு இப்பொழுது தருணம் வாய்த்திருக்கிறது.

இன்றைய தேவை அபிவிருத்திக்கான புதிய அணுகுமுறை பொன்றாகும். மக்கள் வெவ்வேறு பிராந்தியங்களில் அமைதியாக வாழ்வதற்கும், தமது வாழ்க்கையை நேரடியாக பாதிக்கும் தீர்மானங்களில் கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்கும் இது வாய்ப்பளிக்க வேண்டும். உற்பத்தியும் பொருளாதார வளர்ச்சியும் மக்கள் நலனை முன்னிட்டே மேற்கொள்ளப்பட வேண்டும். சுருக்கமாக சொல்வ

அட்டவணை I

தென்னாசிய பொருளாதாரங்களின் ஒப்பீடு

| நாடு | (1) மொ. உ. உ. வளர்ச்சி (%) | | | (2) உற்பத்தி அமைப்பு[1] (மொ. உ. உ. (%)) பொருளுற்பத்தி | | சேவைகள் | | (3) வறுமை (வறுமைக் கோட்டுக்கு கீழுள்ளோர் %) | (4) (f) உற்பத்தியில் தயாரிப்பு (சேர்க்கப்பட்ட பெறுமதியில் %) | | (5) வர்த்தக நிலுவை பற்றாக்குறை (அ. டொலர் பத்து இலட்சம்) | | (6) வ. செ. திட்ட பற்றாக்குறை (மொத்த அரச வருமானத்தில்) | | பொது நிர்வாக சேவை (மொத்த அரசாங்க செலவில்) | | (8) கடன் சேவை விகிதம் (பொருட்கள் சேவைகள் ஏற்றுமதி மீது) | | (9) மூலவளங்களின் பின் பாய்ச்சல் (கடன் சேவை மொத்த பங்கில்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | a காலம்[1] | b காலம்[2] | c காலம்[3] | 1965 | d 1985 | 1965 | e 1985 | 1975 | 1975 | 1985 | 1970 | 1984 | 1976 | 1986 | 1972 | 1986 | 1972 | 1985 | 1975 | 1985 |
| இந்தியா | 3.37 | - | 5.0 | 15 | 17 | 31 | 41 | 46 | 41 | 45 | -131 | -4101.8 | 29.9 | 48.9 | 59.9 | 64.3 | m 15.7 | m 21.4 | n 43.3 | n 51.5 |
| பாகிஸ்தான் | 6.42 | 4.34 | 6.66 | 14 | 20 | 40 | 47 | 43 | 24 | 28 | -538 | -3750 | i 38.1 | 53.9 | 73.1 | 58.0 | 19 | 32.0 | 23.4 | 87° |
| இலங்கை | 5.0 | 2.9 | 5.4 | 17 | 15 | 51 | 46 | 14 | 24 | 23 | -353 | -1697.6 | j 54.3 | k 55.0 | 40.8 | 68.8 | 22 | l 27.6 | p 52.0 | 73.4 |
| பங்களாதேஷ் | -0.3 | 4.1 | - | 5 | 8 | 36 | 36 | 64 | 24 | 35 | h -426 | -1690 | - | - | 31 | உ. கி. | 18 | 17.0 | - | 17.0 |

குறிப்புக்கள்; 1 a; இந்தியா (1975/76 - 1980/81). பாகிஸ்தான் (1960-1969) இலங்கை (1969-1970) பங்களாதேஷ் (1970-1975)

b: பாகிஸ்தான் (1973-77), இலங்கை (1973-1977), பங்களாதேஷ் (1975-1984)

c: இந்தியா (1981/82-1985/86) பாகிஸ்தான் (1977-1988)

2 d: பொருளுற்பத்தி (உணவு பதப்படுத்தல், புடவை, ஆடை இரசாயனங்கள் போன்ற) அனைத்து உற்பத்திப் பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ளது (நிர்மாணம், மின்சாரம், வாயு, நீர் நீங்கலாக)

e: சேவை - அனைத்து வகை வியாபாரங்களையும் வர்த்தகங்களையும் உள்ளடக்கியது.

3 f; "ஒரே வறுமைக் கோட்டினை அடிப்படையாக கொண்டு உலக வங்கி தரவுகளின் அடிப்படையில் இம்மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆளொருவருக்கு நாளொன்றுக்கு 2250 கலோரிகளை வழங்கும் வருமானமே வறுமைக் கோடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது,

4 g; கைத்தொழில் இரசாயனங்கள், ஏனைய இரசாயனங்கள், பிளாஸ்டிக் உற்பத்திகள், கண்ணாடி மற்றும் கண்ணாடி உற்பத்திகள், இரும்பு, உருக்கு, உலோகப் பொருட்கள், போக்குவரத்து உபகரணங்கள், தொழில் சார் மற்றும் விஞ்ஞான உபகரணங்கள் ஆகிய கைத்தொழில்கள் மூலதனச் செறிவு மிக்க கைத்தொழில்களாக (சர்வதேச கைத்தொழில் வகைப்படுத்தல் நியமத்தின் பிரகாரம்) நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

5 h: 1972 - 73 6 i: 1979 j: 1978 k: 1985

7 l: 1986

8 m: இந்தியாவில் கடன் சேவை விகிதம் அனைத்துக் கடன்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது.

9 n: இந்திய மீள்பாய்ச்சல் கணிப்பீடுகளுக்கு உத்தியோக பூர்வ பாய்ச்சல்கள் மட்டுமே கணக்கில் எடுக்கப்பட்டன.

o: பாகிஸ்தானில் 1986 புள்ளி விவரம் பயன்படுத்தப்பட்டது. (ஆப்கன் அகதிகளுக்கான உதவிகள் சேர்க்கப்படவில்லை.)

p: 1978



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானால், மனிதனுக்கும் இயற்கைக்கும் வளர்ச்சிக்குமிடையே நிலையான உறவொன்றை எட்டியெழுப்ப முடியுமா என்பதே இங்குள்ள பிரச்சினையாகும்.

பகுதி 1

## வறுமை, நிதி நெருக்கடி மற்றும் மூலவள அழிவு

வளமார்ந்த ஒரு பிராந்தியம் வறிய மக்களால் சூழப்பட்டிருக்கிறது என்பதே தென்னாசியாவின் பாரம்பரிய முரண்பாடாகும். சுதந்திரத்துக்கு பிற்பட்ட காலத்தில் மேட்டுக் குடியினரால் இப்பிராந்தியத்தில் பின்பற்றப்பட்ட பொருளாதார வளர்ச்சி மாதிரி (வறுமையை ஒழிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டியிருந்த மூலவளங்களை) படிப்படியாக அழிவுறச் செய்துள்ளது. சுதந்திரம் கிடைத்து நாற்பதாண்டுகள் முடிந்துவிட்ட பின்னரும் கூட தென்னாசிய மக்கள் இன்னமும் அடிப்படை வசதிகளைப் பெற முடியாதவர்களாக இருந்து வருகிறார்கள். இப்பிராந்தியத்தில் செயற்படுத்தப்பட்டு வந்த பொருளாதார வளர்ச்சி மாதிரி வறுமையை அழிப்பதற்கு பதிலாக அதனைப் பரவச் செய்துள்ளது போல தோன்றுகிறது. இரண்டாவதாக இந்நாடுகளின் தரவுகளை ஒப்பிட்டு நோக்கும்போது ஒரே மாதிரியான பொருளாதார அமைப்பு மாற்றங்களையும், வளர்ந்துவரும் நிதி நெருக்கடிகளையும் காணமுடிகிறதா என்பது குறித்து பரிசீலிக்கப்படும். மூன்றாவதாக, இப்பிராந்தியத்தின் உள்ளார்ந்த ஆற்றல்கள் குறித்து விளக்கப்படும். இறுதியாக, பிழையான அபிவிருத்தி உத்திகள் காரணமாக இந்த மூலவள அடித்தளம் அழிக்கப்பட்டு வருவது எடுத்துக் காட்டப்படும்.

(மிகுதி அடுத்த இதழில்)

அட்டவணை 2

தென்னாசியாவுக்கான சமூக குறிகாட்டிகள்

| நாடு | (1) வருமானப் பகிர்வு (வருமானத் தொகுதி அடிப்படையில்) வருடம் | கீழ் குறைந்த 20% | நடுத்தர 60% | உயர் 20% | ஆகக் கூடிய 10% | (2) வறுமை (வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளோர் %) (1975) | (3) சுகாதார வசதிகளைப் பெற்றுள்ளோர் வீதம் மொத்தம் | நகரம் | கிராமம் | (4) பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுள்ளோர் வீதம் மொத்தம் | நகரம் | கிராமம் | (5) அறிவிக்கப்பட்ட மலேரியா சம்பவங்கள் (1984) | (6) தடுப்பு மருந்தேற்றக்கூடிய சில நோய்களால் ஏற்பட்ட மரணங்கள் (அயிரங்களில்) வட்டப்பு | சின்னம்மை | கக்குவான் இருமல் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 1975-76 | 7.0 | 43.6 | 49.4 | 33.6 | 46 | 8 | 30 | 1 | 55 | 80 | 47 | 2,023,462 | 298 | 782 | 189 |
| பாகிஸ்தான் | 1985-86 | 6.53 | 46.80 | 45.60 | 30.4 | 43 | 20 | 53 | 6 | 40 | 78 | 24 | 73,996 | 132 | 163 | 66 |
| இலங்கை | 1980-81 | 5.8 | 44.5 | 49.8 | 34.7 | 14 | 67 | 80 | 63 | 37 | 76 | 26 | 149,470 | கி. வி. | கி. வி. | கி. வி. |
| பங்களாதேஷ் | 1981-82 | 6.6 | 48.1 | 45.3 | 29.5 | 64 | 4 | 21 | 2 | 41 | 29 | 43 | 31,787 | 1198 | 173 | 69 |

| நாடு | (7) வைத்தியர் ஒருவருக்கான சனத்தொகை 1965 | 1981 | (8) ஆஸ்பத்திரிக் கட்டில் ஒன்றுக்கான சனத்தொகை 1981-82 | (9) சிசு மரண விகிதம் (1 வயதுக்குக் கீழ்) 1965 | 1985 | (10) குழந்தை மரண விகிதம் (வயது 1-4) 1965 | 1985 | (11) தொடக்கப் பள்ளி சேர்வு வீதம் 1965 | 1984 | (12) உயர்தரப் பள்ளி சேர்வு வீதம் 1965 | 1985 | வருடம் | (13) தொழிற் கல்வியில் சேர்வு (பள்ளி %) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 4,880 | 3,700 | 634 | 151 | 89 | 23 | 11 | 74 | 90 | 27 | 34 | 1975 | 0.7 |
| பாகிஸ்தான் | 3,480* | 2,910 | 1,737 | 149 | 115 | 23 | 16 | 40 | 42 | 12 | 15 | 1978 | 1.3 |
| இலங்கை | 5,800 | 7,460 | 350 | 63 | 36 | 6 | 2 | 93 | 103 | 35 | 61 | 1976 | 0.4 |
| பங்களாதேஷ் | 8,400 | 9,700 | 4,545 | 153 | 123 | 24 | 18 | 49 | 62 | 13 | 19 | 1976 | 0.5 |

குறிப்புக்கள்;

(a) இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேயாளம், பங்களாதேஷ்
(b) உலக அபிவிருத்தி அறிக்கையிலிருந்து பெறப்பட்ட தரவுகள் (1986).
(c) துணை ஆளணியையும் உள்ளடக்கியது.
(d) தொழில் நுட்பவியலாளர்களையும் உள்ளடக்கியது.
(e) பிரதானமாக ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர்.
(g) பொருளாதார ரீதியில் செயலூக்கமுள்ளவர்கள் தொடர்பான தரவுகள்.
(h) 1972

ஆதாரம்


1. உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கை, 1987;
2. 'ஜர்னல்' ஒப் டிவலப்மன்ட் எக்கனமிக்ஸ், 1979 (3)
3, 4, 5 உலக மூலவளங்கள் நிறுவனம், நியூயோர்க், 1987.
6. யுனிசெப், உலக சிறுவர் நிலை, 1985.
7. உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கை 1987.
8. ஐ. நா. புள்ளிவிவர ஆண்டு நூல், நியூயோர்க் 1983/84 1986.
9, 10 உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கை, 1987.
11, 12 உலக வங்கி, உலக அபிவிருத்தி அறிக்கை, 1987.
13. உலக வங்கி, உலக அட்டவணைகள், 1983; உலக வங்கி, இந்திய பொருளாதார நிலையும் அபிவிருத்தி வாய்ப்புக்களும், 1986.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தியில் தெங்கு அபிவிருத்தி செய்திட்டங்களின் தாக்கம்

டி. வீ. லியனகே

மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் பட்டப்பின் படிப்பைப் பெற்ற கலாநிதி லியனகே லுணுவிலையில் அமைந்துள்ள தெங்கு ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பத்தில் (1960 - 1966) பணிபுரிந்தார். அவர் 1966 - 1983 காலத்தில் உணவு விவசாய ஸ்தாபனத்தில் தெங்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிபுணர் ஒருவராக பணியில் அமர்த்தப்பட்டிருந்தார். பின்னர் தெங்கு ஆராய்ச்சி சபையில் தலைவராகவும் அவர் சிறிது காலம் பணியாற்றினார்.

தென்னை உற்பத்தி நிலங்களின் உற்பத்தியையும், விளைதிறனையும் விருத்தி செய்வதற்காக அரசாங்கம் 1949ஆம் ஆண்டிலிருந்து அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்தி வந்துள்ளது. மானியங்களுடன் கூடிய உள்ளீடுகள், கள வேலைகளுக்கு செலவிடப்பட்ட தொகையின் ஒரு பாகத்துக்கான கொடைகள் போன்றவற்றையும் அவை உள்ளடக்கியிருந்தன. தெங்கு உற்பத்தியில் இவை ஏற்படுத்திய தாக்கத்தை மதிப்பிடுவதற்கு இக்கட்டுரை முயற்சிக்கிறது.

தெங்கு உற்பத்தி பல்வேறு காரணிகளில் தங்கியிருக்கிறது. குறிப்பாக, மழை, உள்ளீடுகள், காய்ந்த காலநிலை என்பன இவை அமைகின்றன. இதில் கடைசியாக கூறப்பட்ட காரணி மிக முக்கியமானதாகும், ஏனெனில், காய்ப்பு மாதாந்த இடைவெளிகளில் இடம்பெறுவதுடன், அதற்கான வளர்ச்சி நீண்ட காலத்தில் பல சூழல் காரணிகளின் பாதிப்புக்குள்ளானதாக ஏற்படுகிறது. தென்னம் பூவின் தோற்றம் முதிர்ச்சியடைந்த தேங்காய் உருவாவதற்கு 29 மாதங்கள் வரையில் செல்கின்றன. இந்த பருவகாலத்தில் நடைமுறை நோக்கங்களுக்காக இக்காலம் 3 வருடங்களாக எடுக்கப்படுகிறது.

இதனையடுத்து மூன்றாண்டு அசைவுச் சராசரிகள் தரப்படுகின்றன. அதாவது, 1980ஆம் ஆண்டிற்கான அசைவுச் சராசரி என்பது 1978, 1979, 1980 ஆகிய ஆண்டுகளுக்கான தரவுகளின் சராசரியாகும். மேலும், தெங்கு உற்பத்திக்கான சராசரி விளைச்சல் தரும் நிலப்பரப்பை மட்டுமே அடிப்படையாகக் கொள்ளுகிறது. விவசாய தொகை மதிப்பு அறிக்கை 88% மரங்கள் விளைச்சலைத் தருகின்றன எனத் தெரிவிக்கிறது.

## தென்னை அபிவிருத்தி திட்டங்கள்

தென்னை அபிவிருத்தி திட்டங்கள் புனருத்தாரணம், மீள் நடுகை, புது நடுகை மற்றும் தென்னை மானியத் திட்டமென்பன இலங்கையில் தென்னை நடுகை சம்பந்தமாக உள்ளடக்கியுள்ளன. விளைச்சலை அதிகரிப்பதற்கான தென்னை மரங்களின் கீழ் கொக்கோ, கோப்பி, மிளகு போன்றவற்றைக் கொண்ட திட்டங்கள் இங்கு கவனத்திற் எடுக்கப்படவில்லை. பல்வேறு தடங்கல்களின் காரணமாக சிறு உற்பத்தியாளர்களும், தோட்டத் துறையும் இத்திட்டங்களுக்கு ஆதரவளிக்கவில்லை.

## முதலாவது திட்டம்

1946ஆம் ஆண்டின் விவசாய தொகை மதிப்பு அறிக்கையின்படி 451,400 ஹெக்டேயர் நிலம் தெங்குப் பயிர்ச் செய்கையின் கீழ் இருந்தது. இதில் சுமார் 40,000 ஹெக்டேயார் பரப்பு 60 வருடங்களுக்கு மேல் பழமையானதாக இருந்தது. இக்கண்டுபிடிப்புக்களையடுத்து, தெங்கு கைத்தொழிலை புனருத்தாரணம் செய்வதற்கான வழிமுறைகளை சிபார்சு செய்யவென இலங்கை தெங்கு ஆணைக்குழு நியமனஞ் செய்யப்பட்டது. மீள் நடுகையையும், புதுநடுகையையும் இது சிபார்சு செய்தது.

தெரிவு செய்யப்பட்ட தென்னை விதைகளின் விநியோகம் 1949ஆம், மானியத்துடன் கூடிய உர விநியோகம் 1956ஆம் ஆரம்பமாகியது. தோட்டத்துறை உரத்துக்கான செலவில் மூன்றிலொரு பங்கினை மானியமாக பெற்றது. சிறு தோட்டச் சொந்தக்காரர்களுக்கு இச்செலவில் பாதியளவு மானியமாக கொடுக்கப்பட்டது. உர மானியத் திட்டம் 1978ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.

## இரண்டாவது திட்டம்

மானியத்துடன் கூடிய தென்னை விதைகள், இடை வெளிகளை நிரப்புவதற்கான பண ரீதியான மானியங்கள், பிரயோசனமற்ற மரங்களை அகற்றுதல், பழுதானவற்றை வெட்டுதல் போன்றன 1974ல் அறிமுகப்படுத்தப்பட்டன. மீள் நடுகை, புது நடுகை

என்பன 1977ல் அறிமுகப்படுத்தப்பட்டன.

1988ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதியிலிருந்து அமுல் செய்யப்படும் மானிய விகிதங்கள் வருமாறு:

1988 ஆம் ஆண்டு முடிவு வரையில் இந்த மானியத்திட்டத்தின் செயற்பாடு வருமாறு:

அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 1978 சூறாவளியின் போது நாசமாக்கப்பட்ட 12,000 ஹெக்டயார் தென்னை நிலம் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இக்கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு அவசியமான அனைத்து உள்ளீடுகளையும் வழங்கிய விரிவான திட்டமொன்றாக அது இருந்தது. சமீபகாலத்தில் இத்திட்டம் குறித்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படவில்லை.

| | | | |
|---|---|---|---|
| சிறு நடுகை: | ஒரு ஹெக்டயாருக்கு | ரூ. 12,000 | மூன்று தவணைகளில் |
| மீள் நடுகை: | ,, | ரூ. 12,000 | ,, |
| புது நடுகை: | ,, | ரூ. 11,500 | ,, |

| வகை | அபிவிருத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு - ஹெக்டயார் | பணக்கொடுப்பனவுகள் (ரூபா) |
|---|---|---|
| புனருத்தாரணம் | 31,200 | 93,400,000 |
| சிறு நடுகையும் மீள் நடுகையும் | 31,200 | 127,200,000 |
| புது நடுகை | 26,200 | 125,900,000 |

## சிட்ரனெல்லா நிலங்களில் தென்னை பயிரிடுதல்

சிட்ரனெல்லா பயிர்ச்செய்கையினால் இலாபம் பெற முடியாத நிலையிலிருக்கும் விவசாயிகளுக்கு உதவுவதற்காக இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் சுமார் 9,000 ஹெக்டயார் நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டது. தென்னை விதைகளும், உரவகைகளும் இலவசமாக வழங்கப்பட்டன. திருப்திகரமான முறையில் பராமரிப்பு இடம்பெற்று வந்தால் 8 வருடகாலங்களுக்கு ஹெக்டயாருக்கு 50 நாள் வழங்கப்பட்டு வரும், இதற்கென 66 இலட்சம் ரூபா செலவிடப்பட்டது. விநியோகிக்கப்பட்ட விதைகளில் பெருந்தொகையானவை வரட்சி மற்றும் புறக்கணிப்பு என்பன காரணமாக அழிந்துவிட்டன.

## இழந்தவற்றை புனருத்தாரண திட்டம்

மட்டக்களப்பு, பொலன்னறுவை,

## கிழநிலைத் திட்டம்

விவசாயிகளில் 87 சதவீதமானோர் அடிப்படையான கடமைகளையும், பழைய மரங்களை அகற்றும் வேலைகளையும் பூர்த்தி செய்யாதிருந்தமையால் இரண்டாவது, மூன்றாவது தவணைப்பணத்தினைப் பெறும் தகைமையை அவர்கள் இழந்திருந்தனர். இதன் விளைவாக இத்திட்டம் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்கியது. ஒரு சொட்டேனும் இதனை வெற்றிகரமாக மேற்கொள்வார்கள் என்பதற்கான சான்றுகள் தென்படுகின்றன. சாத்தியமான இளமையான மரங்களைக் கொண்ட காணித்துண்டுகளை மீள் நடுகைக்காக தெரிவு செய்தமை இத்திட்டத்தின் அடிப்படைக் குறைபாடுகளில் ஒன்றாகும். இப்படியாகிய இளமையான மரங்களை அகற்றுவதற்கு விவசாயிகள் தயக்கம் காட்டினார்கள்.

## மீள்நடுகை திட்டங்கள்

செயல்படுத்தும் முகவரகம் இதற்குரிய முன்கொடுப்பனவுகளை கொடுக்கத் தவறியமை இதன் முக்கிய பிரச்சினையாகும். விவசாயிகளில் 17 சதவீதமானோர் மட்டுமே மானியத்தின் கடைசி இரு தவணை உதவிகளையும் பெறுவதற்கு தகைமை பெற்றிருந்தனர். மறுபுறத்தில், இருப்புத்தொகையில் மாதிரி அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சிறிய திட்டமொன்று வெற்றிகரமாக அமைந்திருக்கிறது. இந்த 166 காணித்துண்டுகளைக் கொண்ட 66 ஹெக்டயார் நிலப்பரப்பில் விருத்தி செய்யப்பட்ட தென்னை விதைகளைக் கொண்டு மீள் நடுகை மேற்கொள்ளப்பட்டது. தென்னை மரங்களுடன் இடைப்பயிர்ச் செய்கையாக முக்கியமாக வாழை மரங்கள் நடப்பட்டன. தென்னை மரங்கள் விளைச்சலைத் தரும் வரையில் இந்த இடைப்பயிர்கள் விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தைக் கொடுத்தன.

## புது நடுகைத் திட்டம்

தென்னம் பயிர்ச் செய்கைக்கு பொருத்தமற்ற சுற்றாடல்களில் இப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. விதைக்கப்பட்ட விதைகளில் செத்துப்போன விதைகளின் அளவு மிக உயர்வாக இருந்ததாக அறிவிக்கப்பட்டது. புத்தளம் மாவட்டத்தில் வரட்சி காரணமாக 47% கன்றுகள் செத்துவிட்டன.

மீள்நடுகை மற்றும் சிறு நடுகை செய்யப்பட்ட 12,000 ஹெக்டயார் நிலப்பரப்பு குறித்து மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு, 1986ல் 1,750 ஹெக்டயார் நிலம் விளைச்சலைத் தரும் என்று தெரிவித்தது. ஆனால், இதில் 25 ஹெக்டயார் நிலத்தின் அளவுக்கு 1.4% மட்டுமே விளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட கிடைத்தது. இந்த நாமதும், முதலீட்டின் அதிகமான தொகை அரசாங்கமும், பயிரிடுவோரும் இருப்பதற்கு வழி கோலுகிறது.

இந்த திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்பட்ட தெங்கு விதைகள் குறித்த விபரங்கள் வருமாறு

| | | |
|---|---|---|
| 1950 - 1969 | : | 2,590,000 |
| 1961 - 1970 | : | 15,200,000 |
| 1971 - 1980 | : | 13,400,000 |
| 1981 - 1988 | : | 13,900,000 |
| மொத்தம் | : | 31,100,000 |

திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக 1974 இருந்து 1988 வரையில் 371,350,000 செலவிடப்பட்டுள்ளது.

## தெங்கு உற்பத்தி போக்குகள்

தென்னம் பயிர்ச் செய்கையின் கீழ் இருந்த நிலப்பரப்பு 1962ல் 466,000 ஏக்கர்களாக இருந்தது. இது 1981ல் 419,000 ஏக்கர்களாக வீழ்ச்சியடைந்திருந்தது. இப்பொழுது சுமார் 490,000 ஏக்கர் நிலப்பரப்பில் தெங்குப் பயிர்ச் செய்கை இடம் பெறுகிறது என்று கருதலாம். தேங்காய்களின் உள்நாட்டு நுகர்வு 1960ல் 133 கோடியே 70 இலட்சம் காய்களாக இருந்தது. 1988ல் 170 கோடி காய்களாக அதிகரித்திருந்தது. தட்ப வெப்ப நிலைமைகள் சீர்குலைந்துள்ளதுடன் ஒவ்வொரு வருடத்திலும் வறட்சி நிலைமை மாதங்கள் அடிக்கடி வந்து போவதனாலும் [illegible] 88% நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. கைத்தொழில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது.

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கம் உற்பத்தியை அதிகரிப்பதும், விளைதிறனைப் பெருக்குவதுமா

அட்டவணை 1

தெங்கு விளைச்சல் - நிகழ்ச்சித் திட்டத்துக்கு முந்திய காலப்பகுதியுடன் தொடர்பு

| | ஹெக்டேயருக்கான காய்கள் சராசரி | % | ஒவ்வொரு வருடத்துக்குமான வறட்சி மாதங்கள் | % | உரப்பாவனை அளவு (மெட். தொன்) |
|---|---|---|---|---|---|
| (அ) 1950 - 1955 | 5,800 | 100 | 2.33 | 100 | 14,200 |
| (ஆ) 1961 - 1970 | 6,400 | 110 | 1.95 | 82 | 54,000 |
| (இ) 1971 - 1980 | 5,980 | 103 | 2.57 | 225 | 41,000 |
| (ஈ) 1981 - 1988 | 6,700 | 116 | 1.81 | 83 | 39,000 |

★ பயன்படுத்தப்பட்ட வருடாந்த சராசரி அளவு

கும். மூலையாவது நிகழ்ச்சித் திட்டம் தெங்கு ஆலோசனைக்குழுவின் சிபாரிசின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. அதன் பிறகு மூன்று திட்டங்கள், கைத்தொழில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து சரியான மதிப்பீடு எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில், அவசியமான தேவைகளுக்கேற்ப தயாரிக்கப்படாதவையாக இருந்தன.

தெங்கு உற்பத்திப் போக்குகள் அட்டவணை 1ல் தரப்பட்டுள்ளன. 1950 - 1955 காலப்பகுதி நிகழ்ச்சித் திட்டத்துக்கு முந்திய காலம் என்று கருதப்படுகிறது.

தெங்கு உற்பத்தியில் 1960 தொடக்கம் திருப்தியான ஒரு போக்கு நிலவி வந்திருப்பதனை அட்டவணை 1 காட்டுகிறது. 1961 - 1970 காலப்பகுதியில் 10% விளைச்சல் அதிகரிப்பு காணப்பட்டது.

சாதகமான தட்ப வெப்ப நிலைகள் காரணமாக 1971-1980 காலப்பகுதியில் உற்பத்தி வீழ்ச்சி கண்டது. இது தவிர, நிலச் சீர்திருத்தத்தின் பின்னர் முகாமை முறைகளில் ஏற்பட்ட சீர்குலைவும் உற்பத்தி வீழ்ச்சிக்கு பங்களிப்புச் செய்தது. 1981-83 காலப்பகுதியில் விளைச்சல் உயர்ந்து காணப்பட்டது. 1985 ஆம் ஆண்டிலும் 1986 ஆம் ஆண்டிலும் உற்பத்தியில் காணப்பட்ட உச்ச நிலைமையின் போது ஹெக்டேயர் ஒன்றுக்கான விளைச்சல் 8300, 8600 காய்களாக இருந்தது. நல்ல கால நிலை, நடுகைப் பொருட்கள், அபிவிருத்தி நடவடிக்கைகள், உரப்பாவனை போன்ற காரணிகள் இதற்கு பங்களிப்புச் செய்திருக்க முடியும். வறட்சி நிலவிய காலப்பகுதி ஆண்டொன்றுக்கு 2.1 மாதம் என்ற குறைவாக இருந்த 1951-1955 காலத்தின் போது, 1961ல் ஹெக்டேயர் ஒன்றுக்கு 7300 காய்கள் விளைச்சல் கிடைத்தது. 1950 ஆம் வருடத்துக்கும் 1984 ஆம் வருடத்துக்கும் இடையில் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய விளைச்சல் மட்டம் இதுவாகும். 1950 - 1965 காலத்தில் பயிர்ச் செய்கையாளர்களுக்கு 1 கோடியே 60 இலட்சம் தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இவற்றில் 65% கன்றுகள் தப்பிப்பிழைத்தன என்று அனுமானிக்கும் பட்சத்தில், 1985 அளவில் 10 இலட்சம் மரங்கள் முழு விளைச்சல் தரும் நிலையில் இருந்திருக்க முடியும்.

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவாக சாத்தியமாகியிருக்கக் கூடிய தெங்கு உற்பத்தி பெருக்கத்தை இரு முக்கியமான காரணிகள் மட்டுப்படுத்தியுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லை, விரிவாக்கல் மற்றும் காலநிலை என்பனவே அவை. நாடெங்கிலும் சிதறிக்கிடக்கும் சிறு தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பயிற்றுவிக்கப்பட்ட விரிவாக்கல் பணியாளர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாகவே இருந்தது. இதனால் விரிவாக்கல் பணியினை முழு அளவில் மேற்கொள்ள முடியவில்லை. வரட்சி நிலவும் காலங்களில் தென்னை உற்பத்தி குறைவாக இருக்கிறது என்பது தெரிந்ததே. ஆனால், மண்ணின் ஈரப்பதனை பாதுகாப்பதனை ஊக்குவிப்பதற்கு 1958 தொடக்கம் 1973 வரையில் எத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## வரட்சியும் உற்பத்தியும்

தென்னை மரம், தேவைப்படும் போது உறிஞ்சிக்கொள்வதற்கென நீரைச் சேமித்து வைப்பதில்லை. சூழவுள்ள நிலத்திலிருந்து நீரை உறிஞ்சிக்கொள்வதில் அது முற்றிலும் தொடர்ந்தும் தங்கியிருக்கிறது. அதனால், தென்னையின் வளர்ச்சிக்கும், உற்பத்திக்கும் மண்ணின் ஈரத்தன்மை அதிக முக்கியத்துவமுள்ளதாகும்.

## எதிர்கால திட்டங்கள்

விவசாயப் பிரச்சினைகளைத் தவிர தெங்குக் கைத்தொழிலை பாதித்து வரும் அடிப்படையான, முன்கூட்டியே கணித்துச் சொல்ல முடியாத காலநிலையாகும் என்று கூறப்படுகிறது. இது உற்பத்தியாளருக்கு பல வழிகளிலும் நட்டங்களை ஏற்படுத்தி வருகிறது. இத்தவிர்க்க முடியாத காரணிகளை அடிப்படையாகக்கொண்டே வருங்காலத் திட்டங்கள் வகுக்கப்படுதல் வேண்டும். வரட்சியினால் ஏற்படும் சேதங்களை குறைக்கும் பொருட்டு பயிர்ச்செய்கை பௌதிக, உயிரியல் முறைகளைப் பின்பற்று

அட்டவணை 2

வரட்சி உற்பத்தியில் ஏற்படுத்தும் தாக்கம்

| வருடமொன்றிற்கு வரட்சிக் காலம் (அண்ணளவாக) | காய்கள் (ஏக்கர் ஒன்றுக்கு) |
|---|---|
| 2 மாதங்கள் அல்லது குறைந்த | 6600 |
| 2.1 - 2.5 மாதங்கள் | 6400 |
| 2.6 - 3.0 மாதங்கள் | 5800 |
| 3.1 - மாதங்கள் அல்லது அதிகம் | 3450 |

முறை மூலம் நீர்ப்பாசன முறை சிறந்ததாக இருந்த போதிலும் அதற்கான செலவு அதிகமாகும்.

ஆகவே தெங்கு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான முன்னுரிமைகளாக பின்வருவன அமைதல் வேண்டும். (1) தெங்கு காணிகளுக்கு நியாயமான ஒரு பண்ணைவாசல் விலையை உறுதி செய்தல், (2) வரட்சி சேதத்தினை குறைந்த மட்டத்தில் வைத்திருத்தல், (3) செயற்கை உரங்களில் தங்கியிருப்பதனை குறைக்கும் பொருட்டு உயிரியல் ரீதியான பண்ணை முகாமை முறைகளை ஊக்குவித்தல், (4) தரமான விதைகளை தொடர்ந்தும் விநியோகித்தல், (5) குறித்த வயதுகளைக் கொண்ட தோட்டங்களில் மீள்நடுகை, (6) பொருத்தமான விரிவாக்கல் பணியை வழங்குதல்.

இவற்றை உள்ளடக்கிய விரிவான அபிவிருத்தித்திட்டமொன்றை மேற்கொள்வது (பிரதான) துறைக்கு காரணமாக அமைக்கப்படுமாயின், அபிவிருத்தி நடவடிக்கைகளை தற்காலிகமாக இடை நிறுத்தி வைத்துவிட்டு, அந்த நான்காண்டுகளில் மண்ணின் ஈரப்பதனைப் பாதுகாக்கும் முயற்சிக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும் நிதிகளை பயன்படுத்துவது புத்திசாலித்தனமானதாகும். இது மட்டும் ஆண்டொன்றுக்கு 330 கோடி காய்களின் உற்பத்திக்கு உத்தரவாதமளிக்க முடியும்.

(15 ம் பக்கத் தொடர்ச்சி)

கள் எளிதில் கூறிவிட முடியும். ஒரு வகையில் அப்படிச் சொல்லாது விடுவதும் சரியானதே. ஆனால், ஓர் அடிப்படை அம்சத்தில் பாகிஸ்தான் அரசு - அங்கு இராணுவம் மேலாதிக்கத்தை வைத்திருப்பதால் - இலங்கை அரசிலிருந்து வேறுபடுகிறது. இலங்கை அரசில் 1948 - 1990 காலப்பகுதியில் இராணுவம் முதன்மை பெற்றிருக்கவில்லை. ஆனால், இப்பொழுது உயர் அளவிலான இராணுவச் செலவுகளுடன், இராணுவம் பெருமளவுக்கு முதன்மை பெறும் ஒரு நிலைமையை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம். அரசியல் சாசன பூர்வமான ஜனநாயகத்திலிருந்து அரசியல் சாசன சர்வாதிகாரத்தை நோக்கியதாக இந்த நகர்வு உள்ளது. சர்வஜன வாக்குரிமை பெற்றதற்குப் பின் இந்நாடு அரசியல் சாசன சர்வாதிகார மொன்றின் கீழ் இருந்து வந்திருக்கிறது என்று கூறுவேன்.

இந்த அமைப்பில், பாசிசத்தின் எழுச்சியொன்று வருவதனையும் பார்க்கிறோம். இந்தப் போக்குகள் அரச அமைப்புக்குள் இருந்து வருவனவை. கீழ்மட்டத்திலிருந்தும், ஜனரஞ்சகவாதத்திலும், மக்களிடையே அரசுக்கு எதிர்ப்பு என்ற அணிகளிலிருந்தும் இது வருகிறது. எழுச்சி கண்டுள்ள புதிய அமைப்பு நிலைமை இது. ஒரு மார்க்சியவாதி என்ற முறையிலும் (பாசிசத்தின் எழுச்சி குறித்த சிறந்த பகுப்பாய்வுகளைச் செய்த) ரோசன்பேர்க் போன்ற மார்க்சிய ஆசிரியர்களின் கருத்துக்களிலிருந்தும், ஜனநாயக இடைவெளியாளர் கருத்துக்களிலிருந்தும் பாசிசம் மிக அதிகாரபூர்வமாக வருகிறது என்று கூறுவேன். அது பொதுவாக வெளிப்படுத்தி வருகிறது. ஆகவே, இன்றைய சூழ்நிலையில் இலங்கையுள்ள தமிழ் தொடர்பியுள்ளன இவற்றை நாங்கள் கவனமாக உணர வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத் திட்டம் 1991 சில பின்னணி தகவல்கள்

பேராசிரியர். வைத்தியநாதன்
(ஆராய்ச்சிப் பகுதி, மக்கள் வங்கி)

இக்கட்டுரை 1991 ஆம் வருட வரவு செலவுத்திட்டம் குறித்த சில பின்னணித்தகவல்களை தருகிறது.

மதிப்பிடப்பட்ட நடு ஆண்டு குடித்தொகை (1989) 1 கோடியே 63 இலட்சமாகும். அண்மைய 1989 ஆம் ஆண்டுடன் ஒப்பு நோக்குகையில் இது 1.8% வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. 1989ல் உண்மை தேறிய உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2.3 சதவீதமாக (1988ல் 2.7%) இருந்தது. மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி 2.2% ஆக (1988ல் 2.6%) இருந்தது. பிரதானமாக, வட்டிக் கொடுப்பனவுகளின் வடிவில் காரணி வருமானத்தின் வெளிப்பாய்ச்சல் காரணமாகவே மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் மொத்த தேசிய உற்பத்திக்கும் இடையில் வித்தியாசம் காணப்படுகிறது.

கடன் சேவைக் கொடுப்பனவுகளும் வட்டிக் கொடுப்பனவுகளும் 1989ல் முறையே 37.1 கோடி சிறப்பு எடுப்பனவு உரிமைகளாக இருந்தன. 1989ல் வெளிநின்ற மொத்த வெளிநாட்டுக் கடன் 326 கோடி சி. எ. உ. களாகும். இதற்கான வட்டிக் கொடுப்பனவு 15.1 கோடி சி. எ. உ. களாக இருந்தது. கடன் சேவை விகிதம் 34% ஆகும். (கடன் சேவை விகிதம் ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் தனியார், பண அனுப்பீடுகள் என்பவற்றின் 20.8% ஆக இருந்தது.)

பொருளாதாரத்தின் பிரதான இந்த துறைகளின் செயலாற்றுகை 1989ல் பின்வருமாறு அமைந்தது. (பண வீக்கத்துக்கான சீராக்கங்கள் செய்யப்படவில்லை.)

| | 1988 | 1989 |
|---|---|---|
| விவசாயம், காட்டுத்தொழில், மீன்பிடித்தொழில் | 2.2 | 2.1 |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 5.4 | 9.0 |
| பொருளுற்பத்தி | 2.4 | 4.9 |
| நிர்மாணம் | 0.8 | 1.5 |
| சேவைகள் | 2.2 | 2.2 |

சேவைகள் துறையைத் தவிர ஏனைய அனைத்து துறைகளினதும் வளர்ச்சி வீதங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையை இது காட்டுகிறது. உள்நாட்டுக் கலவரங்களும் சேவை திருத்தங்களுமே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும். அமெரிக்க டொலர், சி. எ. உ. என்பவற்றுக்கும் இலங்கை ரூபாவுக்கும் இடையிலான செலாவணி வீதங்களில் அடிப்படை ஏற்பட்டுள்ள ஒரு மாற்றமானது பெரும் பணவீக்க விகிதமும் உயர்ந்திருக்கிறது. அமெரிக்க டொலருடனான இலங்கை ரூபாவின் பெறுமதி 1987ல் ரூ. 31.81 ஆக இருந்து 1989ல் ரூ. 36.05 ஆக அதிகரித்திருக்கிறது. 1988ல் ஒரு சி. எ. உ. வின் பெறுமதி 43.76 ஆக இருந்து 1989ல் 46.19 ஆக உயர்ந்து சென்றுள்ளது. அமெரிக்க டொலருக்கான தற்போதைய (1-11-1990) செலாவணி விகிதம் ரூ. 40.46 ஆகும்.

பொருளுற்பத்தியும் சேவைகள் துறைகளே 1989ல் பொருளாதார வளர்ச்சிக்கு பிரதான பங்களிப்பினை வழங்கியிருந்தன. விவசாய (பெருந்தோட்டங்களை) பதப்படுத்தல் கைத்தொழில்களும், சிறு கைத்தொழில்களும் 4.4% பங்களிப்பினை நல்கின. சேவைத் துறையில் உல்லாசத்தொழில் காப்புறுதி, வியாபாரம், பொது நிர்வாகம், பாதுகாப்பு போன்ற பிரிவுகள் உயர் வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன.

பெரும்பாலான பண்டங்களின் விலைகள் 1989ல் வீழ்ச்சியடைந்தமையுடன் வெளிநாட்டுத்துறை கடுமையான பின்னடைவினை எதிர்கொண்டது. தேயிலையில் 9% இறப்பரில் 10% நெல்லில் 17% என உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டது. 1988ல் 7103 கோடி ரூபாவாக (சி. எ. உ. 1661) இருந்த மொத்த இறக்குமதிகள் 1989ல் 8,022.5 கோடி ரூபாவாக (சி. எ. உ. 1787) அதிகரித்தன. விவசாய ஏற்றுமதிகள் 4693.8 கோடி ரூபாவிலிருந்து (சி. எ. உ. 1097) 5,617.5 கோடி ரூபாவாக (சி. எ. உ. 1,216) உயர்ந்து சென்றன. 1988ல் சம 563 ஆக இருந்த வர்த்தக நிலுவை, 1989ல் சம 542 ஆக இருந்தது.

## வரவு செலவுத்திட்டம் 1991

1991 ஆம் ஆண்டுக்கான அரசாங்க வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகள் நிதியமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டுக்கான மதிப்பிடப்பட்ட வருமானம் 7,200 கோடி ரூபாவாகும். செலவு 13,900 கோடி ரூபாவாகும். இதில் மீண்டுவரும் செலவு 7,550





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரமும் வரவு செலவுத் திட்டமும்

**அட்டவணை 1**

**பிரதான பொருளாதார குறிகாட்டிகள் - இலங்கை**

| | | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 |
|---|---|---|---|---|---|---|
| மொ. உ. உ. | % மாற்றம் | 4.3 | 1.6 | 3.0 | 4.4 | 4.5 |
| விவசாயம் | " | 0.7 | -5.6 | 2.6 | 4.1 | 4.1 |
| கைத்தொழில் | " | 8.1 | 5.3 | 5.6 | 6.5 | 6.8 |
| சேவைகள் | " | 4.0 | 3.2 | 1.7 | 3.2 | 3.3 |
| மொத்த உள்நாட்டு முதலீடு | மொ. உ. உ. யின் % | 23.1 | 23.2 | 21.9 | 21.3 | 21.0 |
| மொத்த தேசிய சேமிப்பு | " | 16.3 | 17.9 | 16.8 | 16.4 | 16.7 |
| மொத்த உள்நாட்டு சேமிப்பு | " | 12.5 | 15.2 | 14.4 | 14.8 | 15.2 |
| பணவீக்க விகிதம் | நு. வி. சுட்டெண்ணில் மாற்றம் % | 8.0 | 7.7 | 14.5 | 10.0 | 7.0 |
| ஏற்றுமதிகள் | 100 கோடி டொலர் | 1.21 | 1.39 | 1.43 | 1.61 | 1.84 |
| | மாற்றம் % | -8.2 | 15.3 | 2.6 | 12.6 | 14.3 |
| இறக்குமதிகள் | 100 கோடி டொலர் | 1.76 | 1.87 | 1.92 | 2.08 | 2.23 |
| | மாற்றம் % | -4.0 | 5.8 | 2.9 | 7.9 | 7.6 |
| வர்த்தக நிலுவை | 100 கோடி டொலர் | -0.56 | -0.47 | -0.49 | -0.47 | -0.39 |
| நடைமுறை " | 100 கோடி டொலர் | -0.42 | -0.34 | -0.36 | -0.37 | -0.34 |
| கணக்கு நிலுவை | மொ. உ. உ. யின் % | -6.8 | -5.3 | -5.1 | -4.9 | -4.4 |
| கடன் சேவை விகிதம் | ஏற்றுமதிகளின் % | 15.3 | 16.8 | 16.9 | 15.1 | 12.2 |
| வெளிநாட்டுக் கடன் | 100 கோடி டொலர் | 4.1 | 4.7 | 4.8 | 5.1 | 5.5 |

ஆதாரம்: ஆசிய அபிவிருத்தி நோக்கு, 1989

கோடி ரூபாவாகும். மதிப்பிடப் பட்ட வரவு செலவு பற்றாக் குறை 6700 கோடி ரூபாவாகும், மேலதிக வருமானத்தில் பெரும் பகுதி (ரூ. 40 கோடி) வரிகளிலி ருந்தே கிடைக்கிறது.

புகையிலை மற்றும் மதுபானம் என்பவற்றிலிருந்து கிடைக்கும் வருமானம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இறக்கு மதிகள் மீதான புரள்வு வரி 200 கோடி ரூபாவாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இறக் குமதி தீர்வைகள் 220 கோடி ரூபாவாக இருக்கும். பின்வரும் பொருட்களிலிருந்து கணிசமான அளவில் இறக்குமதி தீர்வைகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள், பானங் கள், ஸ்பிரிட்கள், புகையிலை, கனிப்பொருள் உற்பத்திகள், இரசாயனம் மற்றும் அதுதொடர் பான கைத்தொழில்களின் உற் பத்திகள், வாகனங்கள் என்பன.


மதிப்பிடப்பட்ட 13,900 கோடி ரூபா செலவினத்தில் தேசிய கடன் சேவைக்கென 4480 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருக் கிறது. இது 2250 கோடி ரூபா வட்டிக் கொடுப்பனவையும் உள் ளடக்கியிருக்கிறது. குறுங்கால, நடுத்தரகால, நீண்டகால ரூபா கடன்கள், வெளிநாட்டுக் கடன் கள் போன்றவற்றுக்கு பிரதான மாக இந்த வட்டிக் கொடுப்பன வுகள் செல்கின்றன. இதற்கென ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை 1990ன் அளவிலும் விட சுமார் 1300 கோடி ரூபா அதிகமான தாக இருக்கிறது.

வரும் ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் பல்வேறு பிரச் சினைகளையும் சந்திக்க இருக் கிறது. கடந்த ஜூன் மாதம் ஆரம்பமான வட-கிழக்கு யுத்தம் விரைவில் முடிந்துவிடும் போல தோன்றவில்லை. 1990ல் மட்டும் மதிப்பிடப்பட்ட பாதுகாப்புச் செலவினம் 5000 கோடி ரூபா வாக இருந்தது. மத்திய வங்கி 200 கோடி ரூபா பெறுமதியான பாதுகாப்பு முறிகளை விற்பனை

**வரைபடம் 1**

**அரச செலவினம்**

மொ. உ. உ. யில் விகிதம்




ஆதாரம்: ஆசிய அபிவிருத்தி நோக்கு 198

செய்தது. இவற்றுக்கான வருட வட்டி 15% ஆக இருந்ததுடன் இவை மூன்றாண்டு காலத்தில் திருப்பிப் பெறப்படுதல் வேண் டும். மிகுதி 300 கோடி ரூபாவும் புதிய பணம் அச்சடிப்பதன்

**அட்டவணை 2**

**அமைச்சுவாரியாக அரச செலவினம்**

| அமைச்சு | ரூ. 100 கோடி | மொத்த செலவில் % |
|---|---|---|
| நிதி | 52.8 | 38.0 |
| பாதுகாப்பு | 11.7 | 8.4 |
| காணி, நீர்ப்பாசனம், மகாவலி | 5.3 | 3.8 |
| கல்வி, உயர்கல்வி | 6.3 | 4.6 |
| சக்தி, வலு | 5.2 | 3.7 |
| பொது நிர்வாகம், மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் | 17.2 | 12.4 |
| போக்குவரத்து, பெருந்தெருக்கள் | 6.9 | 5.0 |
| உணவு, கூட்டுறவு | 5.1 | 3.7 |

( ... பக்கம் பார்க்க )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடா நெருக்கடியும் இலங்கையின் பொருளாதாரமும்

அசிட அபேசிங்க

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஏனைய காணியில் கஜூம் பயிர் செய்யப்பட்டன. 1989 யால போகத்தில் மிளகாய் 140 ஹெக்டயார்களிலும், கௌபி, பயறு, பெரிய வெங்காயம் என்பன 85 ஹெக்டயார்களிலும் பயிரிடப்பட்டன. இந்தப் பயிர்ச் செய்கையில் 9,842 விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வளைகுடா நெருக்கடியினால் குவைத்திலிருந்து வந்து சேர வேண்டிய 35 இலட்சம் குவைத் தினார்கள் வந்து சேர்வதற்கு அநேகமாக வாய்ப்பில்லை. இந்தப் பற்றாக்குறை பிறிதொரு மூலத்தைக் கொண்டு நிரப்பப்பட முடியும். ஒரு நாடு என்ற முறையில் குவைத் ஒழிக்கப்பட்டு, ஈராக் அதனை தனது மாகாணமொன்றாக கருதும் பட்சத்தில் குவைத் தினார் கடனை ஈராக்கிற்கு திருப்பிச் செலுத்தவேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இல்லை.

## தேயிலை ஏற்றுமதிகள்

இலங்கையில் சுமார் 223,000 ஹெக்டயார் நிலப்பரப்பில் தேயிலை பயிரிடப்படுகிறது. 1989ல் தேயிலை உற்பத்தி 20 கோடியே 70 இலட்சம் கிலோகிராம்களாகும். மொத்த உற்பத்தியில் உயர் நிலத் தேயிலை 35.7% ஆகவும், தாழ் நிலத் தேயிலை 40.04% ஆகவும், நடு நிலத் தேயிலை 24.15% ஆகவும் இருக்கின்றது. சுமார் 20 கோடியே 42 இலட்சம் கிலோ கிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. ஏற்றுமதிச் சம்பாத்தியம் 1866.8 கோடி ரூபாவாகும். மொத்த ஏற்றுமதிகளில் 58% (1989) மத்திய கிழக்குக்குச் செல்கிறது. இது பெறுமதியில் 55 சத வீதமாகும். இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 12-16% ஐ ஈராக் பெற்றுக் கொள்கிறது. இது மொத்த ஏற்றுமதிப் பெறுமதியில் 10-13 சத வீதமாகும். குவைத் எமது ஏற்றுமதிகளில் சுமார் 1.4 சத வீதமான தேயிலையைப் பெற்று வந்தது. இது பெறுமதியில் சுமார் 2.1 சதவீதமாகும். ஆயினும், வர்த்தகத் தடையின் விளைவாக 1 கோடியே 72 இலட்சம் கிலோகிராம் தேயிலைக்கான கேள்வி வீழ்ச்சியடையும். மொத்த தேயிலை ஏற்றுமதி

**அட்டவணை 2**

**எண்ணெய் இறக்குமதிகள்**

| நாடு | வருடாந்த இறக்குமதி (மில்லியன் டொலர்களில்) | மொத்த எரிபொருள் இறக்குமதிகளின் சதவீதம் |
|---|---|---|
| பிரேசில் | 323 | 53 |
| சிலி | 41 | 90 |
| ஐக்கிய அமெரிக்கா | 2421 | 45 |
| ஜேர்மனி | 574 | 27 |
| பிரான்ஸ் | 482 | 36 |
| இத்தாலி | 461 | 23 |
| நெதர்லாந்து | 352 | 34 |
| ஸ்பெயின் | 333 | 37 |
| பெல்ஜியம் | 172 | 39 |
| கனடா | 104 | 36 |
| செக்கோஸ்லோவாக்கியா | 130 | 39 |
| போலந்து | 177 | [illegible] |
| ஹங்கேரி | 62 | 82 |
| துருக்கி | 151 | [illegible] |
| தென் கொரியா | 261 | 20 |
| சிங்கப்பூர் | 252 | 30 |
| இந்தியா | 132 | 36 |
| சிம்பாப்வே | 74 | 37 |

**அட்டவணை 3**

**ஈராக், குவைத் என்பவற்றின் பிரதான இறக்குமதியாளர்கள்**

| மொத்த எரிபொருள் இறக்குமதி | % ஈராக்கிலிருந்து | % குவைத்திலிருந்து |
|---|---|---|
| பிரேசில் | 32% | 3% |
| பிரான்ஸ் | 3% | 0 |
| இத்தாலி | 12% | – |
| நெதர்லாந்து | | 14% |
| ஸ்பெயின் | 10% | |
| பெல்ஜியம் | 8% | |
| துருக்கி | – | 6% |
| தென்கொரியா | – | 4% |
| சிங்கப்பூர் | – | 2% |
| இந்தியா | 20% | |
| சிம்பாப்வே | | 10% |

மூலம்: ஆசியன் வோல் ஸ்ரீட் ஜேர்னல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானத்தில் 15% வீழ்ச்சி ஏற்படும். இராக்கிற்கு ஏற்றுமதி செய்யும் தேயிலையிலிருந்து கிடைக்கும் வருமானம் 140 கோடி ரூபாவாகும். இதனால் நாங்கள் புதிய சந்தைகளைக் கண்டறிய வேண்டியிருக்கின்றது.

வளைகுடா நெருக்கடி எமது பேரண்டப் பொருளியல் அபிவிருத்தியில், சந்தேகமின்றி தாக்கங்களை ஏற்படுத்தி வரும். அது எமது வெளி நாட்டுச் செலாவணிச் சம்பாத்தியங்களைக் குறைத்து, அதன் மூலம் நாட்டின் ஏற்றுமதி ஆற்றலைப் பலவீனப்படுத்தும். சென்மதி நிலுவையும் பாதிப்புக்குள்ளாகும். எண்ணெய் விலைகளில் ஏற்படும் அதிகரிப்பு போக்குவரத்து மற்றும் உற்பத்திச் செலவுகளை உயர்வடையச் செய்யுமாதலால், வாழ்க்கைச் செலவுகளும் உயர்ந்து செல்லும். இலங்கையில் வடக்கு கிழக்கு யுத்தத்தின் செலவுகளின் பின்னணியில் தோன்றும் பொது வளைகுடா நெருக்கடி பெரு நட்டத்தையே ஏற்படுத்தி வரும். 1991ன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 9% ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 1990ல் 10% ஆக இருந்தது. 1991ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு 14900 கோடி ரூபாவாகும். வருமானம் 8200 கோடி ரூபாவாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதால் 6700 கோடி ரூபா வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ஏற்படும். இந்த இடைவெளியில் ஒரு பகுதி வருமானத்துக்கூடாகவும், எஞ்சிய பகுதி வெளிநாட்டு உதவி மற்றும் கடன்கள் மூலமும் நிரப்பப்படுதல் வேண்டும்.

ஆகவே, வளைகுடா நெருக்கடி தேயிலை வருமானங்களில் வீழ்ச்சியை ஏற்படுத்தி வருமானம் வரவு - செலவு இடைவெளி மேலும் விரிவடையும். மேலும் குவைத்திலிருந்த 100000 இலங்கையரும், இராக்கிலிருந்த 35,000 இலங்கையரும் அனுப்பிவந்த அந்நியச் செலாவணி வருமானமும் பாதிக்கப்படும். குவைத்துக்கும் இராக்குக்குமான ஏனைய பாரம்பரிய ஏற்றுமதிகளும் தடைப்பட்டு அவ்வுத்துறைகளில் பிரச்சினைகள் உருவாகும்.

## தொழில் புரிவோர் அனுப்பும் பணம்

தேறிய தனியார் மாற்றுக்கள் 1989ல் 1061.4 கோடி ரூபாவாக இருந்தன. வெளிநாடுகளில்

அட்டவணை 1

மத்திய கிழக்குக்கான தேயிலை ஏற்றுமதி

| நாடு | அளவு (மில்லியன் கி.கி.) | | | | மொத்த அளவின் % | | | | பெறுமதி (ரூ. மில்லியன்) | | | | மொத்த பெறுமதியின் வீதம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 | 1988 | 1989 | 1986 | 1987 | 1988 | 1989 | 1986 | 1987 | 1988 | 1989 | 1986 | 1987 | 1988 | 1989 |
| இராக் | 27.7 | 29.7 | 34.5 | 24.1 | 11 | 15 | 15 | 10 | 822 | 1382 | 1527 | 1408 | 8.7 | 12.9 | 8.2 | 10.2 |
| ஐ.அ.இ. | 40.4 | 27.7 | 55.4 | 33.8 | 19 | 10.7 | 15 | 15 | 1471 | 1830 | 1480 | 1971 | 14.05 | 17.81 | 15.3 | 14.[illegible] |
| சவூதி அரேபியா | 18.5 | 14.4 | 14.5 | 11.9 | 8.2 | 7.2 | 6.2 | 5.4 | 787 | 974 | 1071 | 1061 | 8.8 | 9.[illegible] | 8.[illegible] | 8.0 |
| சிரியா | 13.4 | 9.6 | 11.4 | 10.[illegible] | 6.4 | 4.0 | 5.[illegible] | 4.3 | 486 | 536 | 517 | 478 | 5.0 | 5.7 | 4.[illegible] | 3.4 |
| ஈரான் | 10.2 | 15.9 | 12.3 | 12.5 | 4.8 | 7.9 | 5.5 | 5.2 | 419 | 8[illegible]4 | 722 | 880 | 4.4 | [illegible] | 5.5 | 6.5 |
| ஜோர்தான் | 4.4 | 3.5 | 5.1 | 4.4 | 2.1 | 1.9 | 2.3 | 1.8 | 238 | 224 | 311 | 330 | 2.[illegible] | 2.1 | 2.8 | 3.0 |
| குவைத் | 3.1 | 3.1 | 3.1 | 3.0 | 1.5 | 1.7 | 0.9 | 1.6 | 173 | 140 | 113 | 214 | 1.9 | 1.4 | 1.2 | 2.1 |
| லெபனான் | 4.[illegible] | 4.7 | 5.2 | 4.5 | 1.9 | 2.2 | 2.5 | 2.8 | 159 | 287 | 3[illegible]4 | 252 | 1.6 | 1.9 | 2.5 | 1.8 |
| லிபியா | — | — | 7.3 | 6.4 | — | — | 3.3 | 3.8 | — | — | 423 | 448 | — | — | 3.5 | 3.2 |
| ஏனையவை | 8.2 | 7.8 | 9.2 | 6.4 | 4.1 | 3.9 | 4.2 | 4.1 | 374 | 485 | 484 | 520 | 4.05 | 2.87 | 3.4 | 4.8 |
| கூட்டு மொத்தம் | 207.6 | 201.1 | 249.8 | 234.2 | 100.0 | 100.0 | 100 | 100 | 9253 | 1[illegible]535 | 122[illegible] | 9861 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

ஆதாரம்: மத்திய வங்கி

அட்டவணை 2

வர்த்தகப் போக்கு

| | ஏற்றுமதிகள் | | | | | இறக்குமதிகள் (ரூ. மில்லியன்) | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
| இராக் | 1468.5 | 842.9 | 1814.0 | 1627.8 | 1406.8 | 2.3 | 101.2 | 123.5 | 26.6 | 156.5 |
| குவைத் | 361.2 | 215.4 | 106.9 | 200.3 | 332.9 | 242.0 | 98.4 | 116.5 | 190.2 | 190.1 |

ஆதாரம்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

தொழில் புரியும் இலங்கையர் அனுப்பும் பணத்தையே இது பிரதானமாக கொண்டிருக்கிறது. ஈராக்கிலும் குவைத்திலும் சுமார் 125,000 இலங்கையர்கள் தொழில் புரிகிறார்கள். இவர்களில் சுமார் 75,000 - 80,000 பேர் வீட்டுப் பணிப்பெண்களும் சாரதிகளுமாவர். அவர்களிடமிருந்து வருடாந்தம் கிடைக்கும் தொகை சுமார் 300 கோடி ரூபா அளவில் இருக்கும். இந்த வரும்படியில் ஏற்படும் கணிசமான வீழ்ச்சி நிச்சயமாக எமது வெளிநாட்டு ஒதுக்குகளைப் பாதிக்கும். பின்வருவனவற்றில் இது மோசமான தாக்கங்களை எடுத்து வரும்,

(1) சென்மதி நிலுவை

(2) நகர சொத்துக்கள் மற்றும் மெய் ஆதனச் சந்தை

(3) தங்கியிருக்கும் குடும்பங்கள்

(4) தங்கியிருக்கும் குடும்பங்களின் கொள்வனவுச் சக்தி

(5) நாடு திரும்புபவர்கள் எதிர் நோக்கவுள்ள பிரச்சினைகள்

இலங்கை சுமார் 871 கோடி ரூபா பெறுமதியான பெட்ரோலியத்தை வருடாந்தம் இறக்குமதி செய்கிறது. இது எமது இறக்குமதிச் செலவின் 10-14% வரையில் இருக்கிறது.

பெட்ரோலிய இரசாயனப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட உரவகைகளும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அவற்றின் விலைகளும் உயர வாய்ப்பிருக்கிறது. இந்த உரவகைகளின் இறக்குமதி விவரம் அட்டவணை 7ல் தரப்பட்டுள்ளது

இலங்கைக்கான மசகெண்ணெய் இறக்குமதி விபரம் 6இல் தரப்படுகிறது.

இலங்கைக்கான பிரதான மசகெண்ணெய் மூலம் ஈராக் நாடாகும். இது இலங்கையின் சுத்திகரிப்பாலைக்கு பண்டமாற்றுச் செய்யப்படுகிறது. இதனால், இலங்கை வேறு வழங்கல் மூலங்களைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அட்டவணை 6 இலங்கையின் பெட்ரோலிய இறக்குமதிகள்

| வருடம் | பெறுமதி (ரூ. பத்து இலட்சம்) | பெறுமதி (எஸ். டி. ஆர். பத்து இலட்சம்) | மொத்த இறக்குமதியில் % |
|---|---|---|---|
| 1987 | 87.116 | 126.7 | 14.4 |
| 1988 | 7,839 | 103.3 | 11.0 |
| 1989 | 8,376 | 181.3 | 10.4 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 7 உர இறக்குமதிகள்

| வருடம் | பெறுமதி (ரூ. பத்து இலட்சம்) | பெறுமதி (எஸ். டி. ஆர். பத்து இலட்சம்) | மொத்த இறக்குமதியில் % |
|---|---|---|---|
| 1987 | 1,209 | 36.1 | 2.1 |
| 1988 | 2,476 | 57.9 | 3.5 |
| 1989 | 1,755 | 130.9 | 2.2 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

### ஏனைய இறக்குமதிகள்

வளைகுடா நெருக்கடி நுகர் பொருள், நடுத்தரப் பொருள், மூலதனப் பொருள் என்பவற்றின் இறக்குமதிகளில் பிரச்சினைகளை எடுத்து வரும். ஏனெனில், இப் பொருட்களை எமக்கு வழங்கும் நாடுகள் இந்நெருக்கடியினால் பெருமளவுக்கு பாதிப்படைந்துள்ளன. இந்நாடுகளின் உற்பத்திச் செலவுகள் உயர்ந்து சென்றிருக்க முடியும். அத்துடன் எரிபொருள் விலையேற்றங்கள், கப்பற்படுத்தல் மற்றும் கையாளல் செலவுகளில் பிரதிபலிக்கும். அதன் விளைவாக இறக்குமதிச் செலவுகள் உயர்ந்து பணவீக்கம் மேலும் மோசமடையும். இறக்குமதிகளில் 25.1% நுகர் பொருட்களாகும். இதில் உணவுப் பொருட்களும் பானங்களும் 18.4 சதவீதமாக இருக்கின்றன. நடுத்தரப்பொருட்கள் 56.8% ஆகும். இதில் பெட்ரோலியம் (10.4%), புடவை, உடுதுணி (12.4%), கோதுமை (6.2%) என்பவற்றின் விலைகள் உயரும். இவற்றின் இறுதி விளைவாக விலைவாசிகள் உயர்ந்து வாழ்க்கைத் தரங்களில் சீரழிவு ஏற்படும்.

### சுற்றுலாத்துறை

இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழில் 1988ம் ஆண்டின் பின்னர் வீழ்ச்சிப்போக்கொன்றினைக் காட்டி வந்துள்ளது. தற்போழுது வடக்கு-கிழக்கில் நடைபெற்று வரும் யுத்தம் இப்போக்கினை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. இதில் 1989லும் 1990 இலும் ஓரளவுக்கு முன்னேற்றம் காணப்பட்டது. வளைகுடா யுத்தம் இதனை மேலும் மோசமாக்கும். விமானக் கட்டணங்களும், கப்பல் கட்டணங்களும் உயர்விருக்கின்றன. போக்குவரத்து, ஹோட்டல் மற்றும் உணவுக் கட்டணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 6

மசகெண்ணெய் இறக்குமதிகள்

| | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|---|---|
| அளவு மில்லியன் | | | | | | | |
| பீப்பாய் கொள்ளளவு | 17 | 15 | 13 | 12 | 13 | 14 | 9 |
| ரூ. மில்லியன் இறக்குமதி | 7,837 | 9,542 | 9,136 | 5,296 | 78,121 | 6,756 | 5,836 |
| பீப்பாய் ஒன்றுக்கான விலை - ரூபா | 714 | 751 | 777 | 429 | 544 | 404 | 624 |

ஆதாரம்: இலங்கைச் சுங்கம்

போன்ற இது தொடர்பான உல்லாசப் பிரயாணத்துறையும் அதிகரிக்கலாம். 1989ல் இங்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 101,910 ஆகும். இது இவ்வாண்டில் 80,000 – 90,000 அளவில் வீழ்ச்சியடைய முடியும். 1988ல் சுமார் 875 கோடி ரூபாவாக இருந்த சுற்றுலாத்துறை மூலமான வருமானம் இவ்வாண்டில் சுமார் 800 கோடி ரூபா வரையில் வீழ்ச்சியடைய முடியும்.

(29 ம் பக்கத் தொடர்ச்சி)

மூலதனம் (ரூ 100 கோடி) அரசாங்கத்தை மறுசீரமைப்புச் சாத்தியத்துக்குள்ளான விற்பனை செய்வதன் மூலமும் (ரூ. 500 கோடி) பெறப்பட்டுத் தவணை வருகின்றது.

இதேவேளையில், கொழும்பு பங்குச் சந்தையும் பல பிரச்சினைகளைச் சந்தித்தது. வளைகுடா நெருக்கடி காரணமாக, பங்குகளில் பணத்தை முதலீடு செய்வதில் வெளிநாட்டு நிதி முதலீட்டாளர்கள் தயக்கம் காட்டியமை இதற்கான காரணமாகும். பெற்றோலியப் பொருட்களின் விலையதிகரிப்பினை அடுத்து அனைத்துப் பொருட்களினதும் கூட்டு மொத்த சந்தை விலைகள் துரிதமாக உயர்ந்து சென்றுள்ளன. இது உள்நாட்டுச் சேமிப்பை மட்டுமொப்பாக பாதித்துள்ளது. இதன் விளைவாக 1991ல் உள்நாட்டுச் சேமிப்பு வீதம் மேலும் வீழ்ச்சியடைய முடியும். (இது 1987ல் 16% ஆகவும், 1988ல் 14.5% ஆகவும், 1989ல் 11.0% ஆகவும் இருந்தது.)

வாழ்க்கைச் செலவுப் புள்ளியின் தொடர்ச்சியான அதிகரிப்புக்கு பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. 1976ல் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 200 ஆக இருந்தது. கடந்த அக்டோபரில் இது 1,028 புள்ளிகளாக பதிவாகியது. அதாவது, 500% அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆறாண்டுக்கும் ஒருமுறை இச்சுட்டெண் இரண்டு மடங்காக உயர்ந்து வந்திருக்கிறது என்பதனை இது காட்டுகிறது. 1986 - 89 காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியில் முறையே 8%, 5% 7% என அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன. இவ்வாண்டில் இது 15% ஆல் அதிகரித்து வருகிறது.

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை நிரப்புவதற்காக கடனாக அல்லது கொடைகளாக கிடைத்த பணத்தின் பங்கீடு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் உயர் அளவிலான நுகர்வு (மொத்த நுகர்வில் 85%) என்பன பிரதானமாக, பணவீக்க அதிகரிப்புக்கு

பாக விலைப் பிரயோகிக்கப்பட்டுள்ளன. இது 1991ல் மேலும் தீவிரமடையும். ஏனெனில் வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு நாளொன்றுக்கு 13 கோடி ரூபா செலவு ஏற்படுகிறது. அத்துடன், வளைகுடா நெருக்கடி காரணமாக நாளொன்றுக்கு 1 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டு வருகிறது.

அட்டவணை 3

வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை 1984-1990 (ரூ. மில்லியன்)

| | | |
|---|---|---|
| 1984 | | 5,6[illegible] |
| 1985 | | 25,575.7 |
| 1986 | | 25,070.6 |
| 1987 | | 27,241.7 |
| 1988 | | 43,240.8 |
| 1989 | (திருத்தப்பட்டது) | 42,056.0 |
| | (உண்மையானது) | 34,627.0 |
| 1990 | | 40,342.0 |
| 1991 | (மதிப்பீடு) | 67,000.0 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

இறக்குமதிப் பொருட்களின் விலைகள் 1989ல் 800% ஆல் அதிகரித்துள்ளன, கால்நடைகள், பிளாஸ்டிக்குகள், ரைஸ் குக்கர்கள், விசிறிகள், வானொலிப் பெட்டிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் இயந்திரங்கள், ஆடம்பரப் பொருட்கள் போன்ற அவசியமான வீட்டுப் பாவனைப் பொருட்களின் விலைகள் இக்காலப்பகுதியில் 200% ஆல் உயர்ந்துள்ளன. உணவுப் பொருட்களின் விலைகளும் இதே மாதிரியான அதிகரிப்பினைக் காட்டுகின்றன.

இந்த விலையதிகரிப்புக்கள் விசேடமாக வெளிப்படையாக தெரியவில்லை. எண்ணெய் விலைகள் 20% ஆல் அதிகரித்த போது, வர்த்தகர்களும், இறக்குமதியாளர்களும் தாமாக பொருட்களின் விலைகளை 40% ஆல் உயர்த்தினர்.

எவ்வாறெனினும், வடக்கு கிழக்கு நிலைமை நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒப்பீட்டளவில் தொடர்ந்து நிலைமை மீண்டும் தொடர்ந்து விருப்பத்துக்குரிய 1990 1991 ஆகிய வருடங்களில் ஓரளவுக்கு பொருளாதார வளர்ச்சியை நாம் எதிர்பார்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு பெற்றது.

"தனியார்துறை அதிகளவுக்கு முதலாளித்துவம்
சார்ந்தது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.
ஆனால், பொது மக்களில்
பெருந்தொகையானோருக்கு திறந்து விடப்படாத,
கட்டுப்படுத்தப்பட்ட தனியார் முதலாளித்துவமாக
அது இருக்கிறது."

மிக் மூர்
இலங்கையின் முதாளித்துவம் : சீர்திருத்தத்துக்கும்,
சீரமைப்புக்குமான தெரிவுகள்

பிரதி விலை: ரூ. 10/-
வருட சந்தா: ரூ. 120/-

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பிரிவு வெளியீடு

உரிய முறையில் 'பொருளியல் நோக்கின்' பெயரை குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப்பிரசுரிக்கவோ முடியும்.

Printed by Sumathi Publishers, No. 445/1, Sirimavo Bandaranayake Mawatha, Colombo 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org